
# திருக்கோயில்

ஜனவரி & பிப்ரவரி 1995
விலை ரூ. 6-00





மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் தைப்பூசத் தெப்ப விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு **நடேசன் பால்ராஜ்** அவர்கள், ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர், ஐ.ஏ.எஸ் அவர்கள், சென்னை மாவட்ட திருக்கோயில் நிர்வாக வாரியத் தலைவர் திருமிகு கராத்தே வெ. பாலசுப்பிரமணியம், எம்.எல்.ஏ. அவர்கள், அறங்காவலர் குழுத்தலைவர் திருமிகு டாக்டர் நல்லி குப்புசாமி அவர்கள் மற்றும் ஆலய நிர்வாக அதிகாரியும் துணை ஆணையாளருமான திரு ப. ராஜா பி.எஸ்சி.பி.எல். ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

முகப்பு:

குமரன்குன்றம்
அருள்மிகு சுவாமிநாத சுவாமி

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 8279407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.

| மாலை | திருவள்ளுவர் ஆண்டு 2026 பவ ஆண்டு தை-மாசி | மணி |
|---|---|---|
| 37 | 1995 ஜனவரி-பிப்ரவரி விலை ரூ. 6-00 | 1 & 2 |

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்.

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

உயர்திரு **ஆணையர்** அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை—600 034

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

## பொருளடக்கம்

திருக்கோயில் நிர்வாக வாரியக் கூட்டம்

திருமுறை இசையின் பெருமை
—கே. கே. இராஜா எம்.ஏ. பி.எல்.

திருப்பரங்குன்றம்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

நாலாயிர திவ்வியப் பிரபந்தம் எண்ணிக்கை ஒரு விளக்கம்—இராமானுஜம்

தவநெறி ஆளுடையார்
—வ. ஜோதி எம்.ஏ.

சுந்தரர் வழங்கிய ஆன்மீகச் செல்வம்
—ச. முத்துசாமி எம்.ஏ., பி.எட்.

பன்னிரு ஆழ்வார்கள்
—டாக்டர் பருத்தியூர் சந்தானராமன்

பவஆண்டு பொங்கல் வாழ்த்து
—புலவரேறு ஆ.ஜெ. இராமசாமி

பேரின்பம்
—இளையஞானி

கடவுளை நம்பு
—கவிஞர் அ. சுப்பையன்

வளைந்தும் நிமிர்ந்தும் வகை செய்தபிரான்
—புலவர் பா. சிவநேசன்

திருவீழிமிழலை
—புலவர் பொன். திருக்கண்ணபுர சுப்பிரமணியன்

நாலாயிர திவ்வியப் பிரபந்த நயவுரை
—டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்

அலங்கார நாயகன்
—இராமகதா வே. தியாகராஜன்

மனோவிருத்திச் செலவு
—டி.என்.எஸ். முருகதாஸ்தீர்த்தபதி

பதினெண்புராணச் சுருக்கம்
—ஸ்ரீவத்ஸ. சோமதேவ சர்மா

கடவுள் யார்?
திருமிகு ச. சாவர்க்கர், ஐ.ஏ.எஸ்.



# திருக்கோயில் நிர்வாக வாரியக் கூட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையில் தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியக் கூட்டம் 23.1.95 நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அனைத்துஉறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள். இந்தக் கூட்டம் சுமார் 2 மணி நேரம் நடைபெற்றது.

1966-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட தமிழ் நாடு தெய்வீகப் பேரவை 1976-ஆம் ஆண்டி லிருந்து செயல்படாமல் இருப்பதால் அந்த அமைப்பைக் கலைத்து விடுவதற்கான செயற் குறிப்பு வாரியத்தின் முன் வைக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த தமிழ் நாடு தெய்வீகப் பேரவை என்ற அமைப்பிற்கு புத்துயிர் ஊட்டி புதிய நிர்வாக உறுப்பினர் களை நியமனம் செய்து திருக்கோயில்களில் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நாலாயிர திவ்வியப் பிரபந்தம், புராணங்கள், மந்திரங்கள் போன்றவற்றைக் கற்பிப்பதற்கான ஒரு புதிய பணியை மேற் கொள்ள வேண்டும் என்ற கருத்தை தெரிவித்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் கருத்தை நிர்வாக வாரியத்தின் அனைத்துஉறுப்பினர்களும் ஏகமன தாக ஏற்றுக்கொண்டு இந்தமுடிவை எடுத்ததற் காக முதலமைச்சருக்குத் தங்களதுநெஞ்சார்ந்த நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

முதல் கட்டமாக தமிழகத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சி களில் அமைந்துள்ள மிக முக்கியமான கோயில் களைத் தேர்ந்தெடுத்து பொதுவான பாட திட் டத்தை அமைத்து அவற்றை அந்தத் திருக் கோயில்களுக்கு வருகின்ற மாணவ, மாணவியர் களுக்கு ஞாயிற்றுக்கிழமை போன்ற ஒரு ஓய்வு நாளில் கற்றுத் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

கற்க வருகின்ற மாணவ மாணவியர் களுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில் இந்த வகுப்புகள் நடத்தப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கேட்டுக் கொண்டார். வருகின்ற தமிழ் புத்தாண்டு தினத்தன்று இந்த முதல் கட்டப் பணி ஆரம்பிக்கப்படுவதற்கான அனைத்து ஆயத்த பணிகளையும் மேற்கொள்ள வேண்டும் என இந்து சமய அறநிலையத்தின ருக்கு ஆணையிட்டார்.

மேலும் சென்னையை அடுத்த முட்டுக் காடு அருகே ஒன்றரை கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட உள்ள தென்னிந்திய திருக் கோயில் அருங்காட்சியகத்தின் வடிவம் திருக் கோயில் நிர்வாக வாரியத்தினரின் பார் வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்பட்டது. இந்தப் புதிய கட்டிடத்திற்கான வடிவமைப்பு ஆகம விதிகளுக்குட்பட்டு அமைக்க வேண் டும் என்றும், விரைவில் கட்டுமானப்பணி துவக்கப்பட வேண்டும் எனவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்தார்கள்.

வாரிய உறுப்பினர்களின் கருத்துக்களைப் பெற்று அதன்படி பாரம்பரியம் மிக்க திருக் கோயில்களில் உள்ள தேர், அணிகலன்கள், வாக னங்கள், விளக்குகள், மணிகள், பூஜைப்பொருட் கள் போன்றபல்வேறு பொருட்களைச்சேகரித்து ஒரே இடத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்க வேண்டும் என ஆணையிட்டார்கள். மேலும் இந்த அருங்காட்சியகத்தை அமைப்ப தற்குத் தேவையான ஒன்றரை கோடி ரூபாய் நிதியைஉபரி நிதி வைத்து இருக்கின்ற கோயில் களில் இருந்து பெற்றுக் கொள்வதற்கும் வாரியம் ஒப்புதல் அளித்தது.

சிதம்பரனார் மாவட்டம். தென்திருப்பேரையில் அமைந்துள்ள அருள்மிகு மகர நெடுங்குழைக்காதர் திருக்கோயிலுக்குப்புதிதாக மின் இணைப்பை ஏற்படுத்தி அவற்றிற்கான திருப்பணியை மேற்கொள்ள பொது நல நிதியிலிருந்து 1,30,000 ரூபாய் வழங்குவதற்கு திருக்கோயில் நிர்வாக வாரியம் ஒப்புதல் அளித்தது.

செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் திருவள்ளூர் வட்டம் எலப்பாக்கத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில் திருப்பணிக்காக பொது நல நிதியிலிருந்து 1,25,000 ரூபாய் வழங்கி ஆணையிடப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம் செங்கோட்டை நகரில் உள்ள குலசேகரநாதசுவாமி திருக்கோயில், மதுரை மதனசுவாமி திருக்கோயில், ஸ்ரீபெரும்புதூர் அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில் ஆகிய கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்வதற்கு திருப்பணிகுழுக்கள் நியமனம் செய்யப்பட்டது.

திருக்கோயில்களின் விதிகளுக்குப் புறம்பாக, சில நேரங்களில் திரைப்படப் படப்பிடிப்புகள் மேற்கொள்ளப்படுவதைத்தடுத்து நிறுத்த வேண்டும் என வந்துள்ள சில கோரிக்கைகள் திருக்கோயில் நிர்வாக வாரியத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

தமிழக முதலமைச்சர் இனிமேல் தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் படப்படிப்பு நடத்த வேண்டும் என்றால் குறிப்பிட்ட சில காட்சிகளுக்கு மட்டுமே, குறிப்பிட்ட பகுதிகளில் குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே அனுமதி வழங்கப்படும் என்றும், அந்த அனுமதியை வழங்கும் உரிமையும் அந்தந்த கோயில் நிர்வாகத்திற்கே வழங்கப்படும் என்றும் கருத்து தெரிவித்தார்கள்.

திரைப்பட படப்பிடிப்பிற்கான கட்டணத் தொகையும் அந்தந்த கோயில்களுக்குச் சேரும் வகையில் விரைவில் ஆணை பிறப்பிக்க வேண்டும் எனவும் ஆணையிட்டார்கள். திருக்கோயில்களில் திரைப்படப் படப்பிடிப்பு மேற்கொள்வதற்குக் கடைபிடிக்க வேண்டிய பொதுவான விதிமுறைகளை விரைவில் வரையறை செய்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்தார்கள்.

இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

***தமிழ்நாடு தெய்வீகப் பேரவை புதுப்பிக்கப்பட்டமைக்கு ஸ்ரீ வைணவ மகாசங்கம் உள்ளிட்ட பல ஆன்மீக அமைப்புகள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்குப் பாராட்டுக்கள் தெரிவித்துக்கொண்டுள்ளன.***

---

## மிகப் பழமையான இசை நூல்களைத் தொகுத்து வெளியிடுவோம்

மிகப் பழமையான இசைப் பாடல்களையும், கீர்த்தனைகளையும் தொகுத்து அப்பண்களின் சுரம், தாளம் ஆகியவைகளைப் புத்தகங்களாக வெளியிடுவதற்கு, மாண்புமிகு முதல்-அமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:

மாண்புமிகு தமிழக முதல்-அமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தமிழ் மொழியில் பல்வேறு இசை வல்லுனர்கள் அருளித் தந்த கீர்த்தனைகளைப் புத்தக வடிவில் அச்சிட்டு, இசை பயில்வோருக்கு வழங்குவதற்கும்,எதிர்கால சந்ததியினர் தமிழ் இசையின் பெருமையை உணர்வதற்கும் வழி வகுக்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள்,

காரைக்கால் அம்மையாரின் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் அருளிச் சென்ற தேவாரத் திருப்பதிகங்கள், ஆழ்வார்களின் திவ்விய பிரபந்தப் பாசுரங்கள், அருணகிரிநாதரின் திருப்புகழ், சீர்காழி முத்துத்தாண்டவர், அருணாசலக் கவிராயர், மாரிமுத்தாப் பிள்ளை ஆகியோரின் இசைப் பாடல்களும் குறிப்பிடத் தக்கவையாகும். இந்திய இசை வரலாற்றிலேயே ராக, தாள அமைப்புகளுடன் கூடிய பண்களில் மிகவும் பழமையானது தேவாரம் ஆகும். அவை இசை வடிவங்களுடனேயே தோன்றின.


தென்னக இசையின் தாய் காரைக்கால் அம்மையார் முதன் முதலில் பண் மற்றும் வர்ண மெட்டுக்களோடு கூடிய பாடல்களுடன் வழங்கிய ‘திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள்’ ‘அற்புத திருவந்தாதி’ ‘திருவிரட்டை மணிமாலை’ ஆகிய நூல்கள், திராவிட இசைக்கு அடிப்படையாக விளங்குகின்றன. காரைக்கால் அம்மையார்தான் ‘இந்தளம்’ ‘நட்டபாடை’ ஆகிய பண்களைத் திராவிட இசைக்கு வழங்கியவர் ஆவார்.

பழம்பெரும் இசைப் பாடல்களையும் கீர்த்தனைகளையும் தொகுத்து, அப்பண்களின் சுரம், தாளம் ஆகியவைகளைப் புத்தகங்களாக வெளியிடுவதற்கு, தமிழ்நாடு அரசின் இசைக் கல்லூரியின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தமிழக முதல்-அமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். அவ்வாறு அப்பாடல்களை புத்தக வடிவில் வெளியிடுவதன் மூலம், வருங்கால சமுதாயத்தினருக்கு மிகப் பழமையான இசைப் பாடல்கள் கிடைக்கின்ற வாய்ப்பு ஏற்படும் என்பதால், இத்திட்டத்தினை விரைவில் செயல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்-அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள்..

# திருமுறை இசையின் பெருமை

கே. கே. இராஜா

இணை ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34.



இறையருள் பொலியும் திருக்கோயில்களால் மட்டுமல்ல, இறையருள் நிறைந்த சான்றோர்களாலும் பெருமை பெற்றது நம் தமிழ்த் திருநாடு. 'அவனருளால் அவன் தாள் வணங்கி' என்பார் மாணிக்கவாசகர். இறைவன் அருளால், இறையருள் பெற்ற ஞானியர்கள், எல்லோரும் இன்புற்று வாழ்வதற்கென்றே அருள் நூல்கள் பலவற்றை அருளியுள்ளார்கள். அந்த இறையருள் நூல்களைத் தான் பன்னிரு திருமுறை என்று போற்றி வருகிறோம்.

பன்னிரு திருமுறைகளில் முன் நிற்பது 'பாலறாவாயர்' என்று சான்றோர்கள் சிறப்பிக்கும் தமிழ் ஞானசம்பந்தராம் திருஞானசம்பந்தர் அருளிய 384 பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகள் ஆகும்.

அடுத்து திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய 313 பதிகங்கள் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாக விளங்குகின்றன.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய 100 பதிகங்கள், ஏழாம் திருமுறையாக விளங்குகின்றது.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாகும்.

திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர் முதலான ஒன்பது அருளாளர்கள் அருளிய பக்திப்பனுவல்கள் ஒன்பதாம் திருமுறையாகும்.

சித்தர் திருமூலர் அருளிய மூவாயிரம் திருமந்திரங்கள் பத்தாம் திருமுறையாகும்.

திருவாலவாயுடையார், காரைக்கால் அம்மையார், பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பி போன்ற அருளாளர்கள் பன்னிருவர் அருளிய தெய்வ நூல்கள் பதினோராம் திருமுறையாகும்,

'தெய்வச் சேக்கிழார்' அருளிய திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகும்.


திருஞானசம்பந்தரின் முதல் திருமுறை 'தோடுடைய செவியன்' என்று தொடங்குகின்றது. சேக்கிழாரின் பன்னிரண்டாம் திருமுறை 'உலகெலாம்' என்று நிறைவு பெறுகிறது. இறைவனுடைய திருவருளே உலகம் என்பதைத் தான் நமக்குத் திருமுறைகள் உணர்த்துகின்றன.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்று கடவுள் ஒருவரே என்று பறைசாற்றுகின்றன நம்முடைய திருமுறைகள். 'அன்பே சிவம்' என்று திருமூலர் அன்பிருக்கும் இடமே இறைவன் இருக்கும் இடம் என்று தெளிவுபடுத்துகின்றார்.

பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான் விவரிக்கிற 63 நாயன்மார்கள் அன்பே தெய்வம் என வாழ்ந்தவர்கள். அவர்களிலே வேந்தர்கள் உண்டு. வேடுவரும் உண்டு. அவர்களிலே அந்தணர்கள் உண்டு. பாணரும் உண்டு. ஆனால் இனம் காரணமாக, செல்வம் காரணமாக, தொழில் காரணமாக யாரையும் யாரும் சிறுமைப்படுத்தியது இல்லை.

'எந்நிலையில் நின்றாலும்
எக்கோலம் கொண்டாலும்'

அடியார்கள் அனைவருமே சமம் என்று நமக்குத் திருமுறைகள் சொல்லுகின்றன.



சேரமான் பெருமான் நாயனார் ஒரு முடியுடை வேந்தர். பட்டத்து யானை மேல் வந்து கொண்டிருந்த அவர் வழியில் ஒரு ஏகாலியைக் கண்டு, மழை நீரில் நனைந்திருந்த உவர்மண், அவர் மேனிமேல் திருநீறு போல் தோன்றவே 'அடியேன் அடிச்சேரன்' என்று ஏகாலியை வணங்குகின்றார். ஏகாலியும் 'அடியேன் அடிவண்ணான்' என்று கை கூப்புகின்றான். 'வண்ணாரைப் போய் வேந்தர் வணங்குவதா?' என்று அச்சத்தோடு வண்ணான் வணங்க, 'திருநீற்றின் வாரவேடம் நினைப்பித்தீர், வருந்தாது ஏகும்' என்று கூறி, வண்ணானுக்கு வேந்தர் விடை கொடுத்து அனுப்பியதாகப் பெரியபுராணம் கூறுகின்றது.

நமக்குத் திருமுறைகள் கற்றுத் தரும் அற்புதப் பாடம்தான் மனித நேயம்.

'ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்மம் இத்தேசத்தில் எய்தினர் ஆயின்
வேதியர் ஆயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தினர் ஆயினும் ஒன்றே'

என்று இந்த இருபதாம் நூற்றாண்டில் மகாகவி பாரதியார் பாடினார். ஆனால் இதே உணர்வைத்தான் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம்முடைய திருமுறைகள் நமக்கு ஊட்டியிருக்கின்றன.

இத்தகைய சமரச உணர்வைத்தான் நமக்கு நம்முடைய திருமுறைகள் ஊட்டியிருக்கின்றன, ஊட்டி வருகின்றன. 'அன்பே தெய்வம்' 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' இந்த உணர்வுதான் இன்று நமக்கு வேண்டும், என்றும் நமக்கு வேண்டும். அந்த மெய் உணர்வைத்தான் நமக்கு நம்முடைய திருமுறைகள் ஊட்டிவருகின்றன. எல்லா சமயங்களும் இதே உணர்வைத்தான் ஊட்டி வருகின்றன.

மலைமேலே மழை நீர் பொழிகிறது. அது பல கிளைகளாகப் பிரிந்து பரந்து ஓடுகிறது. முடிவில் ஒரே இடத்தில் கடலில் போய் கலக்கிறது. அதைப் போலத்தான் சமயங்கள் பலவானாலும் அவை ஒரே பரம்பொருளைத்தான் போற்றுகின்றன.

'ஒன்று பரம்பொருள்
நாம் அதன் மக்கள்
உலகு இன்பக் கேணி'

என்று சமய ஒற்றுமையை மகாகவி பாரதி வற்புறுத்துகின்றார். இத்தகைய ஒருமைப்பாட்டு உணர்வைத்தான் நமக்கு நம்முடைய திருமுறைகளும் போதிக்கின்றன.

திருஞானசம்பந்தர் வேதியராகப் பிறந்த போதும், பிறரை வேற்றுமை கருதி விலக்கவில்லை என்பதைப் பெரியபுராணம் காட்டுகிறது. திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்ற அடியவர் அவருடன் எப்போதும் இருந்து, திருஞானசம்பந்தரின் பாடல்களுக்கெல்லாம் இசையமைத்து யாழ் மீட்டியிருக்கிறார். இன்னும் சொல்லப் போனால் அந்தணர் குலத்தில் தோன்றியவரான ஞானசம்பந்தர் திருநீலகண்ட யாழ்ப்பாணரிடம் பேசும் போதெல்லாம் அவரை 'ஐயரே' என்று மரியாதை

கொடுத்து அழைத்ததாக பெரியபுராணம் கூறுகிறது.

அதைப்போல் திருநாவுக்கரசர் வேளாளர் குலத்தில் தோன்றிய பெருந்தகை. அப்பூதியடிகள் என்ற அந்தணர் திருநாவுக்கரசரைப் பார்க்காமலும் அவர் மேல் பக்தி கொண்டு, தொண்டு புரிந்ததைப் பெரியபுராணம் கூறுகிறது. ஆகவே,

'எல்லோரும் ஓர்குலம்
எல்லோரும் ஓரினம்
எல்லோரும் இந்திய மக்கள்
எல்லோரும் இந்நாட்டு மன்னர்''

இதுதான் பெரியபுராணம் உணர்த்தும் சமுதாய அறம். பன்னிரு திருமுறைகள் உணர்த்தும் தலையாய அறம்.

இயல், இசை, நாடகம் என்று மூன்று தமிழாகச் சிறப்பது நம்முடைய தெய்வத் . தமிழ்.

இசை வடிவமாக இறைவன் விளங்குகின்றான்.

'ஏழிசையாய் இசைப் பயனாய்'

என்று சுந்தரமூர்த்தி நாயனார் பாடுகின்றார்.

'தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்' என்று திருநாவுக்கரசு சுவாமிகள் பாடுகின்றார்.

ஞானசம்பந்தரோ, 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர். மாணிக்கவாசகரின் இசையோ ஊனையும் உருக்கும். உயிரையும் உருக்கி விடும்.

இறைவன் ஞானசம்பந்தரை ஞானப் பாலைக் கொடுத்து ஆண்டான்.

நாவுக்கரசரை சூலைக் கொடுத்து
ஆண்டான்.

சுந்தரரை ஓலை கொடுத்து ஆட்
கொண்டான்.

மாணிக்கவாசகரை தம் திருத்தாளைத்
தந்து ஆண்டான்.

ஈசன் ஆட்கொண்ட விதத்தில் இவ்வாறு வேறுபாடு இருக்கிறது. ஆனால் சமயக் குரவர் நால்வரும் இறைவனை ஆட்கொள்ள கையாண்ட விதம் ஒரே விதம்தான். அதுதான் இசை. தேவார இசை, திருவாசக இசை,

'அளப்பில கீதம் சொன்னார்க்கு
அடிகள் தாம் அருளுமாறே'

என்று அப்பர், இசையால் இறைவனை எளிதாக அடையலாம் என்று பாடி இருக்கிறார்.

நாயன்மார்கள்

எலும்பைப் பெண்ணுருவாக்கியிருக்கி
றார்கள், இசையாலே.
முதலை உண்ட பாலனை மீள உயிர்ப்
பித்திருக்கிறார்கள், இசையாலே,
கல்லை ஓடமாகக் கொண்டு மிதந்திருக்
கிறார்கள் இசையாலே.

இறைவன் இசைப்பிரியன். இசையே தனக்குப்பிடிக்கும் என்று இறைவன் கூறியிருக்கிறான் பெரிய புராணத்திலே.

'நமக்கு அன்பின் பெருகிய
அர்ச்சனை பாட்டேயாகும்'

இது இறைவன் வாக்கு.

திருமுறைகளைக் 'காதல் ஆகிக் கசிந்து ஓதினால் கஷ்டங்கள் தீரும். செல்வங்கள் சேரும், அறிவு, ஆற்றல், பெருமை, புகழ் யாவும் ஓங்கும். இதில் யாருக்கும் எவ்வித ஐயமும் வேண்டா.

மூன்று வயதிலே 'அம்மையே அப்பா' என்று அழுத குழந்தைக்குப் பார்வதியே வந்து ஞானப்பால் ஊட்டினார் என்பது வரலாறு. ஞானப்பாலைப் பருகி, சிவஞானம் உண்டான காரணத்தால் ஞானசம்பந்தர் மூன்று வயதிலேயே பாட ஆரம்பித்துவிட்டார் என்று பார்க்கிறோம்.

தேவாரப் பாடல்களைத் தேவாமிர்தத்திற்கு இணையாகச் சொல்லுவார்கள். சேக்கிழார் அப்படித்தான் பெரியபுராண நூலிலே சிறப்பித்துப் போற்றுகின்றார்.

மயிலாப்பூரில் சிவநேச செட்டியார் என்ற வணிகர் இருந்து வந்தார். பெரிய கப்பல் வியாபாரி அவர். அப்படிப்பட்ட செல்வந்தருக்கு ஒரே ஒரு பெண் குழந்தை பிறந்தது, 'பூம்பாவை' என்று திருமகளைப் போன்ற அந்தக் குழந்தைக்குப் பெயரிட்டு வளர்த்து வந்தார் சிவநேசர்.

அந்த சிவநேசருக்குத் திருஞானசம்பந்தர் என்றால் மிகவும் பிரியம். திருஞானசம்பந்தர் ஆற்றிய அற்புதங்கள் பலவற்றைக் கேட்டு அவர் மேல் ஆழமான பக்தி கொண்டிருந்த சிவநேசர் 'என்பெண் பூம்பாவையையும் என் செல்வம் அத்தனையும் திருஞானசம்பந்தருக்கே காணிக்கையாக்குவேன்' என்றுசொல்லி வந்தார்.

ஒரு நாள் பூசைக்குப் பூப்பறிக்கப்போனாள் பூம்பாவை. அப்போது அவளுக்கு வயது ஏழு. மல்லிகைப் பந்தலில் மறைந்திருந்த நாகம். பூம்பாவையைக் கடித்துவிட்டது. அவள் தரையிலே விழுந்து துடித்தாள், மற்ற சிறுமிகள் வந்து பாம்பு கடித்ததை சிவநேசரிடம் சொன்னார்கள்.

அரண்மனை வைத்தியரை எல்லாம் அழைத்து வந்து சிகிச்சை செய்தார்கள். சிகிச்சை பலன் அளிக்கவில்லை. பூம்பாவை மாண்டு போனாள்.

'திருஞானசம்பந்தருக்கு என்று நான் அர்ப்பணித்திருந்த பூம்பாவை மாண்டு போனாளே? இது என்ன கொடுமை' என்று கலங்கினார் சிவநேசர். பிறகு இறைவன் மேல் பாரத்தைப் போட்டு பூம்பாவையைத் தகனம் செய்தார்.

திருமகள் போன்ற பூம்பாவையின் அழகு மேனி சாம்பல் ஆகிப்போனது. அந்தச் சாம்பலையும், எலும்பையும் ஒரு குடத்தில் இட்டுப் பத்திரப்படுத்தி பூசையறையில் வைத்து வழி

பட்டு வந்தார் சிவநேசர், எதற்கென்றால் திருஞானசம்பந்தர் மயிலாப்பூர் வரும்போது காட்டுவதற்கு.

இந்த நிகழ்ச்சி நடந்து ஐந்தாண்டுகள் முடிந்த பிறகு ஒரு நாள் திருஞானசம்பந்தர் திருவொற்றியூருக்கு வந்தார்.

சேதியைக் கேள்விப்பட்டு அகம் மகிழ்ந்த சிவநேசர் மயிலாப்பூரில் இருந்து திருவொற்றியூர் வரை பந்தல் போட்டார். ரத்தினக் கம்பளம் விரித்தார்.

திருஞானசம்பந்தரும் மயிலாப்பூர் வந்து கற்பகாம்பாளையும் கபாலீசுவரரையும் தரிசித்து வணங்கினார். அப்போதுதான் பூம்பாவையின் வரலாறும், சிவநேசருடைய பக்தியும் அவருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

கோயிலின் மேற்கு வாசலுக்கு அஸ்திக் குடத்தைக் கொண்டு வரும்படி திருஞானசம்பந்தர் கூறுகிறார். பூம்பாவையின் அஸ்திக் குடம் பல்லக்கிலே வைத்துக் கொண்டு வரப்படுகிறது.

திருஞானசம்பந்தர் ஒரு திருப்பதிகம் பாடுகிறார். அந்தத் திருப்பதிகத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் 'அமுதம்' என்பதாகப் பாராட்டுகின்றார் சேக்கிழார்.

அமுதம் தெளித்தால் போன உயிர் திரும்ப வரும் என்று சொல்வார்கள். தேவார அமிர்தம் தெளித்தார் திருஞானசம்பந்தர். பூம்பாவையின் போன உயிர் திரும்ப வந்து விட்டது.

ஏழு வயதிலே பாம்பு கடித்து மாண்டு போன பூம்பாவை இப்போது இருந்தால் அவளுக்கு வயது 12 இருக்கும். திருஞானசம்பந்தர் பாடப்பாட, பூம்பாவை உயிர் பெற்று 12 வயது பருவ மகளாகத் தோன்றினாள் என்று விவரிக்கிறார் சேக்கிழார்.

எலும்பைப் பெண் ஆக்கும் தேவாரம், எந்த அற்புதம்தான் செய்யாது? இதை நாம் தெரிந்து கொள்கிறோம். இப்படி எத்தனை எத்தனையோ அற்புதங்களை நம்முடைய தேவாரப் பாக்கள் செய்திருப்பதை நமக்கு நம்முடைய சான்றோர்கள் காட்டியிருக்கிறார்கள், பாடியிருக்கிறார்கள்,

திருஞானசம்பந்தருடைய ஒரு பதிகம்
நோய்தீர்க்கும் பதிகம்

அதுதான் 'மந்திரமாவது நீறு' என்ற பதிகம்.

திருஞானசம்பந்தருடைய ஒரு பதிகம்
பொற்காசு தரும் பதிகம் ஆகும்.

அதுதான் 'வாசி தீரவே காசு நல்குவீர்'
என்ற பதிகம்.

ஒரு பதிகம்அல்ல, ஏழு பதிகங்கள், கோடையிலும் மழை வரவழைக்கும் பதிகங்களாகத் திகழ்கின்றன.

நவகிரகங்களின் துன்பங்களிலிருந்து நமை மீட்கக் கூடிய 'கோளறு பதிகம்' திருஞானசம்பந்தர் பாடியதுதான்.

ஆகவே, இப்படிப்பட்ட பக்தியையும், பண்பாட்டையும் பரப்பக்கூடிய தேவார திருமுறைகளை நாம் ஒவ்வொருவரும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

இதற்காகத்தான் ஓதுவாமூர்த்திகளுக்கு ஓய்வூதியம் எல்லாம் கொடுத்து நம்முடைய அறநிலையத்துறை சிறப்பு செய்து வருகிறது.

எங்கே இசை சிறந்து விளங்குகிறதோ அங்கே இறைவனே தேடி வந்து அருள் செய்கிறான் என்று பார்க்கிறோம்.

அன்பெனும் பிடியில் அகப்படும் இறைவன், இசைக்குத் தான் எளிதிலே ஆட்படுகிறான். பகைவரையும் இசைய வைப்பது இசை. பாம்பையும் ஆட வைப்பது இசை.

இசை கேட்டால் வாடிய பயிரும் செழித்து வளரும் என்று இன்றைக்கு இசை மேதைகள் பலர் மெய்ப்பித்து வருகிறார்கள்.

மேலை நாட்டிலே ஒரு பெரிய மருத்துவர் தம்முடைய மருத்துவமனையிலே ஒரு பலகை தொங்கவிட்டு அதிலே இசையின் பெருமையை எழுதி வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள்.

'இசையை நேசித்தால் நோய் வராது, என் மருத்துவமனைக்கு வர வேண்டிய அவசியம் இருக்காது' என்ற பொருள்பட வாசகம் எழுதி அங்கே வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.

உடல் நோய்க்கு மட்டுமல்ல, நம்முடைய பிறவி நோய்க்கும் மருந்துதான் தேவார, திருப்புகழ் இசை ஆகும்.

'திருமுறைகளை நாளும் ஓதுங்கள்' என்று பெரியோர்கள் இசையின் சிறப்பை எடுத்து விவரித்திருக்கிறார்கள்.

மாணிக்கவாசகரின் இசைக்காக இறைவன் கூலியாளாக வந்து பிரம்படி பட்டதையும் திருவிளையாடல் புராணம் சொல்கிறது.

பரபரக்கும் மனதை
ஒருநிலைப்படுத்துவது இசை-
பாவங்களைத் தீர்த்துப்
பரம்பொருளோடு யாவரையும்
கூட்டுவிப்பது இசை ஆகும்.

அத்தகைய அற்புதமான திருமுறைஇசைப் பதிகங்களை நாளும் நாம் பாடிப் பயன்பெறுவோமாக.

# திருப்பரங்குன்றம்

## டாக்டர் த. அமிர்தலிங்கம்

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோ றாடல், பழமுதிர்ச் சோலை இவை ஆறும் ஆறுமுகன் உகந்த ஆறு திருத்தலங்கள் ஆகும்.

'ஆறு திருப்பதியில் வளர் பெருமானே' என்று அருணகிரிநாதரும் 'ஆறு திருப்பதி கண்டு ஆறெழுத்தும் அன்பினுடன் கூறுமால் சிந்தை குடிகொண்டோனே' என்று குமரகுரு பரரும் போற்றியுள்ளனர்.

நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் போற் றிய ஆறுதிருத்தலங்கள் என்பதால், அவ்வாறு திருத்தலங்களும் ஆற்றுப்படைத் தலங்கள் என அழைக்கப்பட்டு பின் அவை மருவி 'ஆறு படைத் தலங்கள்' 'ஆறுபடைக்ள்' என அமைந்ததாக தமிழ் அறிஞர் பெருமக்கள் விளக்கம் கூறுகின்றனர்.

படைவீடு என்ற சொல், பகைவர்களுடன் போர்புரியும் பொருட்டுத் தளபதி ஒருவன் படைகளுடன் சென்று தங்கியிருக்கும் இடத் தைக் குறிப்பதாகும். முருகப் பெருமான் சூர பத்மனுடன் போர்புரியச் சென்று தங்கியிருந்த படை வீடு, திருச்செந்தூர் ஒன்றேயாகும். ஆயினும் ஏனைய திருத்தலங்களும் படை வீடுகள் என அழைக்கப்படுவதற்குக் காரணம் முருகாற்றுப் படையில் நக்கீரர் முன்னிலைப் படுத்திய திருத்தலங்கள் இவை என்பதாலேயே 'ஆற்றுப்படைத்தலங்கள்' என ஆகி ஆறு படைத்தலங்கள் எனச் சுருங்கின என்று அறிஞர் பெருமக்கள் கூறும் விளக்கம் அறிவிற் குப் பொருந்தக் கூடிய அரிய விளக்கமே ஆகும்.

எனினும், அடியார்களுக்குப் பகையாவன காமம், மோகம், லோபம், குரோதம், மதம், மாச்சரியம் என்னும் ஆறு தீய குணங்களாகும். இவ்வாறு பகையை வென்று அடியவர்களைக் காக்கும் பொருட்டு முருகன் தங்கியிருக்கும் படை வீடே அவன் திருக்கோயில்கள் என்று கொள்வதில் யாதொரு தவறும் இல்லை யல்லவா! ஆகவே தான், அடியவர்களுக்கு வேண்டியவாறே அருளும் பழமையும் பெருமை யும் வாய்ந்த அவன் ஆறு திருத்தலங்கள் ஆறு படை வீடுகள் என்று சிறப்பிக்கப்படுகின்றன.

இனி கந்தப் புராணக் கதை நிகழ்ச்சியின் படி பார்க்கப் போனால் சூரபதுமன் உள்ளிட்ட அரக்கர்களை சம்ஹாரம் செய்து முருகன் கோயிற் கொண்ட முதல் திருத்தலம் திருச் செந்தூரேயாகும். அவ்வாறிருக்க திருச்செந் தூர் இரண்டாம் படைவீடு எனவும், திருப் பரங்குன்றம் முதற்படை வீடு எனவும் போற் றப்படுவதற்கு ஏதேனும் சிறப்புக் காரணமும் இருக்கவே செய்யும் என்பது நாம் உணரத் தக்கது.

அக்காரணம் என்ன என்பதை நாம் காண் பதற்கு முன்னால் முருகனின் முதற்படை வீடான இக்குன்றிற்கு 'பரன்குன்று' எனப் பெயர் வந்த காரணத்தை நாம் முதலில் தெரிந்து கொள்வோம்.

பனனெடுங்காலத்திற்கு முன்னால்-பாவி களான சூரபன்பன், சிங்கமுகன், தாருகாசூரன் முதலான அரக்கர்களை மாய்க்க திருமுருகன் திருஅவதாரம் புரிவதற்கும் முன்னால் நிகழ்ந்த ஒரு வரலாறு இது.


ஆதிசேடனுக்கும், வாயுக்கடவுளுக்கும் ஆதியிலிருந்து ஒரு கருத்துப் போர் நிகழ்ந்த வண்ணம் இருந்தது, பூபாரம் முழுதும் தாங் கும் நானே வலிமைமிக்கவன் என்று தர்க்கம் புரிந்தான் ஆதிசேடன் 'இல்லை இல்லை ஊழிக் காற்றாய் நான் மோதினால் நிலைகெட்டு வலியொடுங்கித் தோற்றுப் போவாய்' என்று வீரம் பேசினான் வாயுக் கடவுள்.

கருத்து முரண் கொண்ட இருவரும் ஒரு மோது போருக்கும் தயாராகி விட்டார்கள். மகாமேரு மலையின் சிகரங்களை ஆதிசேடன் தன் படங்களால் மூடிக் கொள்ள, மேருவின் சிகரங்களைப் பிளந்தெறிய முயன்றான் வாயு.

இறுதியில் தன் முயற்சியால் வெற்றி கண்ட வாயு, மேருமலையின் ஒரு சிகரத்தை பறித்துத் தென்திசை நோக்கி வீசி எறிய 'சத்திய சிருங்கம்' என்ற அச்சிகரம் பாண்டி நாட்டில் வந்து விழுந்து நிலை பெற்றது.

மதுரைக்குத்தென் மேற்கே ஐந்து மைல் தூரத்தில் வந்து விழுந்தது வாயுவால் வீசி எறியப்பட்ட 'சத்திய சிருங்கம்' எனும் அச் சிகரம்.

சுமார் 300 அடி உயரம் கொண்ட இச் சிகரம் சிவலிங்க வடிவிலேயே தோற்றம் அளிப்பதால் சிவபெருமானே குன்றுருவில் காட்சியளிப்பதாகக் கருதி மக்கள் 'பரன்குன்று' என்றே பண்டுதொட்டு அழைத்து வந்தனர்.



இப் பரன்குன்றிற்குப் பராசர சேத்திரம் என வழங்கி வரும் மற்றொரு பெயரும் இங்குச் சிந்திக்கத்தக்கதாகும்.

வசிட்ட முனிவரின் பேரர் பராசர முனிவர். இவருக்குத் தப்தர், அனந்தர், நந்தி, சதுர்முகர், சக்ரபாணி, மாலி என்று புதல்வர்கள் அறுவர்ஆவர்.

நீராடும் போது பொய்கையில் இருந்த மீன்களைப் பிடித்து அருகிலிருந்த பாறையில் போட்டு அவைதுள்ளித் துடிப்பதைக் கண்டு ஆனந்தம் கொண்ட அத்துட்ட பிள்ளைகளின் அருளற்ற செயலைக் கண்டு பராசரர் மனம் பதைபதைத்தார். தம் மக்கள் என்றும் பாரமல் 'நீங்களும் மீன்களாகுங்கள்' என்று சாபம் கொடுத்துவிட்டார்.

'தந்தையே! மக்கள் என்றும் பாராது சபித்து விட்டீர்களே? எங்கள் பாவத்திற்கு விமோசனம் இல்லையா!' என்று முனிவரின் பிள்ளைகள் வேண்ட 'முருகக் கடவுள்தோன்றி இந்தச் சரவணப் பொய்கைக்கு வருவார். அன்னை உமை கந்தனுக்கு வழங்கும் பால் இப்பொய்கையில் சிந்தும்போது அதனை அருந்தி நீங்கள் சுயவடிவம் பெறுவீர்கள்' என்று சாபவிமோசனம் தந்தார் பராசரர்.

அசுரர்களின் தொல்லை தாளமுடியாத திருமால், நான்முகன் உள்ளிட்ட தேவர்கள் அனைவரும் கயிலை மலை சென்று கண்ணுதற் கடவுளை வழிபட்டுப் பிரார்த்தித்தார்கள்.

''எம்பெருமானே! சூரபன்பனாதி அசுரர்களால் பெருந்துயர் உறுகிறோம்' எங்களை இத்துயரத்திலிருந்து விடுவிக்க உமக்கு ஒப்பாக ஒரு திருக்குமாரரைத் தந்தருளுங்கள்.'

சிவபெருமானாரும் ஸத்யோஜாதம், வாமதேவம், தத்புருஷம், ஈசானம், அகோரம் எனத் தமக்கு வெளிப்படத் தெரியும் ஐந்துமுகங்களோடு பரம ஞானியரின் உள்நோக்கிற்கு மட்டும் புலப்படும் உள்முகமான அதோமுகத்தையும் கொண்டு ஆறுமுகங்களிலிருந்து ஆறு அனல் பொறிகளைத் தோற்றுவித்தார்.

ஆறு அக்கினிப்பொறிகளும் இறைவன் ஆணைப்படி அவர் திருமுன் நின்றன. வாயுதேவன் தீப்பொறிகள் ஆறையும் தன் சென்னிமேல் தாங்கிச் சென்றான். பிறகு அக்கினிதேவன் தன் சென்னிமேல் அக்கினிப் பொறிகளைத் தாங்கினார். இருவரும் மாறி மாறித் தாங்கிச் சென்று கங்கையில் சேர்த்தனர். கங்கை அவ்வாறு அனல் பொறிகளை சரவணப் பொய்கையில் கொண்டு சேர்க்க, ஆறுகுழந்தைகளாக முருகப்பெருமான் திரு அவதாரம் செய்தார்.

கார்த்திகை மகளிர் அறுவரும் ஆளுக்கொரு குழந்தையை எடுத்துப் பாலூட்டினர். கார்த்திகை மாதர்கள் ஆறுருவான முருகரைப் போற்றி வளர்த்து வந்தனர்.

சிவபெருமானுடன் சிவகுமாரனைக் காணவந்த உமாதேவியார் அந்தக் குழந்தைகள் ஆறினையும் அள்ளியெடுத்தார். அப்படி வாரி எடுத்ததும்ஆறுகுழந்தைகளின் உடல்களும்ஒரே உடலாகமாறமுகங்கள் மட்டும்ஆறாகநின்றன. தேவர்கள் பூமாரி பொழிந்து உமாதேவியாரால் ஒருருவம் ஆக்கப்பட்டவர் என்ற பொருளில் 'கந்தர்' எனத் திருநாமம் வழங்கி முருகரைப் போற்றினார்கள்.

நவமணிக் கிண்ணத்தில் ஞானப்பால் பார்வதி வழங்கிட, முருகவேள் அருந்தினார்.

சரவணப் பொய்கையில் சிந்திய ஞானப்பாலை அருந்தியதும் சாபம் நீங்கி, மீன்கள் ஆறும் ஆறுமுனிவர்களாக வடிவம் கொண்டு சிவ பெருமானைத் துதித்தனர். 'நீங்கள் பரம் குன்றம் சென்று தவம் செய்து கொண்டிருங் கள், விரைவில் நம் குமரன் அங்கு வந்து உங்களுக்கு அருள் செய்வான் என்று திருவாய் மலர்ந்தருளினார் சிவபெருமான்.

பராசர முனிவரின் ஆறு குமாரர்களும் சிவபெருமான் திருவருளின் வண்ணம் தங்கி யிருந்து தவம்புரிந்ததிருத்தலம் என்பதால்தான் பரங்குன்றிற்குப் பராசர சேத்திரம் என்பதும் ஒரு பெயராகும். சூரபதுமனாதி அரக்கர் களைச் சம்ஹாரம் செய்த முருகக் கடவுள் திருப்பரங்குன்றிற்கு எழுந்தருளியபோது ஆறு முகக் கடவுள் அவ்வறுவருக்கும் ஞானோப தேசம் புரிந்திருளிச் சிறப்பித்தார்.

தம் பகைவனை அழித்துப் பொன்னுலக அரசைத் தமக்கு மீட்டுத் தந்தருளிய முருகப் பெருமானுக்குத் தம்மகள் தெய்வயானையைத் திருப்பரங்குன்றத்தில் திருமணம் செய்து கொடுக்க விழைந்தான் தேவேந்திரன்.

சிவபெருமான் உமாதேவியாரோடு கணங்கள் சூழ எழுந்தருளினார். திருமால், நான்முகன் ஆகியோர் முருகக்கடவுளைத் திருமணத்திற்கு எழுந்தருள வேண்டினர். தேவ தச்சன், திருப்பரங்குன்றத்தில் திருமண மண் டபத்தையும் விருந்தினர் மண்டபங்களையும் அமைத்துத் தந்தான்.

திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற முருகப் பெருமான்-தெய்வானை திருமணக் காட்சி கண் கொள்ளாக் காட்சி ஆகும்.

உலகமாதாவான உமாதேவியார் முருக வேளையும் தெய்வயானையாரையும் ஓர் சிறந்த பொன்னாசனத்தில் அமர்த்தினார். அவர்கள் திருமணக்கோலம் கண்டு இந்திரனும் வானோரும் ஏனோரும் கைகூப்பி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். இந்திராணி திரு மஞ்சன நீரை வார்க்க இந்திரன் முருகவேள் திருவடிகளைப் பூசித்தான். மலர்களைச் சூட்டித் தூபதீபம் பணித்தான்.

எம்பெருமானுக்குப் பூசைகள் முடித்து இந்திரன் தெய்வயானையின் திருக்கரத்தை கந்தவேளின் திருக்கரத்தில் வைத்து 'எளியே னுடைய மகளை ஏற்றருள்வீர்' என்று வேத மந்திரம் கூறித் தாரை வார்த்தான். பிரம தேவர் மாங்கல்ய நாணை மனத்தினால் படைத்துக் கொடுக்க முருகப் பெருமான் தம் திருக்கரத்தினால் வாங்கி தெய்வயானையின் கழுத்தில் அணிவித்தார். மலர்மாலையும் சூட்டினார். தீவலம் வருதல், அம்மி மிதித்தல், அருந்ததி காட்டுதல் முதலியசடங்குகள் யாவும் இனிதே நடந்தன.

முருகக் கடவுளும் தெய்வயானையும் பார்வதி பரமேசுவரர்களை வலம் வந்து திருவடி பணிந்து வணங்கினர். ஆதிதம்பதி களான சிவனும் சக்தியும் இப்புது தம்பதி களுக்கு 'எங்களுடைய முதன்மையை உங் களுக்குக் கொடுத்தோம்' என்று ஆசி கூறி னார்கள். சிவபெருமானையும் உமையம்மை யையும் ஒருங்கு வழிபடுவது எவ்வளவ சிறந்ததோ அவ்வளவு சிறப்பானது தெய்வ யானையையும் முருகவேளையும் திருப்பரங் குன்றத்தில் வழிபடுவது ஆகும். முருகனுக்கும் தெய்வயானைக்கும் தம்முடைய முதன்மை யைத் தந்தருளிய திருத்தலம் என்பதாலேயே திருப்பரங்குன்றம் ஆறுபடை வீடுகளுள் முதல்படை வீடாகப் போற்றப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

'மலைமடந்தையும் இறைவனும்
மைந்தர்க்கும் மகட்கும்
தலைமை செய்தருள்
புரிதலும்''

என்ற தனிப் பெருஞ்சிறப்பு நடைபெற்ற திருத் தலம் திருப்பரங்குன்றம் என்று போற்றுகின்றது கந்தபுராணம்.

இனி திருமுருகாற்றுப்படை பாடிய சங்கப் புலவர் நக்கீரர் மதுரையில் பிறந்து வளர்ந்த வர் என்பதால் தாம் அனுதினம் வழிபட்டு போற்றிய திருப்பரங்குன்றத்தையும் தம்மைப் பெருந்துயரிலிருந்து காப்பாற்றிய திருப்பரங் குன்றத்து முருகப் பெருமானையும் முதன்மைப் படுத்திப் பாடியதில் என்ன வியப்பிருக்க முடியும்?

'நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே' என்று ஆலவாய்ப் பெருமானோடு தர்க்கம் புரிந்த மாபெரும் புலவரான நக்கீரர் உற்ற இடர்ப்பாடும் அதைத் தீர்த்தருளிய திருமுருகன் பெருமையும் இங்கு நாம் சிந்தித் தும் வந்தித்தும் போற்றிட வேண்டியவொன் றாகும்.

சோமசுந்தரக் கடவுளோடு வாதிட்ட தம் பாவம் தொலைய திருப்பரங்குன்றம் வந்து தவம் புரிந்தார் சங்கப் புலவர்களில் தலை மைப் புலவரான நக்கீரர். திருப்பரங்குன்றத் தில் ஒரு குளக்கரையில் அரச மரத்தினடியில் நக்கீரர் அமர்ந்து சிவபூஜை செய்தபொழுது ஒரு அதிசயம் நிகழ்ந்தது. அரச மரத்திலிருந்து உதிர்ந்த ஓரிலை தண்ணீரில் பாதியும் தரையில் பாதியாகவும் விழுந்தது. நீரில் விழுந்த பாகம் மீனாகவும், நிலத்தில் விழுந்த பாகம் பறவை யாகவும் மாறி ஒன்றை ஒன்று இழுத்தன. இவ் விநோதக் காட்சியைக் கண்ட நக்கீரரின் சிவ பூஜை தடைப்படவே கற்கிமுகி என்ற பூதம் அவரைப் பிடித்து மலைக் குகையில் சிறை வைத்துவிட்டது.

ஏற்கனவே 999 பேர் அப்பூதத்தால் குகை யில் சிறை வைக்கப்பட்டிருந்தனர். ஆயிரம் பேர் சேர்ந்தவுடன் அனைவரையும் ஒன்றாக விழுங்க வேண்டும் என்று பூதம் எண்ணியிருந் தது. இப்போது நக்கீரர் சிறைபிடிக்கப்பட்ட வுடன் 'பூதத்திடமிருந்து இனி மீள முடியாது' என்றுதுடித்தனர் அவர்கள். தம்மையும், பூதத் திடம் ஏற்கனவே சிறைபட்டிருந்த பிறரையும். பூதத்தின் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டு மென்று திருப்பரங்குன்றத்துமுருகனைவேண்டி அப்போது நக்கீரர் பாடியதுதான் திருமுரு காற்றுப்படை எனும் அற்புத இலக்கியமாகும்.

நக்கீரர் 'திருமுருகாற்றுப்படை' பாடி முருகனை வேண்ட, முருகப்பெருமான் தம் கைவேலை ஏவினார். சூரன் உரம் கிழித்த வீரவேல் வெற்றிவேல் விண்ணோர் சிறை மீட்ட தீரவேல் கற்கிமுகியை வதைத்து மலைக் குகையைப் பிளந்து சிறைப்பட்டிருந்த அனை வரையும் விடுதலை செய்துவிட்டது.

இவ்வரலாற்றையும் நக்கீரர்

'குன்றம் எரிந்ததுவும் குன்றப்போர்
செய்ததவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும்-இன்றென்னை
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில்
காத்ததுவும்
மெய்விடா வீரன்கை ர்வேல்'
என்று பாடியிருக்கின்றார்.

நக்கீரர் அருள்பெற்ற இவ்வரலாற்றை அருணகிரிநாதர்
'பழுத்தமுது தமிழ்ப்பலகை
இருக்குமொரு கவிப்புலவன்
இசைககு உருகி வரைக்குகையை
இடித்து வழி காணும்'

என்று குறிப்பிட்டுப் போற்றியிருக்கிறார்.

திருப்பரங்குன்றத்தில் நக்கீரர் தவம் செய்த 'பஞ்சாட்சரப் பாறை' எனும் இடத்தை இன்றும் நாம் சரவணப் பொய் கைக்கு அருகில் கண்டு மகிழலாம். அங்கு நக்கீரருக்கு ஒரு ஆலயமும் பின்னாளில் அமைக் கப்பட்டு மக்கள் வழிபாட்டில் இருந்து வரு கின்றது. நக்கீரரை முருகப்பெருமான் குகை யிலிருந்து காப்பாற்றியதன் நினைவாக ஒவ் வொரு ஆண்டும் புரட்டாசி மாதம் நவராத்திரி விழாவையொட்டி வேலாயுதத்தை மலையுச்சிக் குக் கொண்டு செல்லும் விழா இத்திருத்தலத் தில் நடைபெற்று வருகிறது.

திருப்பரங்குன்றத்துக் கோயில் கடைச் சங்க காலத்திலேயே பாண்டியமன்னர்களால் பாறைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட குடைவரைக் கோயிலுமாகும். முருகர் தெய் வானைத் திருமணக்காட்சியே பாறையைக் குடைந்து குடைவரைச் சிற்பமாகக் கர்ப்ப கிரகத்தில் அமைக்கப்பட்டு வழிபாடு நிகழ்ந்து வருகின்றது.

கர்ப்பகிரகத்தில் காணப்படும் பெரிய பாறையின் நடுப்பகுதியில் மகிசாசுரமர்த்தினி யைக் கண்டு வணங்குகிறோம். அதனையடுத்து மூலவரான முருகப் பெருமானின் திருமணக் கோலத்தைக் கண்டு மகிழலாம். இதேபாறை யின் மேற்கில் தாமரைமலர்மேல் கரும்பும் கனியும் ஏந்தியுள்ள கற்பக விநாயகரையும் வணங்கலாம். கோயிலின் கொடிமரத்தின் முன்புறம் மயில், நந்தி, மூசிகம் ஆகிய மூன்று வாகனங்களும் ஒருங்கு அமைந்துள்ளது இந்த தலத்திற்குரிய தனிவிசேடமாகும்.

முருகப் பெருமானின் திருப்பாதத்திற்கு அடியில் முருகனின் வாகனங்களான மயில், ஆடு, யானை ஆகிய மூன்றையும் ஒரு சேரக் கண்டு களிக்கலாம். தெய்வானையை வளர்த்த இந்திரனின் யானையாகிய ஐராவதம் திரு மணத்திற்குப் பின் தெய்வானையைப் பிரிய மனமின்றி திருப்பரங்குன்றத்திலேயே தங்கி விட்டதாகக் கூறுகின்றனர்.
மூலவரின் திருஉருவம் மலையைக் குடைந்து அமைக்கப்பட்டிருப்பதால் அபி சேகங்கள் எல்லாம் முருகன் தன் திருக்கரத்தில் கொண்டுள்ள வேலுக்கே நடைபெறுகின்றன.

மூலவர் முருகரின் சந்நிதிக்கருகே மலை யைக் குடைந்து அமைக்கப்பட்ட கோயிலில் திருமால் மகாலட்சுமியுடனும் மதங்க முனிவ ருடனும் காட்சியருளுகிறார். கற்பக விநாயக ருக்கு அருகிலுள்ள குடைவரைக் கோயிலில் சத்யகிரீஸ்வரர் என்ற திருநாமத்துடன் சிவ பெருமான் சிவலிங்க வடிவில் காட்சிதருகிறார். ஆகவே திருப்பரங்குன்றம் சென்றால் முருகர்-தெய்வானை திருமணத்தைக் கண்டு களிக்கும் பேரானந்தத்தோடு, மற்ற தெய்வங்கள் அனைவரையும் வழிபட்ட மனநிறைவையும் அடியவர்கள் பெறுவது திண்ணம்.

திருப்பரங்குன்றத்தில் ஒன்பது தீர்த் தங்கள் சிறப்புற்று விளங்குவதாகத் திருப்பரங் கிரிபுராணம் கூறுகிறது. இவற்றிலும் சரவணப் பொய்கை பிரம கூவம் சத்திய கூவ தீர்த்தம் ஆகிய மூன்றுதீர்த்தங்களும் மிகச்சிறப்பானவை யாகும்.

முருகன் தன் வேலாயுதத்தால் நிலத்தைக் கிழிக்க உண்டான தீர்த்தமே சரவணப் பொய் கையாக விளங்கி வருகிறது. சிவபெருமான் உமாதேவிக்குப் பிரணவ மந்திரத்தை உரைத்த போது, மடியில் வீற்றிருந்த முருகரும் அவ் வுபதேசித்தை உளம் கொண்டாராம் குருமுக மாக அறிய வேண்டிய மந்திரத்தை வேறுவகை யில் மறைந்திருந்து கேட்பதுபோல் முருகர் கேட்டுணர்ந்தது குற்றம் என்று திருவுளம் கொண்டாராம் சிவபெருமான்.

அக்குற்றம் திரவே பரம்குன்றம் வந்து மூன்றாண்டுகள்முருகர்தவம்புரிந்தார் என்றும், அப்போது தம்கை வேலால் சரவணப்பொய் கையை முருகப்பெருமான் உண்டாக்கினார் என்றும் திருப்பரங்கிரி புராணம் கூறுகின்றது. முருகப்பெருமானின் தவத்தைப் போற்றி தைப் பூச நன்னாளில் பார்வதி சமேதராய்ப் பெரு மான் இடபவாகனத்தில் காட்சி தந்து ஆசி வழங்கினார். முருகப்பெருமானால் வணங்கப் பட்ட ஈசனும், ஈசுவரியும் பரங்கிரிநாதர், ஆவுடையநாயகி எனப் பெயர் கொண்டு இத் திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ளனர். தற் பொழுது சந்நிதி வீதியில் மீனாட்சி சுந்தரேசு சுவர் ஆலயம் எனும் பெயரில் அந்த ஆலயம் விளங்கி வருகின்றது. முதலில் பரங்கிரிநாதரை யும், ஆவுடையநாயகியையும் வணங்கி வழி பட்ட பின்னரே முருகனின் ஆலயத்திற்குச் சென்று வழிபட வேண்டும் என்று ஐதீகம் இங்கு நிலவி வருகிறது.

முருகப் பெருமானுக்கு சிவபெருமான் காட்சி வழங்கிய நன்னாள் தைப்பூசம் ஆதலால் இவ்வாலயத்தில் தைப்பூசவிழா பத்து நாட்கள் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வரு கிறது.

பிரமன் இத்திருப்பரங்குன்றத்தில் உண் டாக்கிய தீர்த்தம் பிரமகூவ தீர்த்தம் என வழங்கப்பட்டு வருகிறது. இத்தீர்த்தத்தில்

நீராடி இறைவனை வழிபட்டே பிரமதேவன் வெள்ளைக்கிளி போன்ற கலைமகளை மணம் புரிந்து கொண்டான் என்று தலபுராணம் கூறு கிறது.

வாய்மை அன்றி பொய்ம்மை ஒரு போதும் பேசி அறியாத அரிச்சந்திரன் இத் திருப்பரங்குன்றத்தில் உள்ள சத்திய கூவத்தில் நீராடி முருகனை வழிபட்ட புண்ணியம் காரண மாகவே அத்தகைய பெருமை பெற்றான் என்றும் தலபுராணம் கூறுகிறது. சிபிச் சக்கர வர்த்தி இத்திருப்பரங்கிரி திருத்தலத்தில் தங்கி பூதானம் செய்து புண்ணியம் பெற்றுள்ளார், ஐநூறு பேருக்குப் பூதானம் வழங்க முற்பட்ட போது, ஒருவர் குறைய, மனம் வருந்திய சிபி யின் வருத்தம் தீர, சிவபெருமான் திருப்பரங் குன்றத்துப் பரமேசுவரராகத் தோன்றி அருள்பாலித்ததாகவும் தலபுராணம் கூறுகின் றது.

புருரவசு, மாந்தாதா, நளன், முசுகுந்தன் ஆகியோரும் திருப்பரங்குன்றம் அமர்ந்த செவ் வேள் பரஞ்சுடரைப் போற்றி வழிபட்டதாகத் தலபுராணம் போற்றுகின்றது.

திருப்பரங்குன்றம் அன்றும் இன்றும் என்றும் செந்தமிழ்வாணர்கள் இன்னிசை மலர் களால் அர்ச்சிக்கும் அற்புதத் திருத்தலமாக விளங்கி வருகின்றது.

'யாம் இரப்பவை

பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்

அருளும் அன்பும் அறனும்''

என்று பரிபாடலில் கடுவன் இளவெயினனார் என்ற புலவர் முருகன் திருவருளே வேண்டும் எனப் பாடியிருப்பது ஈண்டு நாம் நினைந்து மகிழத்தக்கது.

உமையிடம் ஞானப்பால் அருந்திய திரு ஞானசம்பந்தரும், தம்பிரான் தோழரான சுந்தரரும் தேவாரத் திருப்பதிகங்களில் இத் திருப்பரங்குன்றத்தைப் போற்றிப் பாடியுள்ள னர்.

'பரங்குன்றில் பன்னிருகைக் கோமான்தன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு-சுருங்காமல்

ஆசையால் நெஞ்சே அணிமுருகாற்றுப் படையைப்
பூசையாக் கொண்டு புகல்''

என்று புலவர்கள் போற்றும் திருப்பரங்குன்றத் தில் ஞாயிற்றுக்கிழமை சென்று வழிபடுதல் மிகவும் சிறப்பு என்பதால் ஒவ்வொரு ஞாயிறும் கிருத்திகை முதலான விசேட நாட்களிலும் ஆயிரமாயிரம் அடியார்கள் சென்று வழிபட்ட வண்ணமாக உள்ளார்கள்.

இருநூறு ஆண்டுகளுக்குமுன் திருப்பரங் குன்றத்தில் நடைபெற்ற ஒரு அதிசயமாகும் இது. திருமுருகன் திருநாமத்தை ஓதுவதிலும் திருமுருகர்-தெய்வயானையாரை வழிபட்டு வணங்குவதிலும் தீவிர ஆர்வம் காட்டிவாழ்ந்து வந்திருக்கிறார் ஒரு அம்மையார். எந்த நேரமும் கோயில் வழிபாடு என்று வாழ்ந்து வந்த அம்மையார்மேல் அவர் கணவன் ஐய முற்று அவரது கரங்களில் ஒன்றைத் துண் டித்துத் தண்டித்து விட்டான். 'முருகா' என்று அம்மையார் அழைத்தவுடன் முருகன் அருளால் வெட்டுப்பட்டகரம் உடனே வளரப் பெற்றதாக வரலாறுகள் கூறுகின்றன.

''அரிவை முருகாஎன்றழைக்கு முன்னேவந்து கரம் உதவிநின்ற கருணைப் பெருந்தேவே''

என்று இவ்வற்புத நிகழ்ச்சியைப் பாடியுள்ளார் சிதம்பர சுவாமிகள்.

அடியார்கள் மனமுருகி அழைத்தவுடன் ஓடி வந்து அருள்பாலிக்கும்திருப்பரங்குன்றத்து முருகனை இந்துக்கள் மட்டுமின்றி இசுலாமிய மக்களும் பெருமளவு வந்து வழிபட்டு வணங்கி நின்றனர். திருப்பரங்குன்றத்து மலை உச்சி யில் முருகப் பெருமான் மேல் பக்தி பூண்டு வாழ்ந்த சிக்கந்தர் பாட்சா என்ற முஸ்லீம் மகானின் சமாதியும் இருக்கிறது. இந்துக் களும் முஸ்லீம்களும் சமரசபாவத்துடன் சேர்ந்து வழிபட்டு வருவதால் திருப்பரங் குன்றம் இந்து முஸ்லீம் ஒற்றுமைத் திருத்தலம் ஆகவும் விளங்கி வருகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் பங்குனி உத்திரத் தின்போது பிரம்மோற்சவம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு முருகர் தெய்வானை திரு மணமும் பங்குனி உத்திரத்தின்போது மிகச் சிறப்பாக நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

முருகப்பெருமான் மணக்கோலத்தில் மண வாளப் பெருமானாக விளங்கித் தன் அடிய வர்க்கு வற்றாத செல்வ வளங்களை வாரி வழங்கி வருகின்றான். திருமணத்திற்குச் சிறப்பு விருந்து. திருமணக் கோலம் கொண்ட திருப்பரங்குன்றத்தில் அடியவர்க்கு அன்ன தானம் வழங்கும் வைபவம் மிகச் சிறப்பாக நிகழ்ந்து வருகிறது. இத்தலத்தில் அன்ன தானம் செய்தால் தீரா நோய்கள் யாவும் தீர்ந்து திருமுருகன் அருளால் மக்கட்செல்வ மும் மனையறச் செல்வமும் பொருட் செல்வ மும் புகழ்ச் செல்வமும் பெருகி வளரும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாகும்.

சந்தத்தமிழ்க் கவிராஜரான அருணகிரி நாதர் இத்தலத்தில் முருகவேளை உருகி வழி பட்டு எண்ணற்றதிருப்புகழ்பாடல்களைப் பாடி யிருப்பார். ஆனால் நமக்கு இப்போது கிடைத் திருப்பதோ பதினாறு பாடல்கள்தான். பரங் குன்றத்து முருகனைக் கும்பிட்டால் பதினாறு பேறுகளும் வாய்க்கும் என்பது திருவருட் குறிப்பு.

# ஸ்ரீ நாலாயிர திவ்வியப் பிரபந்தம் எண்ணிக்கை - ஒரு விளக்கம்

**இராமானுஜம்**, ஆழ்வார்திருநகரி

ஸ்ரீமந் நாராயணனிடத்தில் அளவிடற்கரிய பக்தி பூண்டு ஆழங்கால்பட்டவர்கள் ஆழ்வார்கள். அவர்கள் பன்னிருவர். அப்பன்னிரு ஆழ்வார்களால் எம்பெருமானைப் போற்றி பாடப்பட்டதே நாலாயிர திவ்வியப் பிரபந்தம் எனப் போற்றப்பட்டு, வைணவர்களால் மனப் பாடமாகப் படிக்கப்பட்டு, கோயில்களில் பெருமான் முன்பு ஓதப்பட்டு வருகின்றது. அது குறித்துக்கீழ்க்கண்டவாறுஆய்வு செய்துதெளிவு பெறுவோம்.

ருக், யஜுர், சாம, அதர்வணம் எனும் நான்கு வேதங்கள் இந்து மதத்திற்கு முக்கிய மானவை. அவை வடமொழியில் உள்ளன. அதனைத் தமிழில்மொழி பெயர்ப்பதற்கு பதிலாக அவற்றில் சொல்லப்பட்ட கருத்துக்களை மிக எளிமையாக, அழகாகப் பைந்தமிழில் பாடல்களாக ஆழ்வார்கள் அருளியுள்ளனர்.

நம்மாழ்வார் பாடிய திருவிருத்தம். திருவாசிரியம், பெரிய திருவந்தாதி. திருவாய்மொழி என்பவை நான்கு வேதங்களின் சாரம், அதனாலேயே ஸ்வாமி நம்மாழ்வார் 'வேதம் தமிழ் செய்த மாறன்' எனப் போற்றப்படுகிறார்.

பன்னிரு ஆழ்வார்கள் விபரம்: பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப் பொடி ஆழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கை ஆழ்வார், மதுரகவி ஆழ்வார் மற்றும் ஆண்டாள். அவர்கள் அருளிய பிரபந்தங்கள் விபரம்:

பொய்கை ஆழ்வார்:

முதல் திருவந்தாதி—100 பாடல்கள்

பூதத்தாழ்வார் :

இரண்டாம் திருவந்தாதி—100 பாடல்கள்

பேயாழ்வார் :

மூன்றாம் திருவந்தாதி—100 பாடல்கள்

திருமழிசையாழ்வார்:

திருச்சந்த விருத்தம்—120 பாடல்கள்

நான்முகன் திருவந்தாதி—96 பாடல்கள்

நம்மாழ்வார் :

திருவிருத்தம்—100 பாடல்கள்

திருவாசிரியம்—7 பாடல்கள்

பெரியதிருவந்தாதி—87 பாடல்கள்

திருவாய்மொழி—1102 பாடல்கள்

குலசேகராழ்வார் :

பெருமாள் திருமொழி—105 பாடல்கள்

பெரியாழ்வார்:

திருப்பல்லாண்டு—12 பாடல்கள்

பெரியாழ்வார் திருமொழி—461 பாடல்கள்

தொண்டரடிப்பொடி ஆழ்வார்:

திருமாலை—45 பாடல்கள்

திருப்பள்ளியெழுச்சி—10 பாடல்கள்

திருப்பாணாழ்வார்:

அமலனாதிபிரான்—10 பாடல்கள்

திருமங்கை ஆழ்வார்:

பெரிய திருமொழி—1084 பாடல்கள்

திருக்குறுந்தாண்டகம்—20 பாடல்கள்

திருநெடுந்தாண்டகம்—30 பாடல்கள்

திருவெழுகூற்றிருக்கை—1

சிறிய திருமடல்—1

பெரிய திருமடல்—1

மதுரகவி ஆழ்வார்:

கண்ணி நுண்சிறுத்தாம்பு—11 பாடல்கள்

ஆண்டாள்:

திருப்பாவை—30 பாடல்கள்

நாச்சியார் திருமொழி—143 பாடல்கள்

ஆக மொத்தம்—3,776 பாடல்கள்

மேற்கண்டபடி 3776 பாடல்கள் இருக்க அவற்றை நாலாயிர திவ்யப்பிரபந்தம் எனக் கூறலாமா எனச் சிலர் கேட்கலாம்.

ஒவ்வொரு ஆழ்வார்களின் வாழித் திருநாமத்திலும் அவர்கள் அருளிய பிரபந்தங்கள் அதன் எண்ணிக்கையுடன் கூறப்பட்டுள்ளது.

திருமங்கை ஆழ்வாரின் வாழித் திருநாமத்தில் 'இலங்கெழு கூற்றிருக்கை இருமடலீந்தான் வாழியே 'எனவும்' இம் மூன்றில் இருநூற்றிருப்பத்தேழு ஈந்தான் வாழியே' என்றும் உள்ளது.

அதன்படிபார்க்கையில்

| | | |
|---|---|---|
| திருவெழு கூற்றிருக்கை | — | 1 |
| சிறியதிருமடல் | — | 77 அரை |
| பெரிய திருமடல் | — | 148 அரை |
| | | 227 |

இரண்டு கண்ணிகள் கொண்டது ஒரு பாட்டாக கணக்கிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது மூன்று 227—3——224

அத்துடன் மொத்தம் கணக்கிட்டுள்ள 3776 கூட்டினால் 4000 என்பது தெளிவு.

மேலும் தேசிகர் அவரது தேசிக பிரபந்தத்தில் சிறிய திருமடலை 40 பாட்டாகவும் பெரிய திருமடலை 78 பாட்டாகவும் கணக்கிட்டு அத்துடன் சுவாமி எம்பெருமானார் விஷயமாக திருவரங்கத்தமுதனார் பாடியுள்ள இராமானுஜ நூற்றந்தாதி 108 பாட்டையும் சேர்த்தால் நாலாயிரம் பாடல்கள் எனக் கணக்கிட்டுள்ளார்.

## இறைவன் பெயரைக் குழந்தைகளுக்கு சூட்டுங்கள்

''மானுட சாதியின் தோன்றிற்றோர்
மானிட சாதியை
மானுட சாதியின் பேரிட்டால் மறுமைக்
கில்லை
வானுடை மாதவா கோவிந்தா என்று
அழைத்தக்கால்
நானுடை நாரணன் தம்அன்னை நரகம்
புகாள்''

—பெரியாழ்வார்

அதன் விபரமாவது :

| | | |
|---|---|---|
| முதலாயிரம் | — | 947 |
| இரண்டாமாயிரம் | — | 1134 |
| மூன்றாம் ஆயிரம் | — | 709 |
| திருவாய்மொழி | — | 1102 |
| இராமானுஜ நூற்றந்தாதி | — | 108 |
| ஆக மொத்தம் | | 4000 |

எனவே நாலாயிர திவ்யப் பிரபந்தம் எனக் கூறப்படுவது சரியே என இதன் மூலம் தெளிவு பெறலாம்.

இது தவிர மணவாள மாமுனிகள் அருளிச் செய்த உபதேச ரத்தினமாலை 74 பாடல்களும் திருவாய்மொழி நூற்றந்தாதி 100 பாடல்களும் ஓதப்படுகின்றன.

அதேபோல தேசிகர் பிரபந்தங்களும் அவர்களது சம்பிரதாயம் பின்பற்றப்படுகிற கோயில்களில் ஓதப்படுகின்றன.

நாலாயிர திவ்யப் பிரபந்தங்கள் காலத்தால் அழிந்து விட்டன. பின்னர் காட்டு மன்னார் குடியில் அவதரித்த சுவாமி நாதமுனிகள் மூலம் நமக்கு கிடைத்துள்ளன. சுவாமி நம்மாழ்வார் நாதமுனிகளுக்கு 4000 பாடல்களையும் உரைக்க அவர் அதனை ஓலைச் சுவடிகளில் எழுதி ஒழுங்குபடுத்தி நமக்குத் தந்துள்ளார். சுவாமி நம்மாழ்வாரின் வாழித் திருநாமத்தின் 'நாதனுக்கு நாலாயிரம் உரைத்தான் வாழியே' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதை கொண்டு இது தெளிவாகிறது.

இப்பைந்தமிழ் பாசுரங்களை அனைவரும் கற்று எழுதி ஓதுபவர்களை மதித்து வணங்கி நற்பேறுபெறுவோம்.

# தவநெறி ஆளுடையார்

வ. ஜோதி, எம்.ஏ.

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாக உடையன. அதுபோல் உலகம் ஆதிபகவனை முதலாக உடையது என்பது வள்ளுவர் வாய்மொழி. அதனாலேயே அது தமிழ்மறை என்று போற்றப்படுகின்றது. ஆதிபகவன் என்பதற்கு முழுமுதற் கடவுள் என்பது பொருள். அம்முழு முதற் கடவ்ள் சர்வ சங்கார காரணன் ஆகிய சிவபெருமானே. சிருஷ்டி முதலிய ஐந்தொழிலினும், சர்வ சம்காரத்தைச் செய்பவனே ஏனைய உபசாரக் கடவுளர்களை விட மேலான முழுமுதற் கடவுள். அவனே மூவர் கோனாய் நின்ற முதல்வன்.

''அவன் அவள் அதுவெனும் அவை மூவினை மையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்''

என்பது தமிழ் ஆகம ஞானபாதமாகிய சிவஞான போதத்தின் முதற் சூத்திரம். அந்தம் ஆதியாய் உள்ள இறைவீனை இவ்வாறு அந்நூல் விளக்குகின்றது.

இவ்வரிய பிறவியில் உலக இன்பங்களில் மூழ்கி விடாமல், பிறவிக்கு இடனாய மலங்களைத் தேய்த்து, காயம் அழிந்தபின் பரமுக்தராய்ச் சிவப்பேறு பெற்றவர்கள் சிலர். அத்தகைய சிவப்பேறு பெற்றவர்கள் பெரிய புராண வரலாற்று அடியார்கள். அவர்களுள் சைவக் குரவர் என்று போற்றப்படுபவர் நால்வர். ஞான சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தர மூர்த்தி சுவாமிகள், மாணிக்க வாசகர் என்ற நால்வரே அவர்கள்.

இந்நால்வரில் சுந்தரரைக் காப்பிய நாயகராகக் கொண்ட சேக்கிழார் மற்ற அடியார்களையும் இடையில் தம்புராணத்தில் விரிவாகக் கூறி முடிக்கின்றார். இறைவனுடன் தோழமை நெறியில் பெரிதும் உரிமையுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்றவர் இவர். இவர் நெறி, யோகமார்க்கத்தைச் சேர்ந்தது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் நடுநாட்டில் உள்ள திருநாவலூரில் சடையனார், இசை ஞானியார் தம்பதிகட்கு அருமைவாய்ந்த மகனாய்த் தோன்றினார். இவருக்கு இளமைப் பருவத்தில் ' நம்பி ஆரூரர் ' என்ற திருநாமம் விளங்கியது. ஆரூரர் வளர்ந்து பேரழகுடன் இளமைப் பருவத்தில் காட்சி தந்தமையால் 'சுந்தரர்' என்று அழைக்கப்பட்டார். சுந்தரர் என்ற சொல்லிற்கு அழகானவர் என்பதே பொருள்.

வாலிபப் பருவத்தில் சுந்தரருக்கு மண ஏற்பாடுகள் நடைபெற்றது. புத்தூர் என்னும் ஊரில் பெண் பேசி முடிவாயிற்று. அங்கேயே மண ஏற்பாடுகள் நடைபெற்றன. மணநாளன்று இறைவன் கிழ அந்தணர் வடிவம் தாங்கிஅங்கு வந்தார். அவர் சுந்தரரிடம் 'நீ என் அடிமை' என்று கூறி வாதிட்டார். அதற்கு சுந்தரர், 'நீ ஒரு பித்தன். நான் உன் அடிமை அல்லேன்' என்று மறுத்துக் கூறினார். மணம் தடைப்பட்டது. அன்று மணம் தடைப்பட்டதால் அது முதற் கொண்டு அவ்வூர் 'மணம் தவிர்ந்த புத்தூர்' என்றே அழைக்கப்படுகின்றது.

பின்னர் சுந்தரரும், கிழவடிவான இறைவனும் வாதிட்டுக் கொண்டனர். வழக்கிடும் பொருட்டு இருவரும் திருவெண்ணெய் நல்லூர் சென்றனர். அவ்வூர் நியாயசபை முன்னர் தங்கள் வழக்கை வைத்தனர். முடிவில் இறைவனே வென்றார். பின்னர் இறைவன் கடவுட் கோலத்துடன் காட்சி தந்தார். தம்முடன் வாதிட வந்தது இறைவனே என்பதை அறிந்த சுந்தரர் உள்ளம் உருகினார். அப்பொழுது இறைவன், 'சுந்தரா, உம்முடைய சுந்தரப் பாடல் கேட்கவே இவ்வாறு வந்தோம்' என்று கூறினார். அதற்கு சுந்தரர், 'எவ்வாறு உம்மைப் பாடுவேன்!' என்று கூறி மீண்டும் மனம் கலங்கினார்.

'பித்தன் என்று எம்மை முதன் முதலில் வைததமையால், அதையே முதற் சொல்லாகக் கொண்டு பாடுக,' என்று கட்டளை இட்டார். சுந்தரரும், 'பித்தா பிறைசூடிப் பெருமானே' எனத் தொடங்கும் பாடலைப் பாடினார். பின்னர் வெண்ணெய் நல்லூர் இறைவன்மேல் பதிகம் பாடி முடித்தார். பிறகு அங்கிருந்து புறப்பட்டு தம் சொந்த ஊரான திருநாவலூருக்குச் சென்றார். அங்குள்ள இறைவனைப் பாடினார்.

திருநாவலூரில் இருந்து புறப்பட்டு நேரே திருத்துறையூருக்கு வந்தார். தேவாரப் பாடல் பெற்ற நடுநாட்டுத் திருத்தலங்கள் இருபத்திரண்டு, அவற்றுள் பதினைந்தாவது திருத்தலம் திருத்துறையூர் இங்கு வந்த சுவாமிகள் 'மலையார் அருவி' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். இங்குக்கோயில் கொண்டிருக்கும் இறைவனின் பெயர் 'பசுபதீஸ்வரர்' இறைவியின் பெயர் 'பூங்கோதை நாயகி'

இறைவருக்குச் சிஷ்ட குருநாதர் என்றும், இறைவிக்குச் சிவலோகநாயகி என்றும் வேறு பெயர்கள் உண்டு.

திருத்துறையூரை அடைந்த சுந்தரர் தன்னுடைய முன் நிகழ்ச்சிகளை நினைவு கூர்கின்றார். 'என்னுடைய தீவினையின் காரணமாய் அவநெறியில் செல்ல இருந்தேன். அந்நெறியில் செல்லாவண்ணம் என்னைத் தடுத்து ஆட் கொண்டாய்; அதுமட்டும் போதாது; இறைவா! இனி எனக்குத் தவநெறியையும் தந்தருள வேண்டும்;' என்று வேண்டி நின்று பதிகம் பாடினார். இதனைப் பெரியபுராணம்

''சிவன் உறையும் திருத்துறையூர்

சென்ற ணைந்து தீவினையால்

அவநெறியில் செல்லாமே

தடுத்தாண்டாய்! அடியேற்குத்

தவநெறி தந்து அருளென்று

தம்பிரான் முன்னின்று

பவநெறிக்கு விலக்காகும்

திருப்பதிகம் பாடினார்''.

(தடுத்தாட்கொண்டபுராணம்)

இவ்வாறு தவநெறியை வேண்டி சுந்தரர் பாடத் தொடங்கியவுடன் இறைவன் அவருக்கு அருள் புரிய எண்ணம் கொண்டார். முன் போலவே கிழ அந்தணர் வடிவம் தாங்கி வந்தார். சுந்தரமூர்த்தி சுவாமிகட்குக் காட்சி தந்தார். தவநெறியையும் அருள் செய்தார். சுந்தரர் வேண்டிய வண்ணம் அருள் செய்தமையால் அன்று முதல் தவநெறி ஆளுடையார் என்ற பெயரும் இவருக்கு உரியதாயிற்று.

இவ்வூர் கோயிலில் சுமார் பதினைந்து கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. அதில் இக்கோயிலின் கிழக்குப் புறச் சுவரில் விஜய நகர மன்னரான அச்சுததேவ ராயருடைய கல்வெட்டொன்று காணப்படுகின்றது. இவ்வூர் இறைவனுக்கு நிலம் இறையிலியாக வழங்கப்பட்ட செய்தி அதில் குறிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டின் மூலம் அவ்வூர் இறைவன் தவநெறி ஆளுடையார் என்ற பெயராலும் அழைக்கப்பட்டார் என்பதை அறிய முடிகின்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் வேண்டுகோளுக்கு இணங்க இவர் அவருக்குத் தவநெறியை அருளியமையால் தவநெறி ஆளுடையார் என்ற திருப்பெயரும் இவருக்கு ஏற்பட்டது. சுவாமிகள் தாம் பாடிய ஒவ்வொரு பாடலிலும் தவநெறியையே வேண்டினார். தவநெறி வேண்டியே பதிகம் பாடினார்.

''மலையார் அருவித் திரள்மா மணியுந்திக்

குலையாரக் கொணர்ந்தெற்றியோர்பெண்ணை வடபால்

கலையார் அல்குல் கன்னியம் ஆடும் துறையூர்த்

தலைவா உனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே''

மலையில் தோன்றுகின்ற அருவியானது பெரிய மணிகளைத் தள்ளிக் கொண்டு வந்து கரைகளில் வீசி எறிகின்ற பெரும் சிறப்புடையது பெண்ணையாறு. அதன் வடகரையில் நல்ல அணிமணிகளை அணிந்த அழகிய பெண்கள் மூழ்கி நீர் விளையாட்டுச் செய்யும் துறைகளையுடையது திருத்துறையூர். அவ்வூரின்கண் எழுந்தருளியுள்ள தலைவனே! உன்னிடம் அடியேன் வேண்டிக் கொள்வது தவநெறியை மட்டுமே! வேறொன்றையும் அல்ல.

இது அப்பாடலின் பொருளாகும். இது மட்டுமின்றி ஒவ்வொரு பாடலிலும் சுந்தரர் தவநெறியையே வேண்டுகின்றார். அவர் வேண்டிய வண்ணம் இவருக்கு தவநெறியையே இறைவன் அருளினார். அது முதற்கொண்டு தவநெறி ஆளுடையான் என்ற பெயரையும் பெற்றார்.


சுந்தரருக்கு தவநெறியை அருளும் பொருட்டு இறைவன் கிழ அந்தணர் வடிவம் தாங்கி வந்தார் என்று கண்டோம். தற்போது இத்திருக்கோயிலுக்கு அருகே கயப்பாக்கம் என்னும் ஊர் உள்ளது. இங்கு தன் பழைய கிழவடிவத்துடன் காட்சி தந்தமையால்இதற்கு கிழப்பாக்கம் என்று பெயர் ஏற்பட்டது. அதற்கு முன் 'பாக்கம்' என்ற பெயரை மட்டுமே இவ்வூர் கொண்டிருந்திருக்க வேண்டும். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் காலத்திற்குப் பின் கிழப்பாக்கம் என்ற பெயரைப் பெற்றுத் தற்காலத்தில் கயப்பாக்கம் என்ற பெயருடன் விளங்குகிறது.

தவநெறி ஆளுடையரான இறைவன் கோயில் கொண்டுள்ள இத்திருத்துறையூர் பண்ருட்டிக்கு வடமேற்கே சுமார் 10.கி.மீ.தொலைவில் உள்ளது. புகை வண்டி நிலையமும் உள்ளது. இவ்விறைவன் சுந்தரருக்கு குருநாதராய் வந்து அருள் செய்தமையால் சிஷ்ட குருநாதர் என்ற பெயரையும் இவர் பெற்றார். சோலைகள் சூழ்ந்த அழகிய ஊர் திருத்துறையூர்.

சந்தானக் குரவர்களில் ஒருவரான அருள்நந்தி சிவாச்சாரியார் தோன்றி சிவஞான சித்தியார் போன்ற சிறந்த நூல்களை இயற்றி, சைவம் பரப்பி மறைந்ததும் இவ்வூரில்தான். இன்றும் இவருடைய ஜீவசாமதி மக்களால் வழிபாடு செய்யப்பட்டு வருகின்றது. இத்தகைய சிறப்புடைய இத்திருத்தலத்தைக் காண வாருங்கள்! இறையருளைப் பெறுங்கள்.

# சுந்தரர் வழங்கிய ஆன்மீகச் செல்வம்

ச. முத்துசாமி, M.A., B Ed.



## முன்னுரை

சைவ சமயம் மிகவும் தொன்மை வாய்ந்தது. சைவ சமயத்தின் புகழுக்கும் பெருமைக்கும் ஆதாரங்களாக அமைந்தவை கோயில்கள், தெய்வீக நூல்கள், அருளாளர்கள், சைவ சமயத்தில் பன்னிரு திருமுறைகள் தோன்றியதன் மூலம் தெய்வீகப் பாடல்கள் மலர்ந்தன. அவை மக்களிடையே பக்திநெறியை வளர்த்தன. சமயக்குரவர்களில் நால்வராகிய சம்பந்தர் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் சைவத்தை வளர்த்தார்கள். சுந்தரர் வழங்கும் ஆன்மீகம் செல்வம் பற்றி விளக்குவதே இக் கட்டுரை.

## பிறப்பு

திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் சடையனாருக்கும் இசை ஞானியாருக்கும் மகவாக அவதரித்தவர் சுந்தரர். நம்பியாரூரர் என்று திருநாமம் சூட்டி வளர்க்கப்பட்டார். குழந்தையின் பேரழகில் மயங்கியவரை அரசன் நரசிங்கமுனையார் அவரைத் தம் அரண்மனைக்கு கொண்டு சென்று அன்புடன் வளர்த்தார்.

## பதிகங்கள்

ஒன்று முதல் ஏழு திருமுறைகள் அடங்கியது தேவாரம் எனப்படும். மூவர் முதலிகள் என அழைக்கப்படும் சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோரால் பாடப்பட்டவை அவை. முதல் மூன்று திருமுறைகள் சம்பந்தராலும், நான்கு முதல் ஆறுதிருமுறைகள் நாவுக்கரசராலும், ஏழாம் திருமுறை சுந்தரராலும் பாடப்பட்டவை. ஏழாம் திருமுறையில் நூறு பதிகங்களும் ஆயிரத்து இருபத்தாறு பாடல்களும் உள்ளன.

## பக்தி மார்க்கங்கள்

இறைவனை அடைய சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வழிகள்உள்ளன. இவை முறையே தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என அழைக்கப்படும். தாசமார்க்கம் என அழைக்கப்படுவது இறைவனை ஆண்டவனாகவும் நம்மை அடிமையாகவும் கருதி வழிபடுதல். இதை உலகிற்கு எடுத்துக்காட்டியவர் நாவுக்கரசர். இறைவனைத் தந்தையாகவும் நம்மைக் குழந்தையாகவும் நினைத்து வழிபடுதல் சற்புத்திர மார்ககம், இந்நெறியில் வாழ்ந்து காட்டியவர் சம்பந்தர். இறைவனைத் தோழனாகக் கருதி வழிபடுதல் சகமார்க்கம். இதை விளக்கியவர் சுந்தரர். இறைவனை ஆன்மாவுக்கு உயிராய் நினைந்து வழிபடுதல் சன்மார்க்கம். இதன்படி வாழ்ந்தவர் மணிவாசகர்.

## சுந்தரரின் வாழ்க்கையில் நடந்த அற்புதங்கள்

சுந்தரர் தம் வாழ்வில் பல அற்புதங்கள் நடந்தன. சுந்தரரைச் சிவபெருமான் தடுத்தாட் கொண்டது, சுந்தரருக்காக பரவையாரிடம் தூது சென்றது, மனைகள் தோறும் சென்று இரந்து சுந்தரருக்குச் சோறு இட்டது, சுந்தரரைத் தோழனாகக் கொண்டது, முதலையுண்ட பாலகனை உய்ப்பித்தது. குண்டையூர் நெல்மலையைக் கொண்டது, நதியில் இட்ட பொன்னைக்குளத்தில் எடுத்தது, செங்கல் பொன் ஆனது, யானைமீது அமர்ந்து கயிலை சென்றது ஆகியன அவர் வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்களாகும்.

## தடுத்தாட்கொண்டது

பெற்றோர் சுந்தரருக்கு திருமண ஏற்பாடுகள் செய்தனர். விடிந்தால் திருமணம். முதிய அந்தணர் வடிவில் வந்த இறைவன் திருமணத்தை தடுத்து ‘இவன் என்னுடைய அடிமை. இவனுடைய பாட்டன் எனக்கு எழுதிக் கொடுத்த ஓலை இது’ எனக் காட்டினார். நம்பியாரூரர் அம்முதியவரை நோக்கி ‘நீர் என்ன பித்தனா?. நான் உனக்கு அடிமை இல்லை’ என்று மறுமொழி பகர்ந்தார். முதியவர் விடுவதாக இல்லை. திருவெண்ணெய் நல்லூர் சபையில் வழக்கு நடந்தது.

முதியவர் ஓலையில் 'திருநாவலூர் ஆதிசைவனும் ஆரூரன் என்பவனுமான நானும் என் சந்ததியாரும் வெண்ணெய் நல்லூர்பித்தனுக்கு வழிவழியாகஅடிமை' என எழுதப்பட்டிருந்தது. வழக்கு மன்றம் சுந்தரர், முதியவருக்கு அடிமை என தீர்ப்புக் கூறியது. இறைவன் உமையோடு காட்சி தந்தார். 'சுந்தரா! அன்றொரு நாள் உனக்கு வாக்கு அளித்தபடி பிரபஞ்சமாயையில் சிக்குண்டு உழல இருந்த உன்னை மீட்டு வந்தேன்' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

''முன்பு நீ நமக்குத் தொண்டன்முன்னிய
வேட்கைகூரப்
பின்புநம் ஏவலாலே பிறந்தனை மண்ணின்மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வரத்
தொடர்ந்து வந்து
நன்புலமறையோர் முன்னர் நாம் தடுத்தாண்
டோம்''.

இறைவன் சுந்தரரிடம் 'நீ நம்முடன்வன்சொற்களைப் பேசினபடியால் வன்தொண்டன் எனப் படுவாய்' என்றார். இறைவனே பித்தா என அடி எடுத்துக் கொடுக்க சுந்தரர்,

''பித்தா பிறை சூடிபெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன்
மனத்துன்னை
வைத்தாய்ப் பெண்ணைதென்பால்
வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக்காளாயினி அல்லேனெனலாமே''.

எனப்பதிகம் பாடினார்.

## தில்லை சேர்ந்தது

சுந்தரர் தலங்கள்தோறும் வணங்கி தில்லையின் எல்லையை அடைந்தார். கோபுரங்களைத் தொழுதார். திருக்கோயில் சென்று பொன்னம்பலவாணனைச் சேவித்தார். ஐம்புலன்களையும் அடக்கி அவர் இறைவனை வணங்கிய முறையைச் சேக்கிழார்

''ஐந்து பேரறிவுங்கண்களேகொள்ள
அளப்பருங்கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக்குணமொரு மூன்றும்
திருந்துசாத்விகமேயாக
இந்துவாழ் சடையானொடுமானந்த
எல்லையில் தனிப்பெருங்கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்''.

என்று பாடுகிறார்.

## பரவையாரை மணந்தது

கமலினி திருவாரூரில் உருத்திரகணிகையர் குலத்தில் பிறந்து பரவையார் என்ற பெயரோடு வாழ்ந்து வந்தார். வழக்கம்போல் பூசைக்குரிய பொருள்களுடன் கோயிலுக்கு வந்தார் பரவையார். சுந்தரரும் தோழருடன் இறைவனைத் தரிசிக்க வந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் நோக்கினர்; கண்கள் சந்தித்தன. சேக்கிழார் இக்காட்சியை வருணிக்கிறார்.

'கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன்
பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ
புயல் சுமந்து
விற்குவளை பவளமலர்மதி பூத்த விரைக்
கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன் என்று
அதிசயித்தார்'

என்று சுந்தரரும்

''முன்னேவந் ததிர்தோன்றும் முருகனோ
பெரு கொளியால்
தனேரில் மாரனோ! தார் மார்பின்
விஞ்சையனோ!
மின்னேர்செஞ்சடையண்ணல்மெய்ப்பொருள்
பெற்றுடையவனோ
என்னேயென் மனந்திரித்தஇவன் யாரோ!''
என நினைந்தார்

என்று பரவையாரும் ஒருவருக்கொருவர் கண்களால் பேசுகின்றனர். இறைவன் அடியார்களின் கனவில் தோன்றி 'இவர்களது திருமணத்தைச் செய்துவைக்க என்று பணித்தார். அதேபோல் காதலர்களின்கனவிலும்தாம் செய்துள்ள ஏற்பாட்டைத் தெரிவித்தார். பொழுது புலர்ந்தது இறைவன் கட்டளைப்படி திருமணம் நடந்தது. திருவாரூரில் கோயில் கொண்ட இறைவன் தோழராய் வந்து பரவையாரைத் திருமணம் செய்து வைத்ததை

''ஏழிசையாய் இசைப் பயனாய் இன்னமுதா
யென்னுடைய
தோழனுமாய் யான்செய்யுந்துரிசுகளுக்குட
னாகி
மாழையொண் கண் பரவையைத் தந்தாண்
டானை மதியில்லா
ஏழையேன்பிரிந்திருக்கேன் என்னாரூர்
இறைவனையே''

என்று பாடுகிறார்.

## குண்டையூர் நெல் மலையைக் கொண்டது

திருவாரூரில் சுந்தரர் பரவையாருடன் தங்கியிருந்தார். அவர்கள் அடியார்களுக்கு அமுது செய்யும் பொருட்டு குண்டையூர்கிழார் என்பவர் நாள்தோறும்நெல் அனுப்பி வந்தார். மழையில்லாமல் பஞ்சம் ஏற்பட்டது. நெல் அனுப்ப முடியாமல் குண்டையூர் கிழார் வருத்தமுற்றார். இறைவனை வேண்டியவாறே படுத்துறங்கினார். பொழுது புலர்ந்தது. நெல் மூட்டை மலைபோல் கிடந்தது. உடனேகிழார் சுந்தரரிடம் சென்று இறைவன் அருளால் நெல் மலைபோல் கிடந்ததைக் கூறி நெல்லை திருவாரூர் எடுத்துச் செல்லும்படிக் கூறினார். சுந்தரர் இறைவனை வணங்கி

''நீள நினைந்தடியேன் உமைநித்தலுங்கை
தொழுவேன்
வாளனகண்மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலியெம்பெருமான்குண்டையூர்ச்சில
நெல்லுப்பெற்றேன்
ஆளிலைஎம்பெருமான் அவை அட்டித்தரப்
பணியே''

என்ற பதிகம் பாடினார். பூதக்கணங்கள் அருளால் நெல் எடுத்துச் செல்லப்பட்டது. திருவாரூர் எல்லாம் நெற்குவியல்கள் காணப்பட்டன. மக்கள் இறைவனின் அருள் திறத்தையும் சுந்தரரின் பக்திப் பெருக்கையும் எண்ணி வியந்தனர்.

## பொற்கிழி கிடைத்தது

பங்குனி உத்திரத் திருநாளில் தானதருமங்கள் செய்யப்பரவையாருக்குப் பொருள் தேவைப்பட்டது. சுந்தரர் திருப்புகலூர் சென்று இறைவனை வேண்டினார். அன்றிரவு கோயிலிலே படுத்துறங்கினார். கோயில் திருப்பணிக்காக வைத்திருந்த செங்கற்களைத் தலைக்கு வைத்துப் படுத்திருந்தார். பொழுது விடிந்தது. செங்கற்கள் பொன்கற்களாகத் திகழ்ந்தன. இறைவனின் அருளை எண்ணி வியந்து

''தம்மையே புகழ்ந்திச்சையே பேசினுஞ்
சார்வினுஞ் தொண்டர்தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதேயெந்தை
புகலூர் பாடுமின்புலவீர்காள்
இம்மையேதருஞ்சோறுங்கூறையும்
ஏத்தலாம் இடர்கெடலுமாம்
அம்மையே சிவலோகமாள்வதற்
கியாதுமையுறவில்லையே''

என்று பாடுகிறார்:

## மழபாடி

பலதிருத்தலங்களை வழிபட்டு திருவாலம் பொழில் பெருமானை வழிபட்டு இரவுதங்கினார். இறைவன் அவர் கனவில் தோன்றி மழபாடிக்கு வர மறந்தனையோ! எனக் கூறி மறைந்தார். காலையில் விழித்தெழுந்து மழபாடி சென்று இறைவனை அன்புடன்போற்றி வணங்கி

''பொன்னார் மேனியனே புலித்தோலையரைக்
கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்மிளிர்கொன்றை
யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லால் இனியாரை
நினைக்கேனே''

என்று பதிகம் பாடினார்.

## நதியில் இட்ட பொன்னைக் குளத்தில் எடுத்தது

இறைவன் கோயில் திருப்பணிக்காக வேண்டி விருத்தாசலத்தில் பொன் வேண்டும் என இறைவனை வேண்டிப் பதிகம் பாடினார். இறைவன் பன்னிரண்டாயிரம் பொன் தந்தருளினார். 'சுந்தரனே! இப்பொன்னை இம் மணிமுத்தாநதியிலிட்டு திருவாரூர் கமலாலயக்குளத்தில் எடுத்துக் கொள்க' எனக் கட்டளையிட்டார். திருவாரூர் வந்து குளத்தில் தேடினார். பொன் கிடைக்கவில்லை. சுந்தரரை நோக்கிப் பரவையார் ஆற்றிலிட்டுக் குளத்தில் தேடுகின்றீரே எனப் பரிகசிக்கலானார். சுந்தரர் இறைவனை நோக்கி

'பொன் செய்த மேனியீர் புலித்தோலையரைக்
கசைத்தீர்
முன் செய்த மூவெயிலுமெரித்தீர்முது குன்ற
மர்ந்தீர்
முன்செய்தநுண்ணிடையாள் பரவையிவள் தன்
முகப்பே
என்செய்தவாறடியேனிட்டளங்கெடவே.''

'ஏத்தாதிருந்தறியேனிமையோர் தனி
நாயகனே
மூத்தாயுலகுக்கெல்லாமுதுகுன்ற மமர்ந்தவனே
பூத்தாருங்குழலாள்பரவையிவள் தன் முகப்பே
கூத்தாதந்தருள்வாய் கொடியேனிட்டளங்
கெடவே''

என்ற பதிகம் பாடினார். பொற்குவியல் கிடைத்தது.

## சுந்தரருக்குச் சோறு இட்டது

சுந்தரர் தொண்டை நாட்டின் பல தலங்களுக்கும் சென்று பதிகம் பாடி திருக்கச்சூரை அடைந்தார். பசிவேளை வந்தது. அவரால் பசியைத் தாங்க முடியவில்லை. அடியார் துயர் துடைக்கும் ஆண்டவனே அந்தணவடிவில் வந்து அவருக்குச் சோறு இட்டு மறைந்தார், கச்சூர் ஆலக்கோயில் இறைவனை நோக்கி

''முதுவாய் ஓரிகதறமுதுகாட்
டெரி கொண்டாடல்முயல்வானே
மதுவார் கென்றைப்புதுவீசுடும்
மலையான் மகள் தன் மணவாளா
கதுவாய்த்தலையில் பலிநீ கொள்ளக்
கண்டால் அடியார்கவலாரே
அதுவே ஆமாறிதுவோகச்சூர்
ஆலக்கோயில் அம்மானே''

எனப் பதிகம் பாடினார்.

## சங்கிலியார் திருமணம்

சுந்தரர் திருவொற்றியூர் இறைவனை வழிபடச்சென்றபோது சங்கிலியாரைச் சந்தித்தார். அனிந்திதை என்பவள் ஞாயிறு கிழாரின் மகளாகப் பிறந்து சங்கிலியார் என்ற பெயருடன் அங்கு வாழ்ந்து வந்தார். முன்வினைப் பயனால் அவர்களுக்குத்திருமணம் நடந்தேறியது. சங்கிலியாரைப் பிரிவதில்லை எனச் சத்தியம் செய்து கொடுத்து அவளை மணந்தார். சத்தியத்தை மீறி திருவாரூர் செல்ல முற்பட்டபோது கண் பார்வையை இழந்தார். காஞ்சியை அடைந்து கச்சிஏகம்பனை வழிபட்டு கண் பார்வை பெற்றார். அப்போது பாடிய பதிகம்

''ஆலந்தான் உகந்தமுது செய்தானை
ஆதியை அமரர்தொழுதேத்தும்
சீலந்தான்பெரிதுமுடையானைச்
சிந்திப்பாரவர் சிந்தையுளானை
ஏலவார்குழலாள் உமைநங்கை
என்றும் ஏத்திவழிபடப்பெற்ற
காலகாலனைக் கம்பனெம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே''

## முதலையுண்ட பாலகனை மீட்டது

கொங்கு நாட்டைச் சேர்ந்த திருப்புக் கொளியூர் அவிநாசி இறைவனை தரிசிக்க சுந்தரர் வந்தார். ஒரு வீட்டில் மங்கல ஒலியும் ஒரு வீட்டில் அழுகை ஒலியும் கேட்டன. சுந்தரர் அதற்கான காரணத்தை அங்கிருந்தவர்களிடம் வினவினார். இரண்டு வீட்டுச் சிறுவர்களும் முன்பு குளத்தில் நீராடச் சென்றனர். ஒருவனை முதலை விழுங்கி விட்டது. அவனுக்கு இன்று நினைவுநாள். மங்கல ஒலி வந்த வீட்டில் அவனுக்கு இன்று உபநயனம் நடைபெறுகிறது என்று அறிந்தார். அழுகை ஒலி வந்த திசையை நோக்கிச் சென்றார். மகனை இழந்த பெற்றோர் அவர் திருவடியில் விழுந்து வணங்கினர். ஆரூரர் உள்ளம் உருகினார். சிறுவனை முதலை விழுங்கிய மடுவினை நோக்கிச் சென்றார். இறைவனை மனதில் நினைத்து

''உரைப்பார் உரையுகந்துள் கவல்லார் தங்களுச்சியாய்
அரைக் காடரவா ஆதியும் அந்தமும் ஆயினாய்
புரைக் காடு சோலைப் புக்கொளியூர் அவிநாசியே
கரைக் கான்முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே''

என்று திருப்பதிகம் பாடினார். முதலை அப்பாலகனை கரையின் கண் கொணர்ந்து உமிழ்ந்தது. அப்பாலகனுக்குச் சுந்தரர் தாமே உடனிருந்து உபநயனம் செய்வித்தார்.''

## நமச்சிவாயப்பதிகம்

ஐந்தெழுத்து மந்திரத்தை என் நாவானது சொல்லிக் கொண்டிருக்கும் என அவர் பாடிய பதிகம்:

''மற்றுப் பற்றெனக் கின்றி நின் திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிற
வாத தன்மைவந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்தும் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடு முடி
நற்றவாஉனை நான் மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே''

## மக்களுக்கு கூறும் அறவுரைகளாக அமைந்த பாடல்கள்

''தோற்றம்உண்டேல் மரணம் உண்டு துயர மனை வாழ்க்கை
மாற்றம் உண்டேல் வஞ்சம் உண்டு நெஞ்ச மனத்தீரே
நீற்றர் ஏற்றர் நீலகண்டர் நிறை புனல் நீள் சடை மேல்
ஏற்றர் கோயில் எதிர்கொள்பாடி என்பதடைவோமே''

''இன்பம் உண்டேல் துன்பம் உண்டு ஏழை மனை வாழ்க்கை
முன்பு சொன்னால் மோழைமையான் முட்டை மனத்தீரே
அன்பரல்லால் அணிகொள் கொன்றை அடிகளடிசேரார்
என்பர் கோயில் எதிர் கொள் பாடி என்பதடைவோமே''

''வாழ்வாவது மாயம் அது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பறிதான்
தாழாது அறஞ்செய்மின் தடங்கண்ணான் மலரோனும்
கீழ்மேல்உறநின்றான் திருக்கேதாரம் எனீரே''

## யானை மீது அமர்ந்து கயிலை சென்றது

சுந்தரர் திருக்கயிலை செல்ல இறைவனை வேண்டினார். இறைவன் வானவர்களை நோக்கி நமது ஆரூரானை அயிராவணம் என்னும் வெள்ளை யானை மீது ஏற்றி அழைத்து வாருங்கள் எனக் கட்டளையிட்டார். சுந்தரர் வெள்ளை யானை மீது ஏறி கயிலை நோக்கிச் செல்லும் பொழுது

''இந்திரன் மால் பிரமன் எழிலார்மிகுதேவ ரெல்லாம்
வந்தெதிர்கொள்ள என்னை மத்தயானை அருள்புரிந்து
மந்திரமாமுனிவர் இவனாரென எம்பெருமான்
நந்தமரூரன் என்றான் நொடித்தான்மலை யுத்தமனே'

'மந்திரம் ஒன்றறியேன் மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தரவேடங்களால் துரிசேசெயும் தொண்டனேனை
அந்தரமால் விசும்பில் அழகானை அருள்புரிந்த
துந்தரமோ நெஞ்சமே நொடித்தான் மலை உத்தமனே''


என்னும் பதிகம் பாடினார்:

இறைவன் சுந்தரருக்கு அருள் புரிந்தான். சுந்தரர் இறைவனுக்குத் தொண்டு செய்யும் ஆலால சுந்தரராகி முன் செய்த திருத்தொண்டினைச் செய்யும் பேறு பெற்றார்.


## நிறைவுரை

சுந்தரர் இறைவனைத் தோழனாகக் கருதி வழிபடும் சகமார்க்க நெறியில் வழிபட்டவர். அவர் பாடிய தேவாரப் பாக்களை நாள் தோறும் ஓதி வழிபடுவோமாக! அவர் வழங்கிய ஆன்மீகச்செல்வத்தை நாமும் அனுபவிப்போம்.

''வாழி திருநாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி''



# பன்னிரு ஆழ்வார்கள்



டாக்டர் பருத்தியூர்
கே. சந்தானராமன்

## 11. திருமங்கையாழ்வார்

திருக்குறையலூர்என்பதுஒரு சோழநாட்டுச் சிற்றூர். அங்கு, கள்ளர் குடியில் சோழனின் படைத்தலைவர் ஒருவரின் மகனாகத் தோன்றியவர் திருமங்கையாழ்வார். திருமாலின் 'சார்ங்கம்' என்ற வில்லின் அம்சமாகக் கார்த்திகை மாதத்தில் கிருத்திகை நட்சத்திரத்தில் திருமங்கையாழ்வார் அவதரித்தார்.

தமது குமாரன் நீல நிறத்துடன் விளங்கியதைக் கண்ட தந்தை 'நீலன்' என்று பெயரிட்டு அழைத்தார், நீலன் போர்த் தொழிலில் நல்ல பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றார். அதனால் அவரும் சோழனின் படைத்தலைவராகப் பொறுப்பு ஏற்றார். எதிரிகள் நாட்டின் மீது படையெடுத்த போதெல்லாம் தலைமையேற்றுச் சென்று வெற்றி வாகை சூடி வந்தார் நீலன். எனவே சோழன் அவரைப் பாராட்டிப் 'பரகாலர்' என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கினார். 'எதிரிகளின் எமன்' என்பது அதன் பொருள்.

அத்துடன் வீரமும், திறமையும் மிக்க நீலனை 'திருவாலி' என்ற நிலப்பகுதிக்குச் சிற்றரசனாகவும் ஆக்கினார். நீலன்திருமங்கை என்ற ஊரைத் தலைநகரமாகக் கொண்டுச் சிற்றரசு செலுத்தி வந்தார்.

திருமங்கை நாட்டில் திருவெள்ளக்குளம் என்ற ஊரில் நல்ல நீர்ப் பொய்கைகள் இருந்தன. அங்குத் தேவ மகளிரும் வந்து நீர்விளையாட்டுச் செய்து செல்வதுண்டு. அப்படி நீர் விளையாட்டுக்கு வந்த ஒரு தெய்வமகள் தன்னுலகுக்குத் திரும்பாமல் மானிடப் பெண்ணுருக் கொண்டு அங்குத் தங்கி விட்டாள். வைணவரான வைத்தியர் ஒருவர் அவளைக் கண்டு விசாரித்தார். அவள் தன்னைத் தன் தோழிகள் தனியே விட்டுச் சென்றனர் என்றும் தன்னை இனிப் பாதுகாக்க வேண்டியது அவ்வைத்தியரின் கடமை என்றும் கூறினாள். மகப்பேறு இல்லாதிருந்த வைத்தியர் மகிழ்ந்தார். தமதில்லத்திற்கு அவளை அழைத்துச் சென்றார். அவர் அப்பெண்ணைக் கண்ட பொழுது அவள் கையில் குமுதமலரை (அல்லி மலரை) வைத்திருந்ததால் அவளைக் 'குமுத வல்லி' என்று பெயரிட்டு வளர்த்து வந்தார். வைத்தியர் தம்பதியரின் அரவணைப்பில் வளர்ந்து திருமணப் பருவமும் எய்தினாள் குமுதவல்லி.

குமுதவல்லியின் குணநலன்களையும் அழகையும் பற்றிக் கேள்வியுற்ற நீலன்அவளைக் கண்டு வரச் சென்றார். அவளிடம் மையல் கொண்டு அவளையே மணந்து கொள்ள விரும்பினார். உரிய முறையில் வைத்தியரிடம் பெண் கேட்டார். அவரும் பெண்ணைத் தர உடன்பட்டார். ஆனால் குமுதவல்லி 'பன்னிரு திருமண் தரித்தவரும் திருவிலச்சினை பெற்ற வருமான வைணவருக்கே நான் மாலையிடுவேன்' எனக் கூறினாள்.

நீலன் திருநாறையூர் சென்று நம்பி என்ற பெருமாளிடம் வேண்டிச் சங்கு சக்கர முத்திரைகளையும், பன்னிரு திருமண்ணையும் பெற்று வந்தார்; அப்போது குமுதவல்லி 'நீர் ஓராண்டுக் காலத்துக்கு நாள்தோறும் ஆயிரத்தெட்டு ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் திருவமுது செய்விப்பதாக உறுதிமொழி அளித்தால்தான் நான் உமக்கு மாலையிடுவேன்' என்றாள். திருமங்கை மன்னரும் அவ்வாறே உறுதிமொழி அளித்துக் குமுதவல்லியை மணந்து கொண்டார்.

தமது உறுதிமொழிப்படி பரகாலர் பாகவதர்களுக்குத் திருவமுது செய்விக்கப் பெரும் தொகை செலவிட்டார். அதனால் சோழ மன்னனுக்குச் செலுத்த வேண்டிய 'திரை' நின்று விட்டது. தனக்குச் சேரவேண்டிய கப்பம் வராததால் சோழன் வெகுண்டான். ஏவலாட்களை அனுப்பினான். நீலன் 'இன்று நாளை, அதற்கடுத்த நாள்' என்று தவணை கூறி அனுப்பினார். மேலும் வெகுண்ட சோழன் படைத்தலைவனை அனுப்பினான். அவனுடன் போரிட்டு அவனைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தார் பரகாலர்.

பிறகு, சோழனே நேரில் வந்து எதிர்த்தான். நீலன் சோழப் படைகளையும், வென்றார். மன்னனைக் கொல்லாது நின்றார். அப்போது சோழன் 'உமது படைத்திறத்தையும், பேராற்றலையும் கண்டு நான் மிகவும் மகிழ்ந்தேன். விரைவில் திரைப் பணத்தைச் செலுத்தி விடுக என்றார். அத்துடன் தந்திரமாக நீலனைத் தேவாலயம் ஒன்றில் சிறை வைத்து விட்டான். அங்கு திருமங்கை மன்னர் மூன்று நாட்கள் பட்டினி கிடந்தார்.

அதுகண்ட காஞ்சி வரதராஜப் பெருமாள் திருமங்கை மன்னரின் கனவில் தோன்றினார். 'உமக்குத் தேவையான பொருளை நாம் தருகிறோம். நீர் காஞ்சிக்கு வருக என்று அருளிச் செய்தார். அதனைக் கேட்ட நீலன் 'காஞ்சியில் சோழனுக்குச் செலுத்த வேண்டிய நிதி இருக்கிறது. அங்கு வந்தால் அதனை எடுத்துக் கொள்ளலாம்' என்று சோழ அமைச்சரிடம் கூறினார்.

அமைச்சரும் நீலனும் காஞ்சி சென்றனர். அங்கு நிதி எளிதில் கிடைக்கவில்லை. மீண்டும் பெருமான் வேகவதி நதிக்கரையில் நிதிக் குவியல் இருக்கிறதெனக் குறிப்பிட்டு உரைத்தார். அவ்வாறே அங்குப் பெரு நிதி கிடைத்தது. அமைச்சரிடம் கப்பத் தொகையைக் கொடுத்துவிட்டு எஞ்சிய நிதியுடன் திருமங்கை நகருக்குத் திரும்பினார் நீலன். அடியார் திருவமுதுத் தொண்டு தொடர்ந்தது.

தனக்குரிய 'திரை' கிடைத்ததையும் நீலன் பெருநிதி பெற்றதையும் அமைச்சர் வழியாக அறிந்த சோழன் ஆழ்வாரின் மகிமையை உணர்ந்தார். ஆழ்வாரைப் பட்டினி போட்ட பாவத்தைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் கப்பத்தொகை அனைத்தையும் திருவமுதுத் தொண்டுக்கே திருப்பிக் கொடுத்துவிட்டான்.

பெருமாள் கொடுத்த பொருள் அனைத்தையும் ஆழ்வார் அடியார்க்கு அமுது செய்வித்ததிலேயே செலவிட்டார். அதனால் மீண்டும் பொருள் பற்றாக்குறை ஏற்பட்டுவிட்டது. பாகவத உபசரிப்புச் சிறிதும் தடையின்றி நடக்க வேண்டுமெனக் கருதியஆழ்வார் வழிப்பறிக் கொள்ளையடிக்கவும் துணிந்துவிட்டார். நீர்மேல் நடப்பான், நிழலில் ஒதுங்குவான், தாளூதுவான்., தோலா வழக்கன் என்ற நான்கு வீரர்களைத் தனக்குத் துணையாகக் கொண்டு வழிப்பறி செய்து பெருநிதி திரட்டித் திருவமுதுத் தொண்டைத் தொடர்ந்து செய்தார்.

திருமணங் கொல்லை என்ற இடத்தில் ஓர் அரச மரத்தடியில் பதுங்கியிருந்த திருமங்கை மன்னனின் வழியே திருமால் பிராட்டியுடன் புதுமணக் கோலத்தில் எழுந்தருளினார். இருவரும் கணக்கில்லா மதிப்புடைய அணிகலன்களை அணிந்திருந்தனர். அவர்களையும் வழிமறித்து,அணிகலன் ஆடைகள் அனைத்தையும் தன்வயப்படுத்திக் கொண்டார். பெருமாள் காலில் அணிந்திருந்த மோதிரம் மட்டும் கழற்ற முடியாமல் போக, அதனையும் விடாமல் தன் பற்களால் கடித்து வாங்கினார்.

அதுகண்ட பெருமாள் திருமங்கை மன்னனை 'நீர் கலியனோ!' என வினவினார். அதாவது, 'பலவானோ! அல்லது வலிமையுடையவனோ!' என்று வியந்து கேட்டார். அதனால் திருமங்கையாழ்வாருக்குக் 'கலியன்' என்ற பெயர் ஏற்பட்டது.

பெருமாளிடம் வழிப்பறி செய்து கட்டி வைத்த ஆபரண மூட்டையை ஆழ்வார் எடுக்க முயன்ற பொழுது அதனை அசைக்கவும் முடியாமல் வியந்து நின்றார். பெருமாளை 'நீர் என்ன மந்திரம் செய்தீர்!' என்று கேட்டார்.

பெருமாளும் சிரித்தபடி 'உமக்கும் அம் மந்திரத்தைச் சொல்கிறேன்' எனக் கூறி ஆலிநாடார் செவியில் திருவெட்டெழுத்து மந்திரத்தை உபதேசித்தருளினார். பிறகு, கருடாழ்வார் மீது பிராட்டியுடன் காட்சியருளினார்.

பெருமாளின் உபதேசமும், அவரது திருவடி சம்பந்தமும் கணநேரத்தில் கலியனைப் பெரும் ஞானியாக்கிவிட்டன. நால்வகைக் கவிகளையும் இயற்றும் ஆற்றலும் உண்டாயிற்று. தான் பெற்ற மந்திரச் சிறப்பை

''குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயினவெல்லாம்
நிலந்தரஞ் செய்யும்; நீள் விசும்பு அருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும், மற்றும் தந்திடும், பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்''

எனப் புகழ்ந்துரைத்தார். பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய ஆறு பிரபந்தங்களை அருளினார் திருமங்கையாழ்வார்.

இவர் பத்ரிகாச்ரமம், சாளக்கிராமம் நைமிசம் முதலான வடநாட்டுத் திருப்பதிகளைத் தரிசித்துத் தென்னாடு திரும்பினார். தொண்டை நாட்டுத் திருப்பதிகளையும் தரிசித்தார்.

பல தலங்களையும் தரிசித்துப் பின்பு, பெருமானின் கட்டளைப்படி விமானம் அமைத்தல், மதில் எழுப்புதல் போன்ற திருக்கோயில் திருப்பணிகளைச் செய்து வந்தார்.

மனைவி குமுதவல்லியுடன் திருக்குறுங்குடியில் சிலகாலம் யோக நிஷ்டையில் இருந்து தமது நூற்றைந்தாவது வயதில் திருமங்கையாழ்வார் பரமபதம் எய்தினார்.

# பவஆண்டு தைத்திங்கள் பொங்கல் வாழ்த்து

புலவரேறு ஆ. ஜெ. இராமசாமி

பருதிமால் பதமலர் போற்றி! போற்றி!

வாழ்க வண்டமிழ்! வளர்க தமிழகம்! உயர்க வையகம்!

பல்லுயிரும் பல்லாண்டு நலமாய் வாழ்க! வாழ்க!

**பருதிமால் வணக்கம்,** (நேரிசை வெண்பா)

அண்டமெலாம் ஆக்கல் அளித்தல் அழித்தல் செய்

ஒண்திருமாலைப்போல் ஒப்புலார் ஆர் - கண்கண்ட

தெய்வச் செழுஞ்சுடரே தீம் பொங்கல் ஏற்றினிதே

மெய்ப்பொருள்யாம் மேவிடநீ பார்.

(எழுசீர்விருத்தம்)

**நற்கதிநல்குக நற்கதிரோய்**

மங்களம் எங்கணும் முழங்கிடமாண்பவ

**மாத்தைப் பொங்கல்** மகிழ்வுடனே

பொங்கிப் படைத்தலைப் பொலிவுற வேற்றுப்

புவியில் நிலம் நீர்குடிவளங்கள்

புங்கமாய் ஓங்கிப் புதுநலம் நல்கவும்

பொற்புறு கலைத்தொழில் ஓங்கிடவும்

எங்குள மக்களும் குறள்நெறி ஒழுகவும்

இனியதோர் கதியருள் எழிற் பருதி!

(எண்சீர் விருத்தம்)

(செப்பரிய செயல்புரியும் செங்கதிரோய்வாழி)

நிலவுலகில் பல்லுயிரும் நீடு வாழ

நேர்மைநெறி நெகிழாநன் னெறியின் நின்று

சொலற்கரிய ஐம்பூதம் சொல்ல வொண்ணாச்

சூக்குமமாய்ச் செயல்புரியச் செய்துநாளும்

நவபகலோ டிரவுநிலா ஒளியை நல்கி

நவிலவொணா ஒப்புரவோ டுதவி செய்தே

உலகினுக்கிவ் வோராழித் தேரிற் போந்தே

ஒளிர்கதிரோய்! உவப்புடனே நீடு வாழ்க!

(பூசலின்றி நேசமாய் வாழ விஞ்ஞானம் ஓங்கச்செய்க)

நன்மைதரு விஞ்ஞானம் நண்ணிற் றென்று

நாம் மகிழ்ந்து வரவேற்கும் போதிற் பொல்லாக்

கன்மனத்துக் கடுங்கொடியோர்குண்டு போட்டு

கனல்மூட்டிக் களவுகொலைசூறை யாடல்

தென்னெயின்காய் வெட்டுதற்குத் தந்த வாளால்

தீஞ்சுவைநற் பால்பசுவை வெட்டல் நன்றோ!

பொன்மனச்செங் கதிரவனே! பொற்பாய் மாந்த

பூசலின்றிநேசமுடன் வாழச்செய்வாய்.

நலம்தரும் விஞ்ஞானம் வாழ்க! வாழ்க! வளர்க!

குலம்களையும் கோடரிக்காம்பாம் அஞ்ஞான

விஞ்ஞானம் அழிக ஒழிக

பூசலின்றி நேசமுடன்புவியோர் பொற்பாய் வாழ்க! வாழ்க!

நன்மைநாடுக, நன்மை நவில்க, நன்மை நடாத்துக

பொங்கலோ பொங்கல் பொங்கலோ பொங்கல்

பொங்கலோ பொங்கல்

பொங்கும் மங்களம் வையகம் எங்கும் பொலிக! பொலிக!

# பேரின்பம்

## இளையஞானி

மனிதர்கள் மொழியால், இனத்தால் மதத்தால் கருத்து வேறுபாடு கொண்டவர்கள் என்றாலும், ஒன்றை விரும்புவதில் மட்டும் ஒற்றுமையாக நிற்பார்கள்; அது என்ன தெரியுமா! ஆனந்தம். எல்லோரும் தமக்கு ஆனந்தம் வேண்டும் என்றுதான் நினைப்பார்கள். ஆனால் துன்பம் வேண்டுமென்று ஒரு புழுகூட நினைக்காது.

ஆனந்தம் வேண்டும்தான். ஆனந்தத்தை பெறும் வழி யாது? சிலர் ஆனந்தத்தைப் பெற நினைத்துத் துன்பத்தையே பெறுகிறார்கள். சிலர் துன்பத்தையே ஆனந்தமாக எண்ணி மயங்கி உழலுகின்றார்கள். இது ஆமைக் கதை போன்றதுதான்.

சிலர் ஆமையைத் தின்பதற்காக அதைப் பிடித்து வருவார்கள். அதைக் கொல்வது கடினம். அதன் ஓடு மிக உறுதியானது. இதனால், அவர்கள் என்ன செய்வார்கள் தெரியுமா? மூன்று கற்களை அடுப்புப் போல வைத்து, அதன்மீது இரும்புச்சட்டியை வைத்து, தண்ணீர்விட்டு அதில் ஆமையை எடுத்து விடுவார்கள். கீழே கட்டையை வைத்துத் தீமூட்டுவார்கள். தண்ணீர் வெதுவெதுப்பாகச் சூடாகும். பதமான சூடு ஆமைக்குப் பெரும் ஆனந்தத்தை உண்டாக்கும். இதில் மகிழ்வுடன் நீந்தி விளையாடும். இதையே சுவர்க்கமாக எண்ணும். ஆனால் நேரம் ஆக, ஆக நீர் கொதிக்கும். இதைத் தாங்காது ஆமையின் உயிர் அழியும்.

தனக்கு நேர்ந்த துன்பத்தை அறியாமல், இன்பமாகவே நினைத்து, ஆனந்தத்தாண்டவமாடுகிறது, ஆமை. இதைப் போலத்தான் மனிதர்களும் இருக்கிறார்கள்.

வாதம், பித்தம், சிலேத்துமம், என்ற மூன்றும் மூன்று கண்கள். இந்த உடம்பு இரும்புச் சட்டி; ஆசை, தண்ணீர். அதில் வாழ்கின்ற உயிர், ஆமை. தீவினையாகிய தீயை மூட்டியுள்ளார்கள். இந்த இடர்ப்பாட்டில் வாழும் உயிர்கள் உணவு, உடை முதலிய பொருள்களை நாடி ஓடித் துன்பத்தை இன்பமாகக் கருதி உழலுகின்றன.

இதைத்தான் அப்பர் பெருமான்

''வளைத்துநின் றைவர் கள்வர்
வந்தெனை நடுக்கம் செய்யத்
தளைத்துவைத் துலையிலேற்றித்
தழல்எரி மடுத்த நீரில்
திளைத்துநின் றாடுகின்ற
ஆமைபோல் தெளிவிலாதேன்
இளைத்துநின் றாடுகின்றேன்
என்செய்வான் தோன்றினேனே''

என்று பாடுகின்றார்.

இந்த ஆமைபோலவே பாரதகுல சக்கரவர்த்தி யயாதி நினைத்து, உலக இன்பத்தையே நுகர்ந்து உழன்றான். பாண்டவர்களின் முன்னோர்களில் ஒருவனான யயாதி சக்கரவர்த்தி சிறந்த அரசன். மக்களுக்கெல்லாம் நன்மை செய்வதில் பெரு விருப்பமுடையவன். தேச மக்களால் பெரிதும் விரும்பிப் பாராட்டப் பெற்ற அரசனாய்த் திகழ்ந்தான்.

ஆனால் உலக இன்பங்களில் பெரு விருப்பமுடையவனாக இருந்தான். உடலால் நுகரப்படும் நுகர்ச்சியையே பேரின்பம் என நினைத்து நாள்தோறும் அதிலே தோய்ந்து கிடந்தான்.

தன் மனைவி தேவயானியை விடுத்து, தேவயானியின் தோழியான சர்மிஷ்டையையாருக்கும் தெரியாமல் மணந்தான். இது தேவயானியின் தந்தையான சுக்ராசாரியாருக்குத் தெரிந்தது. தன்னிடம் செய்த சத்தியத்தை அவன் மீறிவிட்டதை அறிந்து பெருங் கோபம் கொண்டு 'உடனே கிழத்தன்மை அடைவாயாக' என்று சபித்தார்.

நடுஇளமைப் பருவத்தில், யயாதி கிழத்தன்மை அடைந்தான். இனி உடலால் நுகரப்படும் இன்பத்தைப் பெறமுடியாது என்று எண்ணிய யயாதி, முனிவரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான்.

''முனிவரே! என் பிழையைப் பொறுத்தருள வேண்டும். நான் உங்கள் மகளின் கணவன். உங்கள் மகளை நான்தான் காப்

பாற்றினேன். இதையெல்லாம் மனதில் கொண்டு எனக்கு அருள வேண்டும்' என்று மன்றாடினான்.

'அரசனே! நீ மூப்பை அடைந்தாய். அதை என்னால் மாற்றயியலாது. ஆனால் உன் மூப்பை வேறொருவனுடைய சம்மதம் பெற்று நீயே மாற்றிக் கொள்ளலாம். அவன் இளமையை நீ பெற்று உன் மூப்பை அவனுக்கு அளிக்கலாம்' என்று ஆறுதல் சொல்லி அனுப்பினார்.

யயாதிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. தன்னுடைய மூப்பை ஏற்றுக் கொள்ளுகின்ற இளைஞர்கள் எங்கே இருப்பார்கள் என யோசித்தான். பிறகு தன்னுடைய மகன்கள் ஐவரில் யாரேனும் ஒருவனிடத்தில் இளமையை யாசித்துப் பெறலாம் என நினைத்து அரண்மனைக்கு வந்தான்.

சக்கரவர்த்தி யயாதி கிழத்தன்மை அடைந்து நிற்பதைக் கண்டுஅனைவரும்திகைத்தனர். பின்னர் சாபம் பற்றிய செய்திகளை அறிந்து துன்பப்பட்டனர்.

யயாதி மூத்த மகனைப் பார்த்துக் கேட்டான்.

''என் தலைமகனே! எதிர்பாராத சாபத்தால் நடுப்பருவ இளமையை இழந்து விட்டேன். என் வாழ்வின் பெரும் பகுதியை நாட்டுக்காகவும், உங்களுக்காகவும் உழைத்திருந்தேன். நான் போகங்களைத் திருப்திப்பட அனுபவிக்கவில்லை. மகனே, நீ என் மூப்பை ஏற்று உன் இளமையைக் கொடு. இப்படிச் செய்தால் இந்த இராஜ்ஜியத்தை உனக்குத் தருகிறேன்.''

முதல் மகன் சொன்னான்.

''தந்தையே! இளமையைத் தந்துவிட்டு இந்த நாட்டை ஆள்வதில் என்ன சுகம் கிடைக்கும். பெண்களும், வேலைக்காரர்களும் இது கண்டு சிரிப்பார்களே! என்னால் முடியாது.''

மகனின் பதிலைக் கேட்டு கலங்கினான யயாதி. இரண்டாம் மகனைப் பார்த்தான்.

''தந்தையே! பலத்தையும் அழகையும் மட்டுமல்லாமல் அறிவையும் அழிப்பதான முதுமையைப் பெற்றுக் கொள்ளச் சொல்கிறீர்! இதையேற்க எனக்குத் தைரியமில்லை' எனறு அவனும் மறுத்து விட்டான்.

மூன்றாம் மகனைப் பார்த்தான், யயாதி.

''ஒன்றும் செய்ய முடியாத கிழத்தன்மையால் உயிருடன் இருந்து என்ன பயன்! என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. வருந்தற்க, தந்தையே!''

இவனும் மறுத்ததைக் கண்ட யயாதிக்கு துக்கம் மேலும் மேலும் அதிகமாகியது. நான்காவது மகனை நோக்கிக் கேட்டான்.

'மகனே! நீயாவது உன் மூப்பை ஏற்பாயா? ஒரு சில காலத்திற்கு உன் இளமையைத் தந்தால், உலக போகங்களை திருப்தியாக அனுபவித்து விட்டுப் பிறகு மீண்டும் உன்னிடம் திருப்பித் தந்து விடுகிறேன். என்ன சொல்கிறாய்!'

'என் தந்தையே! நீங்கள் அறியாதது இல்லை. கிழவர்கள் தம் உடல் அசுத்தத்தைப் போக்கிக் கொள்வதற்கே பெரும்பாடுபட வேண்டியுள்ளது. இதற்கே கூடப் பிறர் உதவியை எதிர்பார்த்து நிற்க வேண்டியுள்ளது எல்லாவற்றையும் இழந்து, வாழ்க்கையைத் துன்பத்துடன் நடத்த நான் விரும்பவில்லை.''

யயாதி நம்பிக்கை இழந்தான். கடைசி மகனான புருவின் கைகளைப் பிடித்துக் கொண்டு,

'மகனே!...என்னைக் கைவிட்டு விடாதே. தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவது மகனின் கடமை என்று உணர்ந்தவன் அல்லவா நீ! உலக போகங்களைத் திருப்தியாக அனுபவித்து விட்டு உன்னிடம் திருப்பித் தந்து விடுகிறேன். மகனே! என் மூப்பை ஏற்றுக் கொள்' என்று கெஞ்சினான்.

''என் இனிய தந்தையே! உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுகிறேன். என் இளமையை தந்து உங்களது மூப்பையும் ராஜ பாரத்தையும் ஏற்கிறேன்'' என்று ஐந்தாவது மகன் புரு சொன்னான்

யயாதி பெரு மகிழ்வெய்தினான் அப்போதே உலக போகங்களை அனுபவித்து விட்டதாக நினைத்தான.

''தந்தையே! உலக போகங்களை யாராலும் திருப்தியாக அனுபவிக்க முடியாது. நெய்யினால் அக்னி ஆறாமல் மேலும் மேலும் பரவுவதைப் போல, ஆசை அதிகமாகுமே தவிர தணியாது. உடலால் நுகரப்படும் இன்பத்தை விட ஆன்மாவால் நுகரப்படும் இன்பமே பேரின்பமாகும். இதுவே திருப்தி தரக்கூடியதும் நிலையானதும் ஆகும்.'

புருவின் தத்துவங்களையெல்லாம் கேட்க கூடிய நிலையில் யயாதி இல்லை. அவன் ஆனந்தத்தையே நினைத்துக் கொண்டிருந்தான்.

'மகனே! மூப்பை ஏற்கிறாயா!' என்று கேட்டான். மகன் புரு தலையசைத்ததும், சுக்கிராச்சாரியார் உபதேசித்த மந்திரத்தைக் கூறித் தன்மகன் புருவைக் கட்டி அணைத்துக் கொண்டான். அடுத்த நொடியில் யயாதி இளமைப் பருவத்தை எய்தினான். மகன் புரு

என்னவானான் என்று கூடப் பார்க்காமல் தன் மனத்திற்குப் பிடித்த சர்மிஷ்டையைத் தேடிச் சென்றான்.

ஆனந்தத்தில் திளைத்தான். வெதுவெதுப்பான சுடுநீரில் ஆமை திளைத்து ஆடியது போலவே ஆடினான். ஒரு நிமிடத்தையும் வீணாக்காமல் உலக போகங்களை நுகர்ந்தான்.

பல காலங்கள் ஆகியும் யயாதிக்கு முழு திருப்தியேற்படவில்லை. இன்னும் குறை யிருப்பதாகவே மனதில் பட்டது. உலக போகங்கள் நுகரும் போது இன்பமாகவும், நுகர்ந்த பின்பு அதில் ஒன்றுமில்லாதது போல வும் ஆனது. ஆனால் மீண்டும் நுகர ஆசை ஏற்பட்டது.

முதலில் ஆசை, நுகர்தல், பின் ஒன்று மில்லாத வெறுமை, மீண்டும் ஆசை-இப்படிச் சுற்றிச் சுற்றித்தான் வரவேண்டுமா? நிலை, யான இன்பம் கிடையாதா? இந்த இன்பம் நிலையாக இருக்காதா?''

பல்வேறு சிந்தனையளவில் சிக்கி உழலும் போது தன மகன் புரு சொன்னது நினைவுக்கு வந்தது. ஆசையென்பது நெய்தானோ? தணி யவே தணியாதா? யாராலும் உலக போகங் களை முழுமையாக அனுபவிக்க முடியாது என்பது உண்மைதானோ? இனி திருப்தி ஏற் படாத உடலால் நுகரப்படும் இன்பம் எதற்கு? ஆன்மாவால் நுகரப்படும் நிலைத்த பேரின் பத்தை அடைய வேண்டும்.

மகன் புருவின் நற்சொற்கள், யயாதிக்கு ஒரு புதுப்பாதை போட்டுத் தந்தது.

யயாதி விழிப்புற்றான்;

அரண்மனைக்குச் சென்றான்;

மகன் புருவை அழைத்தான்.

'மகனே! நிலைத்த பேரின்பமடையப் போகிறேன். என் மூப்பைக் கொடு. நீ இளமை யோடு இவ்வாட்சியைத் தொடர்ந்து நடத்து வாயாக' என்று கூறிவிட்டு மூப்பைப் பெற் றான். பிரம்ம நிலை எய்தவேண்டித் தவம் புரியக் காட்டுக்குப் போனான் யயாதி. விரைவி லேயே நிலைத்த பேரின்பத்தை எய்தினான்.

**ஞான விதை :**

'உடலால் நுகரப்படும் இன்பத்தைவிட, ஆன்மாவால் நுகரப்படும் இன்பமே பேரின்பமாகும். இதுவே நிலையான தும் ஆகும்.''

## கடவுளை நம்பு

**கவிஞர் அ. சுப்பையன்**

கடவுளை நம்பு; கடவுளை நம்பு
கைவிட மாட்டாரே!
திடமாய் நம்பு; தெய்வம் உண்டு
தேடி வருவாரே!
எல்லாம் வல்லோன் எங்கும் நிறைந்தோன்
இறைவன் ஒருவன்தான்.
அல்லும் பகலும் அவனை நினைத்தால்
அகலும் துன்பம்தான்.
ஒருமன தோடு உரக்க அழைத்தால்
ஓடி வருவாரே!
அருளும் பொருளும் அள்ளித் தந்து
அணைத்துக் கொள்வாரே!
கற்றதி னாலே பயனென் கூறு;
கைதொழ வேண்டாமோ!
பற்று அற்றான் பற்றினை நாளும்
பற்றிடல் வேண்டாமோ!
செல்வம் வந்தால் மறந்திடப் போமே
செருக்கு வரலாமோ?
உள்ளம் என்றும் அவனை நினைந்து
உருகிடல் வேண்டாமோ?
ஏழைக் கிரங்கும் இளகிய உள்ளம்
இறைவன் இல்லமன்றோ
வாழையைப் போல தன்னையே தந்து
வாழ்பவன் தெய்வமன்றோ!
ஆலயம் எல்லாம் அழகுக் கன்று;
ஆன்மீகம் வளர்வதற்கே!
நாளும் தொழுது நன்மையே செய்தால்
நலமே விளையுமன்றோ!

# வளைந்தும் நிமிர்ந்தும் வகை செய்த பிரான்

புலவர் பா. சிவநேசன், எம்.ஏ.,எம்.பில்.,பி.எட்.

மனிதருக்கு, வணங்கத் தலைவைத்தருளிய பெருமான், தம் திருவடியை வளைத்தும், நிமிர்த்தியும் அருள் புரிந்திருக்கிறார். விரிஞ்சிபுரத்தில் பிரமனும், திருப்பனந்தாளில் தாடகையும் இவ்வருளிப் பாட்டைப் பெற்றிருக்கிறார்கள். தாடகைக்காக வளைந்தருளிய பெருமான், குங்குலியக் கலையர் அன்பிற்கு நிலைத்திருக்கிறார். பழமை மிகுந்த இவ்வருளிப்பாட்டை நம்மனோர் அறிந்து போற்றுதல் கடனாகும்.

## வளைந்தருளிய வகை

பெருமான், சிவலிங்கத்திருமேனியில் செருப்புக்கால் பட்டதும்,(கண்ணப்பர் செயல்) கல்லெறிப்பட்டதுமான (சாக்கியர் செயல்) நிலையில் அருளியது ஒருவகை, அது அன்பர்களின் செயலை ஏற்றருளியது. அன்பர்களுக்காகத் தம் திருமுடியை வளைத்தும் நிமிர்த்தியும் அருளியது பிறிதொரு வகை.

## சிறுவனுக்கு வளைந்தசிவன்

திருமால்காத்தற் கடவுள், அவர் மகன் பிரமன் படைத்தற் கடவுள், இவர்களிருவரும் சிவபெருமானின் ஆணைக்குக் கட்டுப்பட்டவர்கள். தந்தை மகன், உறவாயினும் இவர்களுக்குள் முதன்மையானவர் யாரென போட்டி ஏற்பட்டுவிட்டது. இறைவன் இவர்களின் அறியாமையை உணர்த்தவேண்டி அழலுருவாகி அண்ணாமலையில் நின்றருளினார். இருவரும் பெருமானின் அடியை அல்லது முடியைக் கண்டு வருபவரே பெரியவர் எனத் தீர்மானித்தனர். திருமால் பன்றி உருக்கொண்டு அடியைத் தேடி அலைந்து திரும்பினார். பிரமனோ திருமுடியைக் காண அன்னப்பறவை வடிவில் சென்று காண இயலாது தவித்தார். பிரமன் திருமாலிடம், நான் இறைவன் திருமுடியைக் கண்டேன் அதற்கு அவர் சூடியிருந்த தாழம்பூவே சாட்சி' என்று பொய் கூறினார். பெருமான் பொய் கூறிய பிரமனை மண்ணிலகில் பிறக்கச்சபித்தார்.

சாபம் பெற்ற பிரமன், விரிஞ்சிபுரத்தில் சம்புசருமருக்கும்,நயனநந்தினிக்கும் மகனாகப் பிறந்தார். அவருக்குச் சிவசருமன் என்னும் பெயரிட்டு வளர்த்து வந்தனர் பெற்றோர். இவர் தந்தை சம்புசருமர் கோயில் பூசை செய்யும் அர்ச்சகர். இவருக்கு நான்கு வயது நிறைகையில் சம்புசருமர் இறந்து போயினார். அதனால், அவர் உறவினர், கோயில் பூசை முறையினை எடுத்துக் கொள்ள முனைந்தனர். சிவபெருமான் ஒருநாள் நயனநந்தினி கனவில் தோன்றி'உன் மகனைக் காலையில் திருக்கோயிலுக்கு அனுப்பிவை' என்று அருளிச் செய்தார். இறைவன் முதிய அந்தணராகத் தோன்றி, சிவசருமருக்கு உபநயனம் போன்ற சடங்குகளை செய்து வைத்தருளினார். பூசாவிதியில் தேர்ந்த சிவசருமர் கோயிலுட் புகுந்து பூசை முறையினை ஒவ்வொன்றாகத் தவறில்லாமல் செய்தார். பின்னர், இறைவனுக்கு திருமுழுக்காட்டு (அபிஷேகம்) செய்ய முனைகையில், சிவலிங்கத் திருமேனியின் முடி அவருக்கு எட்டவில்லை. ''அன்று திருமுடியைக் காணும் பேறு கிடைக்கவில்லை. இன்றும் எனக்கு எட்டாது போயிற்றே'' என்று கூறிப்புலம்பினார். உடனே பெருமான் தம் திருமுடியை வளைத்து அருளினார். சிவசருமர் திருமுழுக்காட்டி மகிழ்ந்தார், அதற்குப் பிறகு பெருமான் திருமுடியை நிமிர்த்தவில்லை. இன்றும் அப்படியே காட்சி தருகிறார். வளைந்தருளிவகை செய்தவர், மார்க்க சகாயர் எனும் திருப்பெயரினர். அருளிச் செய்த நாள் கார்த்திகைத் திங்கள் கடைசி ஞாயிற்றுக் கிழமையாகும். ஒவ்வொரு ஆண்டும் இந்நாளில் இது குறித்த திருவிழா நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வரலாற்றை அறிதற்கு அவ்வூர் தலபுராணம் துணை செய்கிறது. பிற இலக்கியங்களில் திருமுடி தேடிய வரலாறு உண்டு. ஆனால் இவருக்காகத் திருமுடி தாழ்த்திய வரலாறு காணப் பெறவில்லை.

## பெண்ணுக்கு வளைந்த பேரருள்

தாடகை என்பவள் சிவபெருமான் மீது பேரன்பு கொண்டவள். ஒரு சமயம் மகப்பேறு வேண்டித் தவமியற்றினாள். அவளை, பிரமன் விரும்பியதை அடைய வேண்டுமானால்''திருப்பனந்தாள் சென்று வழிபடுவாயாக'' என்று பணித்தான். தாடகை அது முதல் திருப்பனந்தாளுக்குச் சென்று செஞ்சடையப்பரை வழிபட்டு வரலானாள். இவள் ஒருநாள் பெருமானுக்கு திருமுழுக்காட்டுதல் முதலிய நியதி முடித்து மாலை சாத்தமுற்பட்டாள். அது பொழுது அவள் ஆடை நெகிழ்ந்தது. மாலை சாத்துதலுக்கு இடையூறு ஏற்பட்டு விட்டதே என்று நுனைக்கையில் பெருமான் தம் திருமுடியைச் சாய்த்தருளி, மாலையினை ஏற்றருளி

னார். உடனே அவளுக்குப் பதினாறு கைகள் தோன்றின. பின்னர் இறைவன் உமையம்மை யோடு காட்சி கொடுத்தருளினார். அவள் பெருமானிடம், 'எமக்கு மகப்பேறு அளித்த ருள வேண்டும். அவற்றோடு என் பொருட்டு அருள்பாலித்ததை உலகவர்நினைவுகூர்தற்காக இத்தலம் என் பெயரால் அழைத்தற்கு அருள் புரிய வேண்டும்' என்று வேண்டிக் கொண்டாள். இறைவன் தாடகை விரும்பியவற்றைஅளித்து மறைந்தருளினார். தாடகை மகப்பேறு வாய்க் கப்பெற்று பலகாலம் வாழ்ந்து சிவப்பேறு பெற்றாள். இது அவ்வருள்வரலாறு. அவள் பெயரால் அத்தலம் அழைக்கப்படுமாற்றை,

''கண்பொலி நெற்றியினான் திகழ் கையிலோர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகுபீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தருசெஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத் தாடகை ஈச்சரமே''
(3:320-1)

எனும் சம்பந்தர் பாடலாலும்,

'கரம் ஊன்றிக் கண்ணிடுங்கிக் கால்குலைய மற்றோர்
மரம் ஊன்றி வாய்குதட்டாமுன்னம்-புரம் மூன்றும்
தீச்சரத்தான் செற்றான் திருப்பனந்தாள் தாடகைய
ஈச்சரத்தான் பாதமே ஏத்து'

எனவரும் ஐயடிகள் காடவர்கோன் அருளிச் செய்த சேத்திரத்திருவெண்பாவாலும் அறிய லாம். சம்பந்தர் ஒவ்வொரு பாடலிலும் தாடகை ஈச்சரமே என்றே அருளியுள்ளார். பெரியபுராணத்தில் தாடகை பொருட்டு வளைந்தருளினார் என்ற குறிப்பில்லை. வளைந்திருப்பது கண்டு அரசன் வருத்தம் அடைந்ததாக மட்டுமே உள்ளது.

'மாலை சாத்தும் தாடகை மானங்காப்பான் தாழ்ந்து' (அருச்சனைப்படலம்)

என்பது திருவிளையாடற் புராணம்.

'தருக்கிய வெம்மனமுடைய சரோருகனும் காணவொணாப்
பெருக்கிதழி மாமுடியைப் பேரன்பின் பெற்றியினால்
நெருக்கு மலர் மாலைகொடு நேயமொடு வளைவித்த
உருக்கமுடைத் தாடகையின் உபயபதம் சிரத்து அணிவாம்'

எனும் தனிப்பாடலும் இவ்வரலாற்றை இனிதே குறிக்கிறது.

## கோயில் கலையில் வரலாறு

திருப்பனந்தாள் திருக்கோயிலின் திருச் சுற்றில் தாடகை பெருமானை வழிபடும் திறமும், அருளிப் பாடும் சிற்பமாகச் செதுக்கப் பட்டுள்ளன. அதில் தாடகை 16 கைகளுடன் விளங்குகிறாள். இவள் வரலாறு அலங்கார மண்டப விதானத்தில் ஓவியமாக வரையப் பட்டுள்ளது. இவளைப் பார்ப்பினி என்பர், திரு.வி.க. (பெரியபுராணம் - குறிப்புரை. ப. 288) இவர் கூற்றிற்குப் போதிய சான்றுகள் இல்லை. பெரியபுராணத்தில் அவள் பெயர் குறிக்கப்படாததற்குக் காரணமும் விளங்காது உள்ளது.

## நிலைத்த சிவன்

தாடகைக்கு அருளியவர். உடனே நிமிர்ந்து விடவில்லை. சோழ மன்னன் திருமுடியை நிமிர்த்தி வழிபட எண்ணினான். யானை, குதிரைகளைக் கட்டி இழுக்கச் செய்தனன். பெருமான் நிமிர்ந்தருளவில்லை. மன்னன் மனம் வருந்தலானான். திருக்கடவூர் குங்கு லியக்கலயர் செய்தி அறிந்து திருப்பனந்தா ளுக்கு விரைந்தார். இத்திருப்பணியில் யானும் பங்கு கொள்கிறேன் எனக் கூறி செயற்பட் டார். சிவலிங்கத்தில் பூட்டியுள்ள கயிற்றைத் தம் கழுத்திற் கட்டி இழுத்தார். சிவன் குங்கு லியக்கலையர் அன்பிற்கு ஆட்பட்டு நிமிர்ந்த ருளினார். இவற்றைக் கண்ட அரசன் திருப் பணிகள் பலசெய்து தலைநகரை அடைந்தான்.

'ஏய்ந்த கயிறுதன் கண்டத்திற் பூட்டி எழில் பனந்தாள்
சாய்ந்த சிவன்நிலைத் தான் என்பர்' —12

எனும் திருத்தொண்டர் திருவந்தாதியும்

''செங்கண்வெள் ளேற்றின் பாகன் திருப்பனந் தாளில் மேவும்
அங்கணன் செம்மை கண்டு கும்பிட அரசன் ஆர்வம்
பொங்கித்தன் வேழம் எல்லாம் பூட்டவும் நேர்நில் லாமைக்
கங்குலும் பகலும் தீரா கவலையுற்று அழுங்கிச் செல்ல''-23


''நண்ணிய ஒருமை அன்பின் நாடுறு பாசத் தாலே
திண்ணிய தொண்டர் பூட்டி இளைத்தபின் திறம்பி நிற்க
ஒண்ணுமோ கலய னார்தம் ஒருப்பாடு கண்ட போதே
அண்ணலார் நேரே நின்றார் அமரரும் விசும்பில் ஆர்த்தார்''-28

எனவரும் பெரியபுராணமும்

'பூங்கச்சிட்டு ஈர்க்கும் பீடுறுகலையன் அன்பின் நிமிர்ந்தஎம்பிரான்''
(அருச்சனைப் படலம்)

எனும் திருவிளையாடற்புராணமும்

இவ்வரலாற்றை இனிது விளக்குகின்றன.



# திருவீழிமிழலை

புலவர் பொன். திருக்கண்ணபுர
சுப்பிரமணியன்

''ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண
மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம் அவை
ஐந்தாய்
ஆறார்சுவை நான்காய் ஏழோசையொ
டெட்டுத் திசை தானாய்
வேறாய்உடன் ஆனான் இடம் வீழிம்மிழ
லையே''

—திருநாவுக்கரசர்

சித்திசெய் பவர்கட் கெல்லாஞ்
சேர்விடஞ் சென்றுகூடப்
பத்திசெய் பவர்கள் பாவம்
பறைப்பவ ரிறப்பி லாளர்
முத்திசை பவளமேனி முதிரொளி
நீல கண்டர்
வித்தினில் முளையார் வீழி
மிழலையுள் விகிர்தனாரே

—திருநாவுக்கரசர்

பந்தம் வீடிவை பண்ணினீர் படிநீர்
மதிப்பிதிர் கண்ணி யீரென்று
சிந்தை செய்திருக் குஞ்செங்கை
யாளர் திருமிழலை
வந்து நாடகம் வான்நாடியராட
மாலய னேத்த நாடொறும்
அந்தண் வீழிகொண் டீரடி
யேற்கு மருளுதீரே

—சுந்தரர்

தேவாரம் பாடிய மூவர்களின் அற்புதச் செயல்கள் நடந்த தலங்கள் பலவுண்டு. அவைகளில் ஒன்று திருவீழிமிழலை. அப்பர், சம்பந்தர் இருவருக்குமே இறைவன் படிக்காசு கொடுத்தருளிய அற்புதம் நிகழ்ந்த தனிச் சிறப்புடையது. இப்பதி நாகை மாவட்டத்தில் நன்னிலம் வட்டத்திலிருக்கிறது. மயிலாடுதுறை—அறந்தாங்கி இருப்புப் பாதையில் பூந்தோட்டம் என்ற புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே ஐந்துகல் தொலைவிலிருக்கிறது. பூந்தோட்ட.வழியாக நாச்சியார் கோவில் கும்பகோணம் செல்லும் பேருந்துகள் இவ்வூர் வழியாகச் செல்கின்றன. இத்தலத்தின் அருகே அரிசிலாறு ஓடுகிறது.

வீழிச்செடிகள் நிறைந்திருந்ததால் வீழிமிழலை என்ற பெயர் ஏற்பட்டதென்பர். திருமால் தன் கண்ணைப்பறித்து பூவாகஇறைவனை அருச்சித்த இடமாதலால் திரு விழி (கண்) என்பது திருவீழிமிழலை என்றாயிற்று என்பர் சான்றோர். இவ்வூர் சிறிதெனினும் கோயில் மிகப்பெரியது. கோயிலுக்கு முன்னால் பெரிய திருக்குளமிருக்கிறது. இதற்குத் தீர்த்தபுஷ்கரணி என்று பெயர். கோயிலுக்குள் அழகிய உயர்ந்த மதில்களையுடையமூன்று பிரகாரங்கள் இருக்கின்றன. கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. கிழக்கில் இருவாயில்களில் கோபுரங்களும், இரண்டாவது பிரகாரத்திலிருந்து வெளி மூன்றாம் பிரகாரத்திலுள்ள அம்மன் கோயிலுக்குச் செல்ல வடபுறம் ஒரு கோபுரமும் அம்மன் சன்னதிக்கு நேரே அதே பிரகாரத்தில் மற்றொரு கோபுரமும் இருக்கின்றன.

கிழக்கு வாயில் வழியே உள்நுழைந்ததும் வடக்கே பெரிய நூற்றுக்கால் மண்டபம் இருக்கிறது. இந்த பெரிய அழகான மண்டபம்

சிற்பத்திறமைக்கு சிறந்த எடுத்துக்காட்டு. கோயில் திருப்பணியின் ஸ்தபதியார்கள் சில தலங்களில் உள்ள அரிய திருப்பணிகள் நீங்க லாக எனஒப்பந்தம் செய்து கொள்வது வழக் கம். அத்தகையவை ஆவுடையார் கோயில் -திருப்பெருந்துறைகொடுங்கை, திருநனிப்பள்ளி கோடிவட்டமும், திருவீழிமிழலை வௌவால் மண்டபமும் என்பர். இரண்டாவது கோபுரவாயில் வழியே உள்நுழைந்ததும் முதலில் பலிபீடம் காணப்படுகிறது. அதையொட்டி அருள்மிகு ஆதிமூலநாதசுவாமி (இலிங்கம்) சந்நிதியிருக்கிறது. இவ்விரண்டிற் கும் வடக்கே வசந்த மண்டபம் காணப்படு கிறது. மூன்றாவது திருவாயிலைக் கடந்து உட்பிரகாரம் சென்றதும் இறைவன் எழுந்தரு ளியிருக்கும் கர்ப்பக் கிரகம் உயரமான இடத் தில் இருக்கிறது. இறைவன் மூலஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கிறார். கட்டுமலைக்கோயில் போல் இருப்பினும்இது மாடக்கோயில் அன்று. இந்த உயரமான மண்டபத்திற்குக் கீழேகிழக்கு நோக்கி நந்தி இருக்கிறது. மூலஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்க மூர்த்திக்கு வீழி நாதர், வீழியழகர் என்ற திருநாமங்கள். மூலஸ் தானத்தின் உள்ளே லிங்கத்தின் பின்னால் இறைவன் இறைவிநின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளனர். கர்ப்பக்கிரகத்திற்குத் தென்பால் சக்கரப் பிரதானர் அதற்குக் கிழக்கே சிவலிங்கமூர்த்தி ஆகிய சந்நிதி களும் இருக்கின்றன். விமானத்தில் தென் பக்கம் தோணியப்பர் சம்பந்தருக்குக் காட்சி யருள்கிறார்.

மேற்கு உள்பிரகாரத்தில் விநாயகர், சோமாஸ்கந்தர், முருகன், இலட்சுமி, இவர் களுடைய சன்னதிகளிருக்கின்றன.

மேற்கு இரண்டாவது, மூன்றாவது பிர காரங்களில் திருவாயில்கள் இருக்கின்றன. இரண்டாவது மேற்குப் பிரகாரத்தில் அப்பர் படிக்காசு பெற்ற பீடம் இருக்கிறது. வடக்கு இரண்டாம் பிரகாரத்தில் மகாலிங்கர், மாயூர நாதர் சந்நிதிகள் இருக்கின்றன. மூன்றாவது மேற்குப் பிரகாரத்தில் படிக்காசு விநாயகர் சன்னதியிருக்கிறது. வடக்கு வெளிப்பிரகாரத் தில் அம்பிகை தனிக்கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதியுடன் விளங்குகிறது. அம்பாளின் திருப் பெயர்கள் சுந்தரகுசாம்பிகை, சுந்தராம்பிகை என்பன.

சக்கராயுதம் பெறுவதற்காகத் திருமால் நாடோறும், இத்தலத்திறைவனை ஆயிரம் தாமரை மலர்களாகக் கொண்டு அருச்சித்து வந்தார். ஒருநாள் ஒருபூக்குறையக்கொண்டு தன் கண்ணையே எடுத்து அருச்சித்துப் பூசையை முடித்தார். இந்த நிகழ்ச்சி பன்னிரு திருமுறைகளில் பல பாடல்களிலும் சிறப்பாக இந்தத் தலத்தேவாரத்திலும் குறிக்கப்பட்டி ருக்கிறது.

''தன்தவம் பெரிய சலந்தரனுடலம் தடிந்தசக்
கரம்எனக் கருளென்று
அன்றுஅரி வழிபட் டிழிச்சிய விமானத்
திறையவன்
பிறையணி சடையன்''

''தருப்பமிகு சலந்தரன் தன்உடல் தடிந்த
சக்கரத்தை
வேண்டி யீண்டு
விருப்பமொடு மால் வழிபாடுசெய்ய வீழி
விமானஞ்சேர் மிழலையாமே''.

என்பவை திருஞானசம்பந்தர் திருவாக்குகள். மேலும், மகாவிஷ்ணு விண்ணிலிருந்துகொண்டு வந்த விமானமே கோயிலாயிற்றென்பதும் இதில் குறிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் ஒரே பாடலில், அப்பர் பெருமான கூறியருள்கிறார். அது பின்வரு மாறு:

''நீற்றினை நிறையப்பூசி நித்தலா
யிரம்பூக் கொண்டு
ஏற்றுழி யொருநா ளொன்று குறையக்கண்
நிறைய விட்ட
ஆற்றலுக் காழி நல்கி யவன் கொணர்ந்
திழிச்சு கோயில்
வீற்றிருந் தளிப்பர் வீழி
மிழலையுள் விகிர்தனாரே''

இத்தலம், சம்பந்தர், அப்பர் இவர்களுடைய வரலாற்றுச் சம்பந்தமுடையது. இருவரும் அடியார்களுடன் இத்தலத்து இறைவனை வழி பட்டு இங்கே தங்கியிருந்தனர். மாரிவளஞ் சுருங்களங்கும்பஞ்சமேற்பட்டது. இருவருடைய கனவிலும் சிவபெருமான் தோன்றி, தாம் காசுபடி கொடுப்பதாகச் சொல்லி மறைந்தருளி னார். மறுநாட்காலை முதல் படிக்காசு பெற்று இருவரும் அதைக்கொண்டு அடியார்களுக்கு அமுதளித்து மகிழ்ந்தனர். இப்பதிக்குத் தனிப்பெருமை தருவது அப்பர் சம்பந்தர் தங்கியிருந்த மடங்கள். வடக்கு வீதி யில் இப்போது அவை ஆலயங்களாக விளங்கி வருகின்றன. திருஞான சம்பந்தருக்கு இத்தலத் தில் சீர்காழியிலிருக்கும் தோணியப்பர் கோலத்தை இறைவன் காட்டியருளினார். கர்ப்பக்கிரக விமானத்தின் மேலே தென்புறம் தோணியப்பர் திருவுருவம் காணப்படுகிறது.

திருஞானசம்பந்தர் இவ்வாலயப் பெரு மான் மீது பதினைந்து திருப்பதிகங்கள் ஓதி யருளியிருக்கிறார். திருமால் விண்ணிலிருந்து விமானத்தைக் கொண்டுவந்து கோயிலாக்கி வழிபட்டது, தாம் வாசியில்லாக்காசு பெற்றது, இவ்வூரின் இயற்கை வளம் முதலியவற்றை மிக அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார். வாசி தீரக் காசு பெற்றதை

''வாசி தீரவே காசுநல்குவீர்
மாசின்மிழலையீர் ஏசலில்லையே''

என்று சொல்கிறார். இயற்கையழகை,

''தேங்கொள்பூங் கமுகுதெங்கிளங்கொடிமாச்
செண்பகம் வண்பலா இலுப்பை
வேங்கைபூ மகிழால் வெயில்புகாவீழி
மிழலையானென வினைகெடுமே''

என்று கூறுகிறார். உலக உயிர்கள் 84 இலட் சம் என்பதை ''உரைசேரும் எண்பத்துநான்கு

நூறாயிரமாம் யோனி பேதம் நிரை சேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் நின்றான்'' என்று சொல்கிறார்.

திருநாவுக்கரசர் இத்தலத்திறைவனைப் புகழ்ந்து எட்டுத் திருப்பதிகங்கள் அருளியுள்ளனர். திருமாலுக்குச் சக்கரம் கொடுத்ததை, 'சக்கரம் புட்பாகற்கு அருள் செய்தான் காண்' 'நேமி நெடுமாற்கு அருளிச் செய்தார்போலும்' 'கண்துஞ்சுங்கரு நெடுமால் ஆழி வேண்டிக் கண்ணிடந்து சூட்டக் கண்டருளுவான் காண்' என்றும் கூறியிருக்கிறார். ஒரு திருப்பதிகத்தில் இறைவன் திருவுருவத்தின் எழிலையும், மற்றொன்றில் அவன் திருவிளையாடல்களையும் விதந்தோதுகிறார். ஒரு திருத்தாண்டகப் பதிகத்தில் பல தலங்களின் பட்டியலைக் கொடுத்திருக்கிறார். ஒரு பாடலில் இறைவியின் பெயரான 'பண்தங்கு மொழி மடவாள்' என்று குறிக்கிறார். விமானம் விண்ணிலிருந்து இறங்கியதை 'விண்ணிழி தண்வீழி மிழலையானே' என்று ஒரு பதிகப் பாடல்களின் இறுதியில் சொல்லியிருக்கிறார். இன்னுமொரு பதிகத்திலுள்ள ஒவ்வொரு பாடலின் கடைசியிலும் 'திருவீழிமிழலையானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே' என்று கூறுகிறார்.

சுந்தரர், இப்பதிப் பெருமான் மீது ஒரு திருப்பதிகம் பணித்தருளினார். அப்பர் சம்பந்தருக்குப் படிக்காசு கொடுத்ததை, 'திருமிழலை இருந்து நீர்தமிழோடிசை கேட்டும்இச்சையால் காசு நித்தநல்கினீர்' என்றும், சண்டேசுரர் கண்ணப்பர் இவர்களுக்கு அருள்பாலித்ததை, 'எறிந்த சண்டி இடந்த கண்ணப்பன் ஏத்து பத்தர்கட்கு ஏற்றம் நல்கினீர்' என்றும் கூறியிருக்கிறார்.

மாணிக்கவாசகர், திருத்தோணோக்கத்தில் 'பங்கயம் ஆயிரம் பூவினிலோர் பூக் குறையத் தங்கண் இடந்து அரன் சேவடி மேற் சாத்தலுமே' என்று சொல்கிறார்.

சேந்தனார் இயற்றிய திருவிசைப்பாவில் திருவீழிமிழலைக்கெனப் பாடிய பதிகம் ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற்றிருக்கிறது. சைவமக்கள் பாடி மகிழும் திருவிசைப்பா பாடல்களில் ஒன்று பின்வருவது:—

''கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே''.

இறைவன் படிக்காசு கொடுத்ததை, 'பாடலங்காரப் பரிசில் காசருளிப் பழுத்த 'செந்தமிழ் மலர்சூடி நீடலங்காரத் தெம்பெருமக்கள் நெஞ்சினுள் நிறைந்து நின்றானை' என்றும் தில்லைவாழந்தணர் மூவாயிரவர் போல இத்தலத்தில் ஐந்நூறு அந்தணர் இருந்தனர் என்பதை 'ஐஞ்நூற்றந்தணர் ஏத்தும் எண்ணில் பல்கோடி குணத்தர்' என்றும் சொல்லியிருக்கிறார். அவர் பாடிய திருப்பல்லாண்டிலும் 'மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்' என்று இந்த நிகழ்ச்சியைக் குறிக்கிறார்.


திருமூலர் திருமந்திரத்திலும். 'கூறதுவாகக் குறித்து நற்சக்கரம் கூறது செய்து கொடுத்தனன் மாலுக்கு' என்று குறிப்பிட்டிருக்கிறார் நம்பியாண்டார் நம்பிகள், ஒரு பாடலில் இத்தலப் பெருமையைச் சொல்கிறார் அதுவருமாறு:—

''பாடிய செந்தமிழாற்பழங் காசுபரிசில்பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம் பந்த னிறைபுகழான்
நேடிய பூந்திரு நாவுக் கரசர்சேர் எழின்
மிழலைக்
கூடிய கூட்டத்தி னாலுள தாய்இக்
குவலயமே''

சேக்கிழார் பெரிய புராணத்தில் சம்பந்தரும் அப்பரும்இத்தலத்தில்வந்து தங்கியிருந்து படிக்காசு பெற்று அடியார்க்கமுதளித்ததைச் சொல்லியிருக்கிறார். அப்பருக்கருளிய காசு சுலபமாக மாறிற்று; சம்பந்தர் பெற்றது வாசியுள்ளதாக இருந்தது. 'இமயப்பாவை திருமுலைப்பால் தேசம் உய்ய உண்டவர்தம் திருமா மகனார் ஆதலினால் காசிவாசியுடன் பெற்றார். கைத்தொண்டாகும் படிமையினால் வாசி இல்லாக் காசுபடி பெற்று வந்தார் வாகீசர்' என்று நயம்படக் கூறுகிறார். சுந்தரர் இங்கெழுந்தருளியதை 'திருவீழி மிழலை இறைஞ்சிச் சேண்விசும்பின் முந்தை இழிந்த மொய்யொளிசேர் கோயில் தன்னை முன் வணங்கி பந்தமறுக்குந் தம்பெருமான் பாதம் பரவிப் பணிகின்றார்' என்று உரைக்கிறார்.

அருணகிரிநாதர் இத்தலத்திற்கு 'எருவாய் கருவாய்' என்று தொடங்கும் திருப்புகழ்ப் பாடல் ஒன்றைப் பாடியிருக்கிறார். திருமயிலாடுதுறை மெய்ஞ்ஞான முனிவர் என்பவர் திருவீழிமிழலைத் தலபுராணம் இயற்றியுள்ளார். இவர் திருவாவடுதுறை ஆதீனத்து இரண்டாவது குருமூர்த்திகளான மறைஞான தேசிகருடைய மாணவர். இந்தப் புராணம் கி.பி. 1651-ல் இயற்றப்பட்டது. 678 பாடல்களைக் கொண்டது இன்னும் அச்சாகவில்லை.

இத்தலவிருட்சம் பலா, வீழிச்செடி என்றும் கூறுவர். இத்தலத்தில் இருபத்தைந்து தீர்த்தங்கள் உள்ளன எனக்கூறப்படுகிறது. புட்கரணி தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், பிரம தீர்த்தம், பத்மதீர்த்தம், இமயதீர்த்தம், மார்க்கண்ட தீர்த்தம் பத்ரவல்லி தீர்த்தம், இயம தீர்த்தம், முதலியவை முக்கியமானவை. சித்திரையில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. முனனாளில் திருவீழிமிழலை பெரிய நகரமாயிருந்திருக்கிறது. ஆவண வீதியானது இப்போது ஐயன்பேட்டையென வழங்குகிறது. அங்குள்ள கோயிலில் சுவாமி செட்டியப்பர்



## திருப்புகழ்ப் பாடல்

'சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலம் துஞ்சித் திரியாதே
கந்தனென் றுற்றுனை நாளும்
கண்டு கொண்டன்புற் றிடுவேனோ
தந்திதன் கொடியைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலம் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே'

தராசு பிடித்த கரத்தோடும், அம்பாள் படியளந்த நாயகி படியைப் பிடித்த கையோடும் உற்சவ மூர்த்திகளாகக் காட்சியளிக்கின்றனர். அடியார்கள் திருவமுது கொண்ட இடத்திற்கு ஆண்டார் பந்தி என்றும், சமையல் செய்த பாகசாலையை பாசாலை என்றும் வழங்குகின்றனர். அவை இப்போது சிற்றூராக இருக்கின்றன. திருவீழிமிழலையில் அப்பர், சம்பந்தர் கோயில்களன்றி பத்திரவல்லீசர், அபிமுத்தீசர், திருமால், மாரியம்மன் முதலியோர் கோயில்களிருக்கின்றன.

திருவீழிமிழலைக் கோயில் விமானம் ஓங்கியுயர்ந்து இருக்கிறது. 'விண்ணிழி விமானம்' என்று திருமுறைப் பாடல்கள் கூறுகிறது. அதைப் பதினாறு சிங்கங்கள் தாங்குகின்றன. சுந்தரர் தேவாரத்தில் 'மடங்கல் பூண்ட விமானமும் மண்மிசை வந்திழிச்சிய வான நாட்டையும்' என்று இதைக் குறிக்கிறது. நூற்றுக்கால் மண்டபமான வௌவால் நத்து மண்டபமும் மிகுந்த சிற்பச் சிறப்புடையது.

இக்கோயிலின் கர்ப்பக்கிரகச் சுவர்கள், மதிற்சுவர்கள் முதலியவற்றில் பல கிரந்த—தமிழ்க் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. பராந்தகன், இராஜராஜன், இராஜேந்திரன், மூன்றாம் இராசஇராசன், மூன்றாம் இராஜேந்திரன், இராஜாதிராஜன், குலோத்துங்கன், விக்கிரமசோழன், மூன்றாம் குலோத்துங்கன் முதலிய சோழமன்னர்கள், வீரபாண்டியன், சுந்தரபாண்டியன் விஜயநகர மன்னரானவிருப்பண்ணஉடையார் இவர்கள் காலத்தில் பொறிக்கப்பெற்றவை. அக்கல்வெட்டுக்கள், விளக்கெரிக்க நிலம், பொன், ஆபரணங்கள் முதலிய தானங்கள் வழங்கியதை அறிவிக்கின்றன. கோயிலுக்குத் தங்கம் பூசிய ஓடு மேய்ந்தது, கிராம காரியம் பார்க்கத் திருவீழிமிழலை சபை கூடியது, காவிரிபூம்பட்டினத்து வணிகன் நந்தவனத்துக்கு நிலம் வழங்கியது. திருநாவுக்கரசர் மடத்திற்குச் சொந்தமான நிலங்களின் பட்டியல், நின்றருளிய நாயனார், நெறிவார் குழலிநாச்சியார் இவர்கள் கோயில் திருப்பணி செய்த ஆசாரிக்கு நிலம், மனைகொடுத்தது, மூன்றாம் பிரகாரத்தில் எழுந்தருளச் செய்யப் பெற்ற திருவாதவூர்த் தேவர் மாணிக்கவாசகருக்குப் பூசை முதலியவற்றிற்கு நிலம் அளித்தது, கோயிலுக்கு வடபுறம் மடம் கட்டியது, திருக்கைக்கோட்டியில் திருமுறை ஓத நிலம் விட்டது, திருப்பதியம் பாட ஏற்பாடு செய்தது. ஐப்பசித் திருவோண விழாவிற்கு வரும் பக்தர்களுக்கு உணவளிக்க நெல் வட்டிக்குவிட்டது, ஆதிசண்டேசுவர தேவர்க்குக் கோயில் கட்டியது, சிவலோகமுடைய நாயனார் கோயிலுள்ள ஒரு தவசிக்கு பொருள் வழங்கியது. கோயில் நிலங்களுக்கு நீர்ப்பாசன ஏற்பாடுகள் செய்தது, 'ஸ்ரீகாலகாலன்' என்றவாள்தானம் செய்தது, ஸ்ரீகிருஷ்ணப்பிரதிஷ்டைசெய்து பூசைக்குநிலம் வழங்கியது, அழகிய மணவாளன் உருவப் பிரதிஷ்டை பண்ணியது, கோயில் சிப்பந்திக்கு நிலம் கொடுத்தது முதலிய அரிய செய்திகள் காணமுடிகின்றது. உலகுய்யக் கொண்ட சோழ வளநாட்டு வெண்ணாட்டுப் பிரமதேயமான திருவீழிமிழலை என்ற ஊரைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. திருவீழிமிழலை உடையார், திருவீழி மிழலையுடைய மகாதேவர், திருச்சுவர்க்கமுடையார் மூலஸ்தானேசுவரர் திருமழலைத் திருத்தான்றோன்றி மகாதேவர், திருவீழிமிழலை உடையார் பரமேசுவரபட்டரார் என்றெல்லாம் இறைவன் திருப்பெயர்களை அக்கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

எருவாய் கருவாய் தனியே யுருவா
யிதுவே பயிராய்
இவர்போ யவரா யவர்பே யிவரா
யிதுவே தொடர்பாய் வெறிபோல
ஒருதா யிருதாய் பலகோடியதா
யுடனே யவமா யழியாதே
ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்கா வெனவோ தருள்தாராய்
முருகா வெனவோர் தரமோ தடியார்
முடிமே யிருதாள் அருள்வோனே
முனிவோ ரமரோர் முறையோ
முதுசூருரவேல் விடும்வேலா
திருமால் பிரமா அறியா தவர்சீர்
சிறுவா திருமால் மருகோனே
செருமா மதில் சேரழகார் பொழில் சூழ்
திருவீழியில் வாழ் பெருமானே

—அருணகிரிநாதர்

# ஸ்ரீ நாலாயிர திவ்யப்பிரபந்தம் நயவுரை

டாக்டர் ஜெகத்ரட்சகன்

(10)

## நீராட்டம்

வெண்ணெய் அளைந்த குணுங்கும்
விளையாடு புழுதியும் கொண்டு
திண்ணென இவ் இரா உன்னைத்
தேய்த்துக் கிடக்க நான் ஒட்டேன்;
எண்ணெய் புளிப்பழம் கொண்டு இங்கு
எத்தனை போதும் இருந்தேன்;
நண்ணல் அரிய பிரானே!
நாரணா! நீராட வாராய்.

வெண்ணெய் அளைந்ததனாலான நாற்றத்தையும், விளையாடுவதிற்படிந்த புழுதியையும், உடம்பில் கொண்டிருந்து, அதனால் இன்றைய இரவில் உடம்பைப் படுக்கையில் தேய்த்துக்கொண்டு படுத்திருக்கும்படி விட உன்னை உறுதியாய் ஒப்பமாட்டேன். தேய்த்துக் கொள்ள எண்ணெயையும் சீயக்காயையும் கொண்டு இங்கே எவ்வளவு நேரம் காத்திருந்தேன். கிட்ட முடியாத இறையே! நாராயணனே! நீராட வா.

கன்றுகள் ஓடச் செவியிற்
கட்டெறும்பு பிடித்து இட்டால்,
தென்றிக் கெடும் ஆகில் வெண்ணெய்
திரட்டி விழுங்குமா காண்பன்;
நின்ற மராமரம் சாய்த்தாய்!
நீ பிறந்த திருவோணம்
இன்று நீ நீராட வேண்டும்
எம்பிரான்! ஓடாதே வாராய்.

ஏழு மராமரங்களையும் அம்பெய்து சாய்த்தவனே! பசுவின் கன்றுகள் வெகுண்டோடக் கன்றுகளின் காதில் கட்டெறும்பைப் பிடித்துப் போட்டாய். அதனால் அக்கன்றுகள் வெகுண்டு சிதறி ஓடிப் போய்விட்டால், கன்றின்றிப் பசுவைப் பால் கறக்க இயலாதே. பாலின்றி வெண்ணெய் கிடைக்காதே. அதனால் நீ எப்படி வெண்ணெயைத் திரட்டி விழுங்குவாய்? இன்று நீ பிறந்த திருவோண நாளாகும். நீ, நீர் ஆடவேண்டும் தலைவனே! ஓடாதே திரும்பி வா.

பேய்ச்சி முலை உண்ணக் கண்டு
பின்னையும் நில்லாது என்நெஞ்சம்
ஆய்ச்சியர் எல்லாரும் கூடி
அழைக்கவும் நான் முலை தந்தேன்
பாய்சின நீரொடு நெல்லி
கடாரத்தில் பூரித்து வைத்தேன்;
வாய்த்த புகழ் மணிவண்ணா
மஞ்சனம் ஆட நீ வாராய்.

பூதனையின் முலையை நீ உண்பதைக் கண்டும், நான் அஞ்சி ஓடாமல், உன்னிடம் அன்பால் என் மனம் கேளாமல், இடைச்சிகளெல்லாரும் பயந்து ஒன்று கூடி அழைக்கவும் உன்பால் அன்பால் என்பால் முலையை உண்ணக் கொடுத்தேன். நெல்லி இலையையிட்டுக் காய்ச்சின வெந்நீரைக் குடத்தில் நிறைத்து வைத்திருக்கிறேன். புகழ்மிக்க நீலமணி நிறக் கண்ணனே! நீராட நீ வா.

கஞ்சன் புணர்ப்பினில் வந்த
கடிய சகடம் உதைத்து
வஞ்சகப் பேய்மகள் துஞ்ச
வாய் முலை வைத்த பிரானே!
மஞ்சளும் செங்கழுநீரின்
வாசிகையும் நறுஞ்சாந்தும்
அஞ்சனமும் கொண்டு வைத்தேன்;
அழகனே! நீராட வாராய்.

கம்சன் வஞ்சனையினால் வந்த கொடிய சகடத்தைத் திருவடிகளால் உதைத்துமுறித்துவிட்டு தீயசிந்தனையுள்ள பூதனை முடியும்படி அவள் முலையில் வாயை வைத்துக் காத்த சகத்ரட்சகனே! உலகண்ணலே! மஞ்சளையும். செங்கழுநீர் மாலையையும், மணம்மிக்க சந்தனத்தையும், மையையும் கொண்டு வந்து வைத்தேன். அழகனே! நீ நீராட வா.

அப்பம் கலந்த சிற்றுண்டி
அக்காரம் பாலிற் கலந்து
சொப்பட நான் சுட்டு வைத்தேன்
தின்னல் உறுதியேல்; நம்பி

செப்பு இள மென்முலையார்கள்
சிறுபுறம் பேசிச் சிரிப்பர்;
சொப்பட நீராட வேண்டும்,
சோத்தம் பிரான்! இங்கேவாராய்.

நம்பியே! பொற்கலசம் போல் இளைய மெல்லிய முலையையுடைய மாதர், உன்மேல் அற்பமான குற்றங்களை மறைவிற் சொல்லிச் சிரிப்பார்கள். பாலில் வெல்லம் சேர்த்துப் பிசைந்த அப்பத்தையும், அப்படியே சேர்ந்த சிற்றுண்டியையும் நன்றாக நான் சுட்டு வைத்தேன். நீ அவற்றைத் தின்ன விரும்பினால் நன்றாகப் புனலாட வேண்டும் உனக்கு வணக்கம், இங்கே வா அப்பனே.

எண்ணெய்க் குடத்தை உருட்டி
இளம்பிள்ளை கிள்ளி எழுப்பிக்
கண்ணைப் புரட்டி விழித்துக்
கழகண்டு செய்யும் பிரானே!
உண்ணக் கனிகள் தருவேன்;
ஒலிகடல் ஓதநீர் போலே
வண்ணம் அழகிய நம்பீ
மஞ்சனம் ஆட நீ வாராய்.

எண்ணெய் நிறைந்த குடத்தை உருட்டி, உறங்குகிற சின்னஞ்சிறு குழந்தைகளைக் கையால் கிள்ளி எழுந்திருக்கச் செய்து வருகிற செல்வமே! நல்ல நல்ல பழங்களை உண்ணும்படி உனக்குக் கொடுப்பேன். ஒலிக்கிற கடலின் அலைகளையுடைய நீர்போல் திருமேனி நிறம் அழகாயிருக்கப் பெற்றநம்பீநீமஞ்சனமாடவா.

கறந்த நற்பாலும் தயிரும்
கடைந்து உறிமேல் வைத்த வெண்ணெய்
பிறந்ததுவே முதலாகப்
பெற்றறியேன், எம்பிரானே!
சிறந்த நற்றாய் அலர் தூற்றும்
என்பதனால் பிறர் முன்னே
மறந்தும் உரையாட மாட்டேன்!
மஞ்சனம் ஆட நீ வாராய்.

எம்பிரானே! கறந்த இனிய பாலையும் தயிரையும், தயிரைக் கடைந்து உறியில் வைத்திருக்கிற வெண்ணெயையும் நீ பிறந்த நாள் முதலாகக் கண்டறியேன். எல்லாரினுங் குழந்தையைச் சிறக்கப் பெற்ற தாயும் பழி சொல்லுகின்றாளே என்ற அச்சத்தினால் மற்றவர் எதிரில் மறந்தும் உனக்குக் குறைவைத் தரும் சொல்லைச் சொல்ல மாட்டேன். கண்ணனே! மஞ்சன நீராட நீ வருக.

கன்றினை வால் ஓலை கட்டி
கனிகள் உதிர எறிந்து
பின் தொடர்ந்து ஓடி ஓர் பாம்பைப்
பிடித்துக்கொண்டு ஆட்டினாய்போலும்
நின்திறத்தேன் அல்லேன், நம்பீ
நீ பிறந்த திரு நன்னாள்,
நன்று நீ நீராட வேண்டும்;
நாரணா! ஓடாதே வாராய்.

கன்றின் வாலில் ஓலையைக் கட்டி, உன்னைக் கொல்ல வந்த ஒரு கன்றை எறி குணிலாகக்கொண்டு விளாமரக் கனிகள் கீழே



விழும்படி வீசி, பின்பு ஓடிப்போய் காளியன் என்கிற ஒரு பாம்பைப் பிடித்து மிதித்து ஆட்டினவனான நம்பியே! நான் உன் கருத்து ஒன்றும் அறியாதவளாய் இருக்கிறேன். நீ பிறந்த நல்லநாள் இந்நாள். ஆகையால், நீ நன்று புனலாட வேண்டும். அப்பனே ஓடாதே வா வா!

பூணித் தொழுவினிற் புக்குப்
புழுதி அளைந்த பொன்மேனி
காணப் பெரிதும் உகப்பன்,
ஆகிலும் கண்டார் பழிப்பர்
நாண் இத்தனையும் இலாதாய்
நப்பின்னை காணிற் சிரிக்கும்;
மாணிக்கமே! என் மணியே!
மஞ்சனம் ஆட நீ வாராய்.

பசுக்கள் கட்டிய கொட்டகையிலே நுழைந்து புழுதி மண்ணில் அளைந்து அதனால் தூசு படிந்த உனது திருமேனியைப் பார்ப்பதற்கு மிகவும் நான் விரும்புவேன். ஆனால், உன்னைக் காண்பவர்கள் என்னை ஏளனமாக ஏசுவார்கள். சிறிதும் வெட்கமில்லாதவனே! நப்பின்னை நீ இப்படி இருப்பதைக் கண்டால் சிரிப்பாள். என் மாணிக்கமே! என் மணியே மஞ்சன நீராட வருக.

கார் மலி மேனி நிறத்துக் கண்ணபிரானை
உகந்து
வார் மலி கொங்கை யசோதை மஞ்சனம்
ஆட்டிய ஆற்றைப்
பார்மலி தொல் புதுவைக்கோன் பட்டர்
பிரான் சொன்ன பாடல்
சீர் மலி செந்தமிழ் வல்லார் தீவினை யாதும்
இலரே.

கரு முகிலைக் காட்டிலும் சிறந்த திருமேனி நிறத்தையும் கண்ணபிரானை விரும்பிக் கச்சுக்கு அடங்காமல் விம்முகின்ற கொங்கைகளையுடையயசோதை நீராட்டின அருமையை சிறந்த பழமையான வில்லிபுத்தூர் பெரியாழ்

வார் அருளிய அழகு நிறைந்த செந்தமிழா லாகிய இப்பாடல்களை வல்லவர்கள் சிறிதும் கேடில்லாதவராவர்.

## குழல்வாரக் காக்கையை வா எனல்

பின்னை மணாளனை, பேரிற் கிடந்தானை
முன்னை அமரர் முதற் தனி வித்தினை
என்னையும் எங்கள் குடி முழுது ஆட்கொண்ட
மன்னனை, வந்து குழல்வாராய், அக்காக்காய்!
மாதவன்தன் குழல்வாராய், அக்காக்காய்!

காக்கையே! நப்பின்னையின் நாயகன் திருப்பேரில் பள்ளி கொண்டிருப்பவன், முதல்வனான தலைவனும், ஒப்பற்ற காரணமா இருப்பவனும், என்னை எம் குடியிலுள்ளாரெல்லாரையும் அடிமை கொண்ட தலைவனாகிய கண்ணனுக்கு நீ வந்து கூந்தல் வாருவாயாக. காக்கையே! திருமகள் கேள்வனுக்குக் குழல் வாருவாயாக.

பேயின் முலை உண்ட பிள்ளை இவன், முன்னம்
மாயச் சகடும் மருதும் இறுத்தவன்.
காயாமலர் வண்ணன்; கண்ணன் கருங்குழல்
தூய்து ஆக வந்து குழல்வாராய், அக்காக்காய்!
தூமணி வண்ணன் குழல்வாராய், அக்காக்காய்!

காக்கையே! பூதனையின் முலையை உயிரோடு உண்ட பிள்ளை; வஞ்சனைச் சகடத்தையும் இரட்டை மருத மரங்களையும் முறித்தவன்; காயாம்பூ நிறத்தன்; கரியன்; இவனின் கரிய சுருள் முடியை நீ வந்து நன்றாக வாருவாய். தூய நீலமணி, வண்ணனுக்குக் குழல் வாராய்.

திண்ணக் கலத்திற் திரை உறிமேல் வைத்த
வெண்ணெய் விழுங்கி விரைய உறங்கிடும்
அண்ணல்; அமரர் பெருமானை, ஆயர்தம்
கண்ணனைவந்துகுழல்வாராய், அக்காக்காய்
கார்முகில் வண்ணன் குழல்வாராய்,
அக்காக்காய்!

காக்கையே! பின்னிய பெரிய உறிமேல் வைத்த மணக்கும் வெண்ணெயை, மற்றவர் காணுமுன் போய் உண்டு உறக்கம் உறங்குகின்ற இறைவனும் அருளாளனும், இடையர்க்குக் கண் போன்றவனுக்கு அக்காக்காய் வந்து குழல் வாராய்! கருமுகில் நிறமுடையனான இவனின் குடுமியை வாராய்.

பள்ளத்தில் மேயும் பறவை உருக் கொண்டு
கள்ள அசுரன் வருவானைத் தான் கண்டு
புள்இது என்று பொதுக்கோ வாய் கீண்டிட்ட
பிள்ளையை வந்து குழல்வாராய், அக்காக்காய்
பேய் முலை உண்டான் குழல்வாராய்,
அக்காக்காய்!

காக்கையே! நீர்த் தாழ்வுகளில் இரை எடுத்து, கொக்கு உருக்கொண்ட வஞ்சனை அசுரனைப் பார்த்து, அசுரனாகப் பெருக்க நினையாமல், இதுபறவையேயென்றுநினைத்து விரைவாக அதன் வாயைக் கிழித்துப் போட்ட பிள்ளையின் முடியை வாருவாய் அக்காக்காய்! பேய் முலையுண்டான் குழல் வாருவாய்.

கற்றினம் மேய்த்துக் கனிக்கு ஒரு கன்றினைப்
பற்றி எறிந்த பரமன் திருமுடி
உற்றன பேசி நீ ஓடித் திரியாதே
அற்றைக்கும் வந்து குழல்வாராய்,
அக்காக்காய்!
ஆழியான்தன் குழல்வாராய், அக்காக்காய்!

காக்கையே! நீ அங்குமிங்கும் பறந்து கரைந்து திரியாமல், கன்றுகள் கூட்டத்தை மேய்த்து வந்து, கன்றொன்றைப் பிடித்து விளாம்பழத்தை உதிர்த்தற்காக வீசின இறைவனுடைய அழகிய தலைமுடியை நாளும் வந்து வாருவாய். ஆழிக் கையன் குழலினை வாரி முடிப்பாய்.

கிழக்கிற் குடி மன்னர் கேடு இலாதாரை
அழிப்பான் நினைந்திட்டு அவ் ஆழி அதனால்
விழிக்கும் அளவிலே வேர் அறுத்தானைக்
குழற்கு அணி ஆகக் குழல்வாராய்,
அக்காக்காய்!
கோவிந்தன் தன் குழல்வாராய், அக்காக்காய்!

காக்கையே! நமக்கு அழிவில்லையென்று நினைத்திருந்த, கிழக்குத் திசையில் குடியிருந்த நரகன் முதலிய அசுரர்களை அழிக்கும்படி எண்ணி, ஆழியால் கண் மூடித் திறக்கிற காலத்திற்குள் வேர் அறுத்தவன் மயிர் அழகுற குழல் வாருவாய்! கோவிந்தனின் ஈரக் குழலை வாருவாய்.

பிண்டத் திரளையும் பேய்க்கு இட்ட நீர்ச்
சோறும்
உண்டற்கு வேண்டி நீ ஓடித் திரியாதே
அண்டத்து அமரர் பெருமான் அழகு அமர்
வண்டு ஒத்து இருண்ட குழல்வாராய்,
அக்காக்காய்
மாயவன்தன் குழல்வாராய், அக்காக்காய்!

காக்கையே! பிண்டத்தின் உருண்டையும், போகட்ட நீர்ச் சோற்றையும் உண்ண நீ ஓடித்திரிய வேண்டா. மேலுலகத்தேவர் தலைவனாகிய கண்ணனுடைய கருவண்டு ஒத்த நிறமான முடியினை வாருவாய்: வியத்தகு செயல்களையுடைய இவன் தலை முடியைக் கோதி முடிப்பாய்.

உந்தி எழுந்த உருவ மலர்தன்னில்
சந்தச் சதுமுகன்தன்னைப் படைத்தவன்
கொந்தக் குழலைக் குறந்து புளி அட்டித்
தந்தத்தின் சீப்பால் குழல்வாராய், அக்காக்காய்
தாமோதரன் தன் குழல்வாராய்,
அக்காக்காய்.

காக்கையே! தன் உந்திச் சுழியில் எழுந்த தாமரைப் பூவில் உள்ள நான்முகனைப் படைத்தவன் தலையில் சீயக்காய் இட்டுத் தேய்த்ததனால் நெறித்த தலைமுடியைத் தந்தத்தினாற் செய்த சீப்பால் சிக்கெடுத்து வாருவாய்! அக்காக்காய்! தாமோதரன் முடியைச் சீவுவாய்.

—(தொடரும்).

# அலங்கார நாயகன்

கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

### 34. ஞானம் அருள்க முருகா !

கிரௌஞ்சமலையை தன் வேல்விட்டு அழித்த பெருமானே! உன்னையடைய வேண்டிய வழியிலிருந்து தப்பி, தவறான வழி செல்லும் இந்த எளியவனுக்கு மெய்யறிவு தரும் ஞான நூலையளிப்பாய். அடியேனது பெண்ணாசையை ஒழித்தருள்க. பெண் என்பது வெளிமயக்கம் என்பதை பட்டினத்தடிகள் தம் கச்சித்திரு அகவலில் கூறுவார்.

''மாதரை மகிழ்ந்து காதல் கொண்டாடும்
மானுடர்க் கெல்லாம்யானெடுத்துரைப்பேன்''

கள்ளிலும் முள்ளிலும் நடக்கும் பாதங்களைப் பஞ்சு என்றும், வெள்ளெலும்பால் இயங்கும் கணைக்காலை வரால் மீன் என்றும், துடைகளை வாழைத் தண்டென்றும், மலமூத்திராதிகள் நிறைந்த வயிற்றை ஆலிலையென்றும், மார்புகளை மொட்டென்றும், கையைக் காந்தள்மலரென்றும், வேர்வையும் அழுக்கும் நிறைந்த கழுத்தைக் கமுகு என்றும், ஊத்தைப் பற்களை முத்தென்றும், நீரும் சளியும் நிறைந்த மூக்கை குமிழென்றும், பீளைசாயும் கண்ணை கழுநீர் மலரென்றும், காதை வள்ளைத் தண்டு என்றும் பேனும் பொடுகும் விளையும் கூந்தலை மேகமென்றும் கூறித் துதிக்க வேண்டாம். இதற்கு மாறாய் இறைவனை வணங்குங்கள் என்றார்.

'பச்சிலை யிடினும் பத்தர்க்கு இரங்கி
மெச்சிச்சிவபத வீடருள்பவனை
முத்திநாதனை மூவாமுதல்வனை
அண்டர் அண்டமும் அனைத்துளபுவனமும்
கண்ட அண்ணலை: கச்சியின் கடவுளை
ஏகநாதனை இணையடி இறைஞ்சுமின்
போகமாதரைப் போற்றுதல் ஒழிந்தே''.
—கச்சித்திரு அகவல்

போக மாதர்களின் கண்கள் பெண்ணாசைப்படுபவரின் உயிரைக் குடித்து விடும் கொடுமையுள்ளது. தங்களது கூந்தலாகிய காட்டில் உள்ள கண்கள் என்றவலையை வீசி நம் மனங்களாகிய பறவைகளைப் பிடிப்பார்.

எனவே அடியேன் பெண்ணாசைப்படாத நல்லறிவு நூலை அடியேனுக்குப் போதிப்பீர்களாக; பெண்ணிடம் செல்லும் மனத்தை அடக்கியருள்வீராக என்றார்.

''பொட்டாக வெற்பைப் பொருத கந்தா:
தப்பிப்போன தொன்றற்கு
எட்டாத ஞான கலை தருவாய்! இருங்காம
விடாய்ப்
பட்டு ஆருயிரைத் திருகிப் பசி தணிக்கும்
கட்டாரிவேல் விழியார் வலைக்கே மனம்
கட்டுண்டதே''

### 35. பத்திவழியில் செலுத்தியருள்க

இறைவனது அருளாகிய கடலில் மூழ்குவதற்கு பக்தி என்ற துறையில் நுழைய வேண்டும். பக்தி என்பதும் அன்பும் ஒன்றே. அன்பே சிவம். பக்தி செய்து அன்புருவாக மாறி அன்புருவான ஆண்டவனை அடைய வேண்டும். இறைவனையடைய பக்தியாகிய வலையை விட்டால், இறைவனான மீன் பக்தி வலையில் அகப்பட்டுக் கொள்ளும். 'பக்தி வலையில் படுவோன் காண்க' என்றார் மணிவாசகர். பக்தி வலையில் அகப்பட்டுக் கொண்ட இறைவனான மீன் அருளாகிய வலையை நம்மீது வீசி, கவலையாக வலையிலிருந்து விடுவிப்பார் என்கிறார் திருவிளையாடற்புராணமுடையார். (அன்பெனும் வலைப்பட்டவர் அருள்வலைப்பட்டார் துன்ப வெம்பவ வலையறுத்திட வந்த தொண்டர்)வேதங்களும் பரமவிட்டுணுக்களும் தேடிக் காணக் கிடைக்காத பெருமான் பக்திக் கிசைந்து நமக்குக் காட்சி கொடுத்தருள்வான்.

நமது புத்தியில் ஏற்படக் கூடிய சந்தேகங்களான அலைகள் (தரங்கங்கள்) இறைவனது இன்பக்கடலில் படிவதால் மாறிவிடும். அந்த நாள் என்று வரும் என முருகப் பெருமானிடம் கேட்கின்றார்.

ஞான வேலாயுதப் பெருமான் சூரனின் ஆணவத்தை ஒழித்தார். அத்தகைய வேலாயுதப் பெருமானின் இன்பத்தில் மூழ்கியவருக்கு அறியாமையால் ஏற்படும் சந்தேகங்கள் நீங்கி விடும்.

அமராவதி என்பது தேவருலகம், கற்பகம், காமதேனு, சிந்தாமணி முதலான தெய்வீகப் பொருள்களையுடையது. சூரபன்மன் தேவேந்திரனைத் துரத்தி யாவற்றையும் கவர்ந்து கொண்டான். முருகப் பெருமான் சூரனை ஒழித்து தேவருலகத்தை தேவேந்திர

னுக்கு அளித்தனர். இந்திரன் பயம் நீங்கி வாழ்ந்தான்.

அத்தகைய பக்தி வழியைக் காட்டி நம்மை ஆட்கொள்ளுமாறு முருகப் பெருமானை வேண்டுவோமாக.

''பத்தித் துறை இழிந்து ஆனந்தவாரி
படிவதனால்
புத்தித்தரங்கம் தெளிவதென்றோ! பொங்கு
வெங்குருதி
மெத்திக்கு திகொள்ள வெஞ்சூரனை விட்ட
சட்டியிலே
குத்தித்தரங் கொண்டு அமராவதி கொண்ட
கொற்றவனே''

## 36. இன்பதுன்பமற்ற செல்வநிலை

மழை வந்தால் ஆற்றில் வெள்ளம் வருகிறது. மழையில்லாவிட்டால் வற்றி விடுகிறது. அது போல இறைவனது அருள் மழை இருந்தால் செல்வம் வரும். அருள் குறைந்தால் செல்வம் குறையும். தரித்திரத்தில் நிரந்தரமாக வாடினவர் கிடையாது. அதே போல் செல்வத்தில் என்றுமே திளைத்திருந்தவரும் கிடையாது. அப்படியிருக்க 'என் செல்வம்' எனப் பேச வேண்டாமே என்கிறார் நீதி நூலில் வேதநாயகம் பிள்ளையவர்கள்.

''தரித்திரம் தரித்திரம் என்னும் தாரணி
சிரித்திடச் செல்வமே செல்வமே என்னும்இச்
சரித்திரம் உணர்ந்துமே தரையில் பொன்
எமக்கு
உரித்தெனச் செருக்குதல்உரனன்று உள்ளமே''

என்றைக்கும் நிரந்தரமாக உள்ள நீதிநூல் இறைவனின் திருவடி அல்லது திருவருளை நிற்கின்ற செல்வம் என்பார் கம்பர். செல்வத்தை யடைந்த போது மகிழ்ச்சியும், இழந்தபோது துக்கமும் மாறி மாறி வரும். 'இந்த அரசை ஏற்றுக் கொள்' என தசரதர் கூறியபோது மகிழ்ச்சியில்லை; இதை விட்டுக் கானகம் செல் என்று கைகேயி கூறிய' காலத்தில் தூக்கமும் இல்லை. இராமபிரானது முகம் 'சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை' போலிருந்தது என்கிறார் கம்பர். எனவே செல்வத்தை நம்பாது, சுகதுக்கங்களைப் பாராட்ட இறைவன் நாமம் கூற வேண்டும். .'முத்தைக் கொழித்தோடும் காவிரியாறுசூழ்ந்துவரும் திருச்செங்கோடனே'' என அழைப்பாய். கங்கையில் நீராடினால் புண்ணியம். காவிரியை மனத்தாலே நினைத்தாலே புண்ணியம். காவேரி ராஜன் மகளானபடியினால் காவேரிஎன்றுபெயர் என்பர். சீர்காழியில் நந்தவனங்கள் வாட தேவேந்திரன் விநாயகப் பெருமானை வேண்ட அவர் குடகில் தன் பக்கத்தில் ஒரு கமண்டலத்தில் கங்கை நீரை நிரப்பி வைத்துக் கொண்டு தவஞ் செய்ய, விநாயகர் அதைத் தட்டிவிட தண்ணீர் விரிந்து வந்ததாலும், சீர்காழியில் இந்திரன் வைத்த 'கா' நந்தவனமான பூங்கா விரிந்து பெருகி நந்தவனத்தைக் காப்பாற்றியது. காவை



விரிந்து செழிக்கச் செய்தமையால் காவிரி எனப் பெயர் வந்தது.'கங்கையின் புனிதமாய காவிரி' எனத் தொண்டரடிப்பொடியாழ்வாரும்'புலவர் நாவிரி பாவிரி காவிரி' என மகாவித்வான் பிள்ளையவர்களும், 'ஏழ் தலம் புகழ் காவிரி' என அருணகிரி நாதரும் வர்ணித்த சிறப்புடையது காவிரி. அத்தகைய காவிரி சூழ்ந்த திருச்செங்கோடன் என்றும் 'மலைகளைப் பிளந்த வேலாயுத என்றும் அழைக்காமல் செல்வத்தை போற்றி, சுகம். துக்கம் என மாறி அனுபவிக்கின்றாயே' என மனத்தையே கேட்கிறார் இப்பாடலில். இவர் பல இடங்களில் திருச்செங்கோட்டைப் போற்றுவது மிக அழகாக உள்ளது. செங்கோட்டு வேலனை வணங்காது முக்தி எங்ஙனம் கிட்டுமென்கிறார்.

''சுழித்தோடும் ஆற்றிற் பெருக்கானது
செல்வம்: துன்பமின்பம்
கழித்தோடுகின்ற தெக்காலம்! நெஞ்சே! கரிக்
கோட்டு முத்தை
கொழித்தோடு காவிரிச் செங்கோடன்
என்கிலை குன்றமெட்டும்
கிழித்தோடும் வேல் என்கிலை எங்ஙனேமுக்தி
கிட்டுவது!

## 37. காமம் ஏற்படினும் கந்தனை மறவேன்

பெண்ணாசை என்ற பாம்பு, புத்தியான மதியை விழுங்கிவிடும். மையல் நாகம் மதியை விழுங்கும் என்றார் திருவிளையாடற்புராணத்திலே. தான் ஆசைப்படும் பெண் கோபித்தால் கூடக் காமுகனுக்கு இனிமையாயிருக்கும். இனிமையாகப் பேசிமயக்கும் கற்கண்டுபோன்ற சொல்லையுடைய பெண்கள் நம்மிடம்பொருள் பறித்து விடுகிறார்களே! தாயுமானவர்

''கண்டு மொழி பேசி மனம் கண்டு கொண்டு
கைவிலையாக
கொண்டுவிடுமானார் பொய்க்கூத்தொழிவ
தென்னாளோ!''

என்றார். காமத்தின் கொடுமையைத் திரு விளையாடற்புராணத்திலே

''காமமே கொலைகட்கெல்லாம் காரணம்:
கண்ணோடாத
காமமே களவுக்கெல்லாம் காரணம்' கூற்ற
மஞ்சும்
காமமே கள்ளுண்டற்கும் காரணம் ஆதலாலே
காமமே நரகபூமிகாணியைக் கொடுப்பதென்
றான்''

காமம், கொலை, களவு, கள்ளுண்டல் முதலான எல்லாக் கெடுதல்களையும் கொண்டு வந்து விடும்.

இப்படிப்பட்ட பெண்ணுடன் மயங்கி இருந்தால்கூட, முருகா! உன் ஞானவேலாயுதத்தை மறக்க மாட்டேன் என்கிறார்.

பெரிய ஒலியுடன் பேய்கள் கூத்தாட, சூரனைக் கொன்ற பெருமானே! உனை மறவேன்.

குதிரையேறி வருவோரை 'ராவுத்தர்' எனக் கூறுவது வழக்கம். மயிலைக் குதிரையாக்கினார். கந்தரனுபூதி முதற் பாட்டிலும் 'ஆடும்பரி' என மயிலைக் குறித்தார்.

காமம் எல்லாத் தீமைகளும் ஏற்படச் செய்யும்.

''கொலையஞ்சார்: பொய்ந்நாணார்: மானமும்
ஓம்பார்:
களவொன்றோ ஏனையவும் செய்வார்—
பழியொடு
பாவமிஃதென்னார்: பிறிது மற்றென்செய்யார்
காமம் கதுவப்பட்டார்''.

இத்தகைய கொடுமையான காமத்தில் ஈடுபட்டாற்கூட முருகப் பெருமானின் வேலாயுதத் தத்தை மறக்க மாட்டேன் என்கிறார்.

''கண்டுண்ட சொல்லியர்: மெலியர்: காமக்
கலவி கள்ளை
மொண்டுண்டயர்கினும் வேல்மறவேன்
முதுகூளித்திரள்
டுண்டுண் டுடுடுடு டூடூ டுடுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண்டெனக்கொட்டியாடவெஞ்சூர்
கொன்றவனே''.

## 38. முருகனடியார்க்கு எந்நாளும் நந்நாளே !

மதுரைக்கு ஞானசம்பந்தர் புறப்பட்ட போது, அப்பர் சுவாமிகள் 'ஆ' தகாது! தங்களுக்கு நேரம் சரியாயில்லை. பல நாள் பழகிய என்னையே படாதபாடுபடுத்திய சமணர் தங்களுக்குக் கெடுதல் செய்துவிடுவர்' எனக்கூறிய போது ஞானசம்பந்தப் பெருமான் 'எந்தைஎம் பெருமான் அருளில்லாதவர்போல் பேசுகின்றீர்கள். நாளும் கோளும் இறைவனுக்கு அடங்கினவை. அடியாரை அவை ஒன்றும் செய்யா' எனக் கூறி 'வேயுறு தோளிபங்கன்' எனத் தொடங்கிக் கோளறுபதிகம் பாடினார் என்கிறார் திருவிளையாடலை எழுதிய பரஞ்சோதி மாமுனிவர்.

முருகப் பெருமானை வணங்கும் அடியாருக்கு நட்சத்திரம், திதி தீமை ஒன்றும் செய்யாது என்பர். இருபத்தியேழு நட்சத்திரங்களில் பிறந்தவரைக் காக்க முருகப் பெருமான் இருபத்தேழு சாதனங்களை வைத்துக்கொண்டு காப்பாற்றுகிறார் என சமீபகாலப் புலவர் ஒருவர் பொருள் கண்டார். குமரேசன் இரண்டு திருவடிகள், சிலம்பு 2, தண்டை 2, சதங்கை 2ஆக எட்டு. சண்முகம் ஆறு, எட்டும் ஆறும் பதினான்கு. தோள்கள் பன்னிரண்டு. பதினான்கும் பன்னிரண்டும் சேர்ந்து இருபத்தியாறு. கடம்பமாலையைச் சேர்த்து இருபத்தேழு' எனக் கூறினார்.

ஊழ்வினையையும் விரட்டும் வேல் என்பதால் வினையோடவிடும் கதிர்வேல் என்று அனுபூதியிலே கூறினார். நாம் செய்த பாவத்தின் காரணமாக நம்மை நாடி வந்து துன்புறுத்தக் கூடிய நவகிரகங்களான கோள்களும் தீமை ஒன்றும் செய்யாது என்றார்.

எவரையும் அழிக்கக் கூடிய யமன் கூட முருகனடியாரிடம் வரமாட்டான். 'கரவினில் வந்துயிர் குலத்தினையழிக்கும் காலன் நடு நடுங்க விழித்தோம்' எனப்பாரதி யமனையும் எதிர்க்கத் துணிந்த வீரம் முருகனடியாருக்கு வந்து விடும்.

கந்தவேள் எவ்வளவு வயதானவரானாலும் இளமை மாறாதவர். அதனால் 'என்றும் இளையாய்' எனநக்கீரரால்அழைக்கப்பட்டார். அத்தகைய கந்தவேளின் திருவடிகளில் தண்டையும், சிலம்பும் சதங்கையும் குலுங்கி வேத முழக்கமாகவே இருக்கும். 'எழுதரிய மறைச் சிலம்பு கிடந்து புறத்தலம்ப' என இறைவன் திருவடிகளில் வேதம் சிலம்பு, தண்டை, சதங்கைகளாக மாறி வேத கோஷம் செய்துகொண்டிருந்தன என்பர் திருவிளையாடலிலே.

இப்பாடலை நித்யபாராயணம் செய்வோருக்கு எந்த விதமான பயமும் அபாயமும்வராது என்பது பெரியோர்களின் துணிபு. அவ்வாறே செய்து அவனருள் பெறுவோமாக.

''நாளென் செயும்! வினைதான் என் செயும்!
எனை நாடி வந்த
கோளென் செயும்! கொடுங்கூற்று என் செயும்
குமரரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும்
சண்முகமும்
தோளும்எனக்கு முன்னே வந்துதோன்றிடினே''

# மனோவிருத்திச் செலவு

டி. என். எஸ். முருகதாஸ் தீர்த்தபதி
சிங்கம்புணரி

'அது பழங்கணக்கு' என்று வழக்கில் ஒரு சொல்லுண்டு. சாதாரணமாக யாருமே பழைய கணக்குப் பார்க்கமாட்டார்கள். இதற்கு மாறாக எனக்குப் பழங்கணக்குப் பார்ப்பதில் ஒரு ஆர்வம் உண்டு. இலக்கியங்களை Mirror of the age என்று சொல்வார்கள் (காலத்தின் கண்ணாடி). அது போன்றுதான் பழம் கணக்குகளும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். எங்கள் சிங்கம்பட்டி அரண்மனை கணக்குகள்மட்டும் அல்லாது எனக்குத் தொடர்புள்ள ஏனைய மற்ற அரண்மனை கணக்குகளையும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பார்வையிடுவது வழக்கம்.

அவைகளில் பலதரப்பட்ட வகைகளுடன் கணக்குகள் எழுதப்பட்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். அதாவது 'அவசரச் செலவு', 'தடபுடல் செலவு' 'யுக்தானுசாரச் செலவு' மற்றும் 'மனோவிருத்திச் செலவு' என்று எழுதப்பட்டிருப்பதில் 'மனோவிருத்திச் செலவிற்கு' மட்டும் பேரேட்டில் ஒரு தனி ஏடே போடப்பட்டிருக்கும். இவ்வகைச் செலவுகள் பெருவாரியானதாக இருந்தால் மட்டும் இதரச் செலவு எட்டில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதே தவிர மற்றெல்லாம் மனோவிருத்திச் செலவு ஏட்டிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளன. ஏறத்தாழ அரண்மனை விசேடங்களை ஒட்டியே மேற்படி வகைச் செலவுகள் மனோவிருத்திச் செலவு ஏட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதைக் காண நேரிட்டது. எங்கள் அரண்மனையிலும் இன்னும் பல அரண்மனைகளிலும் 'மனோவிருத்தி' செலவு ஏடு இன்னும் கையாளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் எனது தாய்வழி அரண்மனையான முகவை அரண்மனையில் எனக்கு பாட்டி முறைமையான, மேதகு பாஸ்கர சேதுபதி அவர்களின் ஒரே செல்வ மகளும், ராஜ ராஜ சோழனின் தமக்கை குந்தவைப்பிராட்டிக்கு நிகரான அழகும், அந்தஸ்தும், அதிகாரமும், பெற்று சீரும் சிறப்புமாக வாழ்ந்த ராஜகுமாரி திருமதி ராஜமாணிக்க நாச்சியார் அவர்களை, அணுகி விபரம் கேட்டேன். அவர்கள் காலில் அணிந்திருந்த விலை மதிக்க முடியாத நவரத்ன் கொலுசு ஒரு வேண்டுகோளிற்கு இணங்க ஒட்டியாணமாக செய்விக்கப்பட்டு அருள்மிகு இராமேஸ்வரக் கோயில் பருவதவர்த்தனி அம்பாளுக்கு அணிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களால் கொடுக்கப்பட்ட விளக்கமாவது:—'அவசரச் செலவு' வகை எழுதக் கூடாதச் செலவு, தடபுடல் செலவு—விசேடங்களில் அரச பரம்பரையினர் வருகை தந்திருப்பவர்களுக்கு மகிழ்ச்சி உண்டு பண்ணுவதற்கென ஏற்பட்டுள்ள கேளிக்கைச் செலவு, யுக்தானுசாரச் செலவு—அரசருடைய சொந்தச் செலவு, கணக்கர் விபரம் கேட்ககூடாது.

இம்மட்டுடன் 'மனோவிருத்திச் செலவு' என்ற ஏட்டின் விளக்கத்தை, நிலுவையில் ஒத்தி வைத்துவிட்டு, Flash Back என்ற அடிப்படையில் முற்காலங்களில் நடந்த நிகழ்ச்சி சிலவற்றை காண வாசகர்களை அழைக்கிறேன்.

அவுரங்கசீப் என்ற மொகலாய மன்னர் தமது தமையனை அகற்றி அரியணை ஏறியது போன்ற பல கொடூரமான செய்கைகளை செய்திருந்தாலும்கூட மக்களிடம்வரி வசூலித்து கஜானாவில் நிரம்பியுள்ள பணத்திலிருந்து நாம் வாழக்கூடாது என்ற பெரும் நோக்கோடு அன்றாடம் குல்லா தைத்து விற்று ஈட்டிய பணத்தில் வாழ்ந்து வந்தார் என்பது கவனிக்கத்தகுந்தது.

என்னை ஈன்றெடுத்த தாயின் தந்தையார் அறிவின் சிகரம், மூன்றாவது முத்துராமலிங்க சேதுபதி அவர்கள், மக்களிடம் பெறும் வரி மக்கள் நலத்திற்கும், மற்றும் தம் நாட்டின் நலத்திற்கு மட்டுமே செலவு செய்ய வேண்டும் என்றுகருதி தனக்கும் தன் குடும்ப சம்ரட்சணைகும் என்று 'சிறுதட்டு' என்ற பண்ணைநிலங்கள் பத்தாயிரம் ஏக்கரா சேகரித்து அதற்குள் வாழ்ந்தார் என்பது இங்கு குறிப்பிடத் தகுந்தது. சிற்றரசர்கள் (ஜமீன்தார்) மற்றும் மாநில மன்னர்கள் ( State Rulers ) சொந்த உடமையான பண்ணை நிலங்களுக்கு குடிமக்களுக்கு நிகராக அவைகளுக்கும் பட்டா வழங்கி நிலவரி கட்டி வந்தார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தகுந்தது.

ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் சேர நாட்டுஅரசரிடம்வேலுத்தம்பி தளவாய் என்று ஒரு முதலமைச்சர் இருந்தார்...நேர்மை,.ஒழுக்கம், சீர்மை, கண்ணியம், கடமை, பண்பாடு என்ற சகல கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமாகத் திகழ்ந்தார்.

ஒருநாள் மாலை மன்னர் உலாவச் சென்றார். அப்போது நதியில் நீராடிப் பல பெண்கள் வீட்டிற்குக் குடங்களில் நீர் கொண்டு வருவதைப் பார்த்தார். அவர்கள் மத்தியில் ஏழ்மைப் புலப்படும் வகையில் பல கந்தலோடு சேலை கட்டிய ஒரு மாது வருவதைக் கண்டு வருந்தி அம்மாது யார்? என்று விசாரித்தார். கூட வந்த அலுவலர்கள் இதுதான் நமது முதலமைச்சர் திரு வேலுத்தம்பி தளவாயின் மனைவி என்றும், மற்றும் மழைக்கும், வெயிலுக்கும் பாதுகாப்பின்றிப் பிய்ந்த கூரை வீடு ஒன்றைக் காட்டி இதுதான் அவர் வாழும் வீடு என்றும் சுட்டிக் காட்டினார்கள். சேர நாட்டிலே அவரது ஆணையின்றி அணுவும் அசையாது என்ற நிலையிருந்தும் அவர் ஏன் இந்த ஏழ்மை



திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் ஆலய பிரம்மோற்சவ விழாவில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு நடேசன் பால்ராஜ் அவர்கள் தம் குடும்பத்தோடு கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

---

நிலையில் வாழ வேண்டும் என்று வருந்தி மேல் போகாமல் உடன் அரண்மனை திரும்பி விட்டார். திரும்பிய அரசர் உடன் ஒரு தங்கத் தட்டில் சிறந்த பட்டுச் சேலை ஒன்றை வைத்த துடன் அதற்கு ஏற்ற அணிகலன்களையும் அத் துடன் வைத்து அமைச்சர் வீட்டிற்கு அனுப்பி வைத்தார். வெளியூர் சென்றிருந்த அமைச்சர் வீடு திரும்பினார். அவர் கண்ணிற்கு அவரது மனைவி அலங்கார பூஜிதையாக தென்பட்டார். இவைகளை உனக்கு யார் கொடுத்தது என்று கேட்டார். அவரது மனைவியும் நிகழ்ந்ததை நிதானமாகச் சொன்னாள். உடன் அவைகளை கழற்றச் சொல்லி அதே தங்கத்தட்டில்வைத்து அரண்மனை சென்று அரசன் முன் நின்றார். ‘இதை எல்லாம் ஏன் எனது வீட்டிற்கு அனுப் பினீர்கள்? என்று கேட்டார். தமது நாட்டு முதலமைச்சர் ஏழ்மையில் வாழ்வது அறியாது இருந்துவிட்டதை நினைந்து அனுப்பினதாக அரசன் சொன்னார். இதெல்லாம் மக்களிடம் பெறப்பட்ட வரிப்பணத்தில் ஈட்டப்பட்டவை. மக்கள் நலம் கருதி செலவு செய்ய வேண்டுமே தவிர நம் சொந்தத்திற்குச் செலவு செய்வது நீதிக்கு புறம்பு என்றும் மற்றும் ‘உமது தகப்பன் வீட்டுச் சொத்து என்று நினைத்தீரோ’ என்று கடிந்து பேசிவிட்டுத் தட்டைக் கீழே வைத்து விட்டுச் சென்றுவிட்டார்.

மற்றொரு காலக்கட்டத்தில் வீடுதோறும் நிற்கின்ற மரங்களை கணக்கெடுத்து வரி விதிக்க தீர்மானிக்கப்பட்டது. அதன்படி கணக்கு எடுத்ததை தணிக்கை செய்து மேல் பார்க்கவும் அரசு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். அப்படிப்பட்ட அதிகாரி ஒருவர் வேலுத்தம்பி தளவாய் வீட்டில் நிற்கின்ற மரங்கள் முறையாக பதிவு செய்யப்பட்டிருக்கிறதா வென்று தணிக்கை செய்ய வந்தார். பதிவு செய்யப்பட்ட விப ரங்கள் சற்று ஏறத்தாழ இருந்தால் அவை களை மாற்றி அமைக்கும் அதிகாரமும் அவ ருக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த அதிகாரி இதனால் தளவாய் வீட்டில் நிற்கின்ற மரங் களுக்கு நிர்ணயிக்கப்பட்ட வரி முறையாக இருந்த போதிலும் தனக்குள்ள அதிகாரத்தை மேற்கொண்டு வரி விதிப்புகளை பரிசீலனை செய்து தளவாய்க்கு சலுகை செய்யும் வகை யில் வரி விதிப்பை பாதியாக்கிவிட்டார். இதன் பின் தளவாய் அவர்களே பதிவுகளை மேல் ஆய்வு செய்தபோது தன் வீட்டிலுள்ள மரங் களுக்கு வரி சலுகை செய்யப்பட்டது துலங் கிற்று, உடன் அந்த அதிகாரியை அழைத்து விசாரித்தார். அவரும் தளவாய் வீட்டிற்கு சலுகை செய்ய வேண்டும் என்று செயல்பட் டதை ஒப்புக் கொண்டார். அரசிற்கு விரோத மாக செயல்பட்ட அந்த அதிகாரியின் வலது கரம் வெட்டப்பட்டது. இதைப் பார்த்துக் கொண்டு இருந்த தள்வாயின் தாய் தடுத்தும் அலுவலரின் கை வாங்கப்பட்ட அதிர்ச்சியில் உடல் நலம் குன்றி உயிர்நீத்தார் என்பது வரலாறு.

மனோவிருத்திச் செலவு, பேரேட்டில் இதற்கு ஒரு தனி ஏடு, மனோவிருத்திச் செலவு என்பது குடும்பச் செலவு, அரசருடைய குடும்ப செலவு இதில் பதிவாகும். இதில் அவருடைய அனாவசிய மற்றும் ஆடம்பரமான செலவு களும் பதிவாகும். அரசர் தெண்டச்சோறு சாப்பிடக்கூடாது. அவர் வாழ்ந்து ஆத்ம விசாரணை செய்து மனதை விருத்தி செய்து கொள்ளல் வேண்டும். ஏட்டின் தலைப்பை அடிக்கடி பார்க்கும்போது தவறான வழியில் சென்றால் சரி செய்து கொள்ளல் வேண்டும். ஆசுவேதான் மனோவிருத்தி செலவு என இதற்குப் பெயர் வழங்கியுள்ளனர் என்பது தெளிவாகிறது.

# பதினெண் புராணச் சுருக்கம்

ஸ்ரீவத்ஸ. வெ. சோமதேவசர்மா

## புராணம் என்றால் என்ன?

பழமையானது. அண்டியவரை முன்னுக்குக் கொண்டுவருவது. பழயதாயினும் புதிதாகத் தோன்றுவது. உலக சிருஷ்டி உலகம் இறைவனிடம் ஒடுங்குதல், சந்திரர் சூரியர்களது வம்சம், பதிநான்கு மன்வந்தரம், பெருமை வாய்ந்த மன்னர்களது சரிதம் ஆகிய இவைகளையே குறியாகக் கொண்டவை புராணங்கள். அதே புராணலட்சணமாகும்.

## புராணம் எப்படி உண்டானது?

வேதம் இதிகாசம் புராணம் உபநிஷத்து கல்பம் முதலியவைகள் கடவுளிடமிருந்து மூச்சுக் காற்றுப்போல் உண்டாயின. புராணம் நூறுகோடி சுலோகங்கள் கொண்ட ஒரே நூலாக இருந்தது. கற்பத்தின் ஆரம்பத்தில் இருந்தவர் அதைக்கொண்டு பயன் பெற்றனர். காலம் வரை வளர ஜனங்களின் சித்தி பல விஷயங்களில்சென்றுஒருமைப்படாமல் குன்றிப் போயிற்று. இதை அறிந்த இறைவன் ஒவ்வொரு சதுர்யுகத்திலும் ஒவ்வொருவரை அனுப்பி வேதத்தை நான்காகப் பிரித்தது போல் புராணத்தையும் பதினெட்டாகப் பிரிக்கும்படி உத்திர விட்டார். நான்கு லட்சம் சுலோகம் உள்ள பதினெட்டு புராணங்கள் துவாபர யுகத்தின் முடிவிலே வகுக்கப்பட்டது.

## புராண கர்த்தா யார்?

கற்பம் தோன்றிய பின் இருபத்து ஏழு சதுர்யுகங்கள் தோன்றி மறைந்தன. இதுவரை இருபத்து ஏழு வியாசர்கள் தோன்றி இறைவன் கட்டளையை நிறைவேற்றியதுபோல் சென்ற துவாபர யுகத்தின் முடிவில் விஷ்ணு வேத வியாஸராகத் தோன்றிப் புராண பாகுபாடு செய்தார். ஆதலின், 'வியாஸாய விஷ்ணுரூபாய வியாஸரூபாய விஷ்ணுவே' என்பர். சிவம், நாராயணன், பிரும்மா, வசிஷ்டர், சக்தி பராசரர் வியாஸர் என்பது குரு பரம்பரையாகும். பராசரமுனிவர் செம்படவனால் வளர்க்கப்பட்ட சத்யவதி என்பவளை மணந்தார் .அவள் ஒரு மன்னனது மகள். சாபத்தினால் மீனாக அப்ஸரனிடம் உண்டானவள். முனிவரை ஓடத்தில் ஏற்றி யமுனையைத் தாண்டி வைக்கும் பொழுது பராசர் தன்தவவலிமையால் மச்சகந்தியை யோஜனைகந்தியாகச் செய்தார். ஸப்தரிசிகளை அழைத்து விதிப்படி மணந்தார். பனியினால் ஒரு தீவுபோல் செய்து அங்கு ஒரு புத்திரனைப் பெற்றார். தீ விபத்தில் உண்டானதால் துவைபாயனர் என்றும், கருநிறத்துடனிருந்ததால் கிருஷ்ணன் என்றும் பெயர் உண்டானது. பிறகு வேதத்தை நான்காக வகுத்து வேதவியாஸர் என்ற காரணப் பெயரைப் பெற்றார். அவரே காசி மாநகரத்திலிருந்து பதினெண் புராணங்களை இயற்றியவர். மகாபாரதமெனும் இதிகாசத்தையும் பிரம்ம சூத்திரமெனும் வேதாந்த சூத்திரங்களையும் இயற்றியவர் இவர்.

**புராணத்தின் பெருமை:** மிகப்பழமையான பதினான்கு வித்தைகளில்ஒன்று புராணம். அது வேதத்தின் அங்கமாகும். வேதம் இருக்கு, யஜுர்,ஸாமம், அதர்வணம் என்ற நான்காம். சீட்சை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம்,கல்பம் என்பன ஆறு அங்கங்கள். புராணம் நியாயம் மீமாம்ஸா தருமசாஸ்திரம் என்பன நான்கு உப அங்கங்களாம். வேத புருஷனுக்குப் புராணம் ஆத்மா எனப்படும். பாரத நாட்டுப் பதிநான்கு வித்யைகளில் அறுபத்து நான்கு கலைகளும் அமைந்திருக்கின்றன. மற்ற அங்கம் ஒவ்வொரு விஷயத்தையேகூறும். புராணமோ, வேதத்தினுள்ளே காணப்படும் ஸகல விஷயங்களையும் எளிய நடையில் எல்லோரும் அறியும்படி விளக்குகிறது. ஆதலால் நித்திய கருமம்போல் அன்றன்றும் புராணம் கேட்க வேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது. அன்றன்று செய்யும் பிரும்மயக்ஞம் என்ற நித்தியகருமத்தில் நான்கு வேதங்களுக்கும் இதிகாச புராணங்களுக்கும் ஜலதர்ப்பணம் செய்யும்படி தர்மநூல் ஆணை இருக்கிறது, பாஷ்யம் இயற்றிய ஸகல ஆசாரியர்களும் புராண சுலோகங்களையே மேற்கோளாகக் காட்டுகின்றனர். ஆதலின் புராணம் ஒரு தெய்வீக நூலாகும்.

புராணங்களில் மறையின் பொருள் மறைந்திருக்கின்றன. அது மிக சூட்சுமமானது. அதைக் கதையின் மூலமாக பூதக்கண்ணாடி போல் விளக்கிப் பெரிதாகக் காட்டுகிறது புராணம், வேதம் மாத்திரம் கற்றால் கல்வி

பூர்ணமாகாது. பூரணமாக அங்கங்களையும் கற்காதவனைக் கண்டு வேதம் 'உள்ள பொருளைக் கூறாமல் நம்மை இவன் கொல்லுவானோ' என அஞ்சுகிறதாம். ஆதலால் இதிகாச புராணங்களால் வேதத்தின் பொருள்களை விரிவுபடுத்த வேண்டும். வேதமொழி அரசன் ஆணை. தர்மநூல் நண்பன்மொழி. புராணச் சொற்களோ, கல்மனத்தையும் கரைக்கும் காதலியின் மொழி போன்றதாம். 'தர்மம் செய்' என்பது வேதத்தின் ஆணை. ஏன் செய்ய வேண்டும்? அதனால் வரும் பயன் யாது! என்ற கேள்விக்கு இடமில்லை. நாம் தேடிய பொருள் இல்லத்திலே நிற்கும். உறவினர் சுடுகாட்டுடன் திரும்புவர். தர்மமே உற்ற துணைவனாக உன்னை விட்டுப் பிரியாமல் வரும் என்று நண்பன் மொழி போன்ற தர்மசாஸ்திரம் கூறும். காதலிமொழியான புராணமோ ஒரு கதை கூறி மாந்தர் மனத்திலே பசுமரத்தாணிபோல் அதைப் பதிப்பிக்கின்றது.

மன்னன் ஒருவன் மனுநீதி வழுவாமல் மாநிலத்தை ஆண்டு வந்தான். மாறுவேடம் பூண்டு மறைந்திருந்து மக்கள் துன்பத்தை விலக்குவான். கறிகாய் விற்று வயிறுவளர்க்கும் ஒரு ஏழை தன் பொருள் விற்பனையாகாமல் மனம் நொந்து மாலையிலே மனைக்குச் செல்வதைக் கண்டான் மன்னன். அரசன் ஆணை விடுத்தான். விற்காத பொருளை விலைக்கு வாங்கி வேந்தன் வீட்டிலே சேர்த்தான் பணியாளன். அதர்மத்திற்குக் கண் உறுத்திற்று. சீறியது அதர்மம். அரசனை ஒரு கை பார்ப்போம் என எண்ணியது. மிக ஆபாஸமான பயங்கரமான மூதேவியின்உருவம் ஒன்றை அனுப்பினான் கடை வீதிக்கு. அதைக் கண்டவர் கண்களை மூடிக்கொண்டு வெகு தூரஞ் சென்றனர். பொழுது சாய்ந்தது. எல்லாப் பொருள்களும் விற்று முதலாயின, அனைவரும் வீடு சென்றனர். மூதேவி உருவக்காரர் அவ்வுருபோலவே நின்றார். ராஜகிங்கரன் அரசாணையின்படி, கேட்ட பொருளை அளித்து அந்த மூர்த்தியை அரண்மனையில் கொண்டு அமர்த்தினான்.

அரசன் அன்றைய கடமைகளைச் செய்து படுக்கை அறைக்குச் சென்றான். திவ்யஉருவம் வாய்ந்த தேவி ஒருவள் தன் உடலிலிருந்து கிளம்பிச் செல்வதைக் கண்டான். திடுக்கிட்டு எழுந்து விழுந்து பணிந்து கேட்கிறான். 'தாயே நீ யார்!', 'நான் ராஜலட்சுமி' 'எங்கே கிளம்புகிறீர்' 'வேறு வேந்தனிடம் செல்கிறேன்' 'நான் செய்த குற்றம் என்ன!' ஸ்ரீதேவியை மதியாது மூதேவியை விலைக்கு வாங்கி வைத்திருக்கிறாய்'.

'அச்சிலையை அப்புறப்படுத்துகிறேன்'

'அது போதாது. சொந்தக்காரனிடம் அளித்த பொருளைத் திரும்பப் பெற வேண்டும்'.

'ஏழை உணவில்லாமல் தவிப்பானே'



'சரி போகிறேன் நான்' என்று ராஜ்ய லட்சுமி கிளம்பிவிட்டாள். மன்னன் மதிகலங்கி சிந்தைநொந்து தவித்தான். மற்றொருதேவியுங் கிளம்பக்கண்டு நீ யார் என்றான். நான் தனலட்சுமி எனக் கூறிக் கொண்டே அவளும் சென்றாள்.

இங்ஙனம் தான்யலட்சுமி, கஜலட்சுமி, வீரலட்சுமி முதலிய அஷ்ட லட்சுமிகளும் சென்றனர்.

அரசன் என்ன செய்வதென்று தெரியாமல் அயர்ந்து நின்றான். சகல சாமுத்ரிகா லட்சணங்களும் பொருந்திய திவ்விய புருஷன் ஒருவன் தோன்றி அவர்களைப்பின்பற்றினான்.

மன்னன் ''ஐயா தாங்கள் யார்?

'நான் தர்மதேவதை'

வணக்கம். ஏன் செல்கிறீர்! எங்குச் செல்கிறீர்!

'எனது சகோதரிகள்' சென்றவிடம் போகிறேன்.

'உம்மை விடமாட்டேன்' எனக் கத்தியைக் கரத்தில் எடுத்தான். தர்ம புருஷன் மன்னன் உடலிலே மறைந்தான். சென்ற லட்சுமிகள் திரும்பினர். ஒருவர் பின் ஒருவராக உள்ளே சென்றனர். மன்னன் மனம் மகிழ்ச்சி அடைந்தது.

இவ்வாறு கற்றோரும் மற்றோரும் பரிவுடன் கேட்கவும், படிக்கவும் ருசியானது புராணம். பற்பல நீதிகளைப் புகட்டுகிறது. நல்வாழ்வுக்கு நற்றுணையாகின்றது. பாபங்களைப் போக்குகிறது. மனத்தின் மலத்தை மாய்க்கிறது. புண்ணியத்தைத் தருகிறது. உண்மை இன்பத்தை ஊட்டுகிறது புராணம்.

## புராணம் எத்தனை? எவை?

பிராமம், பாத்மம், வைஷ்ணவம், சைவம் (வாயவீயம்) பாகவதம், பாவிஷ்யம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்நேயம், பிரும்ம வைவர்த்தம், லிங்கம், வாராஹம், வாமநம், கூர்மம், மாத்ஸ்யம், காருடம், ஸ்காந்தம், பிருமாண்டம் என்ற பதினெட்டும் மகாபுராணங்கள், இவைகளை இயற்றியவர் வியாஸர் ஒருவரே ஆவர். பதினெட்டு உபபுராணங்கள் இருக்கின்றன. அவற்றை இயற்றியவர் வெவ்வேறு ரிசிகள், சநத்குமாரம், நாரசிம்மம், ஸ்காந்தம், சிவதர்மம், நந்தி துர்வாஸம், நாரதம், காபிலம், மாநவம், ஔநசம், பிருமாண்டர், வாருணம், காளி, மாகேச்வரம், ஸாம்பம், ஸௌரம், பாராசர்யம், மாரீசம் இவை பதினெட்டும் உபபுராணங்களாம். உபபுராணம் என்ற பெயரால், பாகவதம், வசிஷ்டம், கௌர்மம், பார்க்கவம், முத்கலம், மகாபாகவதம், காளிகா முதலியவைகளும் அழைக்கப்படுகின்றன.

மகாபுராணத்திலும், உபபுராணத்திலும் பாகவதம் ஸ்காந்தம்' நாரதம், பிரும்மாண்டம் என்பவை காணப்படுகின்றன. ஆனால் தேவி பாகவதம், விஷ்ணு பாகவதம் பற்றியும் ஸ்காந்தம் பற்றியுமே பெரிய வாதம் இருக்கிறது. உபபுராணங்களில் பலவற்றிற்கு ஓலைச் சுவடிகள் கூட அகப்படுவதில்லை.

**புராணத்திலும் கலப்பா?** வியாஸர் எல்லா மறிந்தவர். வருங்காலத்தை நன்கு அறிவார். வருங்கால மக்களின் மனப்பான்மையையும் உணர்ந்தார். 'தனது கொள்கையை வேதம் போல் அமைத்து வேதத்தில் புகவிடுவர் சிலர்' என எண்ணினார். அங்ஙனம் நடவாதபடி இது இவ்வளவுதான் என வேதத்தைக் கணக்கிட்டு வைத்தார். அங்ஙனமே கவிசக்திவாய்ந்த சிலர் புராணங்களில் சிலவற்றைச் சேர்க்கக் கூடும். தனிப்புராணமே இயற்றக்கூடும் என அஞ்சி மகாபுராணம் பதினெட்டே, உப புராணமும் பதினெட்டே என வகுத்தார். பதினெட்டு என்ற எண் ஜயமளிக்கவல்லது. அதை மனதிற்கொண்டு பலவற்றைப் பதினெட்டாக அமைத்தனர் முன்னோர். 18 கிராமங்கள், 18 ஜாதி, 18 பாஷைகள். 18 வாத்தியங்கள், உடுத்தும் வஸ்திரம் 18 முழம். பாரதப்போர் 18 நாள், அங்கு அழிந்த சேனை 18 அக்ரோணி கீதை 18 அத்தியாயம். வேள்வியில் 18 பேர் ஈடுபடுவர். சூட்சும உடல் 18 பொருள்களால் அமைந்தது. 18 தர்மநூல்கள். வேத வித்தைகள். 18 ஆகமங்கள். சபரிமலை ஐயப்பன் படி 18 ஆதலால் 18 புராணங்களை இயற்றி ஒவ்வொன்றிலும், இத்துணை சுலோகம் எனக் கணக்கிட்டார். இவ்வளவு ஏற்பாடு செய்தும் புராணங்களில் முற்கூறிய குறைபாடுகள் இல்லாமல் இல்லை. சில புராணங்களில் குறிப்பிட்ட கணக்கு குறைகிறது. சில வற்றில் அதிகமிருக்கின்றது.

## புராணத்தில் உள்ளதென்ன?

புராணத்தில் இல்லாததென்ன என்பதே இதற்கேற்ற பதில், மறைகளிலுள்ள வேள்விகள் பிரம்மா முதல் கொசு வரையிலுள்ள பிராணிகளின் படைப்பு, பிருமாண்டத்தின் அமைப்பு, தேவஜாதிகளின் பிரிவு, நவகிரக மண்டலம், அவைகளின் சலனம், அதனாலுண்டாகும் நன்மை தீமைகள், சிருங்காரம் முதல் பிரும்ம வித்தை வரை உள்ள சாஸ்திரங்கள், நட்சத்திர மண்டலம், சுவர்க்க நரகம், பதிநான்கு உலகங்கள், அங்கே வாழ்பவர்களின் சரிதம், ஆலய அமைப்பு, தேவதைகளை பிரதிஷ்டை செய்தல், தேவர்களை ஆராதித்தல், விரதங்கள், நோன்பு, தேவதா மந்திரங்கள், துதிகள், ஸகஸ்ரநாமங்கள், அஷ்டோத்திரங்கள், சிற்பம், கோபுரம், பிராணிகளின் உடலமைப்பு, நாடிகள் எத்தனை? எத்தனை மூச்சு விடுகிறோம்? எத்தனை எலும்புகள் உடலில் இருக்கின்றன! எத்தனை உரோமம் உள? எப்படி ஜீவன் உடல் எடுக்கிறது? எப்படி இறக்கிறது? எங்கே செல்கிறது? மழை மேகம், சூரிய கிரணம், கால அளவு, ஸங்கீதம், நடனம், காவிய நாடக அமைப்புக் கதைகள், நற்சகுனம், தீய சகுனம், நற்கனவு, தீயகனவு, கனவை அகற்ற வழி, எப்பொழுது இறப்போம் என கண்டறிய வழி, நோய் உண்டாகும் வழி, அதை அகற்றும் வழி, யானை குதிரை பசு முதலியவைகளுக்குச் சிகிச்சை, செடி கொடிகளுக்கு வைத்தியம், பாம்பு எப்போது கருதரிக்கும்? எத்தனை முட்டையிடும்? கூடுவிட்டு கூடுபாயும் வகை, பாஷைகள், அவை உண்டானவகை, நீதி, ராஜநீதி, அரசியல், ஆயுதம், விமானம், ரதம், மகுடந்தரிக்கும் வகை, தர்மயுத்தம், ஜயம் பெற வழி, அதர்ம யுத்தம், மந்திரத்தால் பகைவனை அழிப்பது, சூன்யம் வைப்பது, எடுப்பது, ஆகாயத்தில் பறந்து செல்வது, பசி இல்லாமலிருக்க மருந்து, நதி, மலை, விளைபொருள், எங்கு வசிக்க வேண்டும்? யாருடன் கூடவேண்டும்? அன்றன்று நமக்காக என்ன செய்யவேண்டும்? பிறர்க்காக என்ன செய்ய வேண்டும்? குருபரம்பரை, மந்திரதீட்சை, குருலட்சணம், சீடன் கடமை, பெண்கள் லட்சணம், கடமை, ஆச்சர்யமானகதை, நீதிகள், நிதிகளைக் காணும் வழி, பொன் செய்யும் வழி, பக்தி, கருமம், ஞானம். யோகம், வேதாந்தம், ராமாயண பாரதங்களில் உள்ள கதைகளை நன்கு விளக்கும் உபகதைகள், நகைச்சுவை ததும்பும் நீதிக்கதைகள், கீதைகள் இவைபோன்ற மற்றும் பல எண்ணிறந்த விஷயங்கள் புராணங்களில் காணப்படுகின்றன.

**புராணச் சிறப்பு:** சிவபுராணம் 10. விஷ்ணுபுராணம் 4. பிரும்ம புராணம் 2. அக்நி 1. சூர்யபுராணம் 1. சில தனிப்பட்ட விஷயங்களை ஒருபுராணம் விரிவாகக் கூறினாலும் மற்ற விஷயங்களை மறப்பதில்லை. அரியும் அரனும் ஒன்றே என்ற சமரசத்தை வற்புறுத்தாத புராணமே இல்லை. குறுகிய மனப்பான்மையை அகற்றி விசாலமான புத்தியைத் தருகிறது புராணம். இராமாயணம் போல் ஒருவர் சரிதத்தை மாத்திரம் கூறாது பக்தர்கள் கேட்கும் சகலசமரசங்களையுங் கூறும். ஆதலால் சிலர் இதில் கதைத் தொடர்பில்லையே

என்பர். நடந்த கதைகளையும் சரித்திரம் போல் சில இடத்தில் கூறும். கற்பனைக் கதைகளைக் கூறி நீதியும் புகட்டும். வெவ்வேறு வகையாக ஒரே கதையை வர்ணிக்கும்; ஆதலால் ஒன்றுக்கொன்று முரண்படுவதுபோல் தோன்றும். ஆனால் அது ஒரு கல்பத்தில் நடந்தது. இது ஒரு கல்பத்தில் நடந்தது. ஆதலால் வேற்றுமையுடன்,ஒற்றுமையையும் காணலாம். சில புராணப் பெயர் ஒன்றாக இருக்கும். மார்க்கண்டேய புராணத்தில் அவர் சரிதம் கிடையாது. அவர் கூறியதால் அவர் பெயரால் அழைக்கப்படும். சில விடத்தில் கேட்டவர் பெயரே புராணப் பெயராக இருக்கும். கருடன் கேட்டதால் காருடம் என்று பெயர்.

ஜெர்மனி அமெரிக்கா போன்ற நாடுகள் இந்தியச் செல்வமான புராணங்களைவிலைக்கு வாங்கிச் சென்று பற்பல இயந்திரங்களையும் மருந்துகளை செய்தன. சில மேதாவிகள் தம் பாஷையில் எழுதி புராணங்களைப் போற்றினர். சுருங்கச் சொல்லின் புராணம் ஒரு கடல். புராணம் ஒரு நிதி. ஸாமர்த்தியமும் அதிர்ஷ்டமும் உள்ளவர் தமக்கு வேண்டியதைப் பெறலாம்.

**1. பிரம்மப் புராணம்:** பிரம்மாவினால் கூறப்பட்டதாலும் அவர் பெருமையைவர்ணிப்பதாலும் பிராம்மம் என பெயர் பெற்றது. 13 ஆயிரம் சுலோகமும் 243அத்தியாயமும்கொண்டது. கோத்திரங்களுக்கும் பிரவரங்களுக்கும் முதற்காரணமாக ஏழு முனிவர், 8 வசு, 11 உருத்திரர்கள், 12 ஆதித்தியர்கள், பிறப்பு பெயர், 14 மன்வந்தரம், மார்த்தாண்டன் என்ற சூரியனின் கதை, தன்வந்திரி அவதாரம் ஆயுர்வேதம், சிவ ஸகஸ்ரநாமம், சூர்ய அஷ்டோத்திரம், முருகன் பரஸ்திரீகளிடம் பார்வதியைப் பார்த்தது, அகல்யைப் பற்றி இந்திர கௌதமர் போட்டி, ஏன் கருடா சுகமா! என்பதற்குக் காரணமான கருடமணி நாத கதை, கங்கையின் பற்பல கட்டங்கள், கிருஷ்ணசரிதம், சுபத்திரையின் முற்பிறவி, கோணாதித்திய சேத்திரம், தீர்த்தயாத்திரை, உமாவி வாணவிசேஷம், சகல பாவங்களையும் அகற்றவல்ல பாரம்பர ஸ்தோத்திரம், கௌசிகன் பூர்வஜன்மம் முதலியவைகள் இங்குக் காணப்படும் விசேஷங்களாம்.

**2. பதும புராணம்:** பத்ம வடிவான உலக விஷயம் கூறப்படுவதால் பாத்மம் எனப்படும். ஆதி சிருஷ்டி, பூமி பாதாள, புஷ்கர, உத்தர என்ற கண்டங்களும் 628 அத்தியாயங்களும், 55000 சுலோகமும் உள்ள இதுவும் பிரும்ம புராணமென்றாலும் எல்லா விஷயங்களும் நிறைந்த சிறந்த புராணம். வாலி, சுக்ரிவர், பிரகலாதர் இவர்களது முற்பிறவி, விஷ்ணுவின் 1008 நாமம். கிருஷ்ணனது 108 நாமம் அரசு, துளசி மகிமை, 25 ஏகாதசிகளின் பெயர், பெருமை, கதைகளுடன், பகவத் கீதை 18 அத்யாயங்களுக்கும் தனித்தனி கதை, பாகவத மகிமை, வைசாக மகாத்மியம்,



ராமாச்வமேத விரிவு, சேத்திரங்கள், தீர்த்தங்கள், விரதங்கள், பெண்கடமை, துர்வாஸ சாபத்தால் தர்மம் பிறவி எடுத்தல், மோதகம் உண்டானவகை, கோவிரதம், பாகவத ஸப்தாகம், ஸந்ததி உண்டாகாத பாபம், ஸதாசாரம், சிவகீதா, ராமகீதா,பிரதட்சிண தத்துவம், கற்பூர தத்துவம், ஆஞ்சநேயரது சிவ பக்தி, வேதாந்தக் கதை முதலியவைகளைக் காணலாம். காளிதாஸன் 'பவபூதி' கிருஷ்ண மிசரர் தேசிகன்முதலியகவிகள் இப்புராணத்திலிருந்து தங்கள் நூல்களுக்கு ஆதாரம் கருத்து சில பதங்கள் சில பாதங்கள் ஆகியவைகளைக் கைக்கொண்டனர்.

**3. விஷ்ணு புராணம்:** இது பூர்வம், உத்திரம் என இரு பிரிவுகள் உள்ளது. விஷ்ணுவைப்பற்றியது. 23 ஆயிரம் சுலோகம் உளது. பூர்வபாகம் 36 அம்சமுள்ளது. இதற்கு 7 வ்யாக்யாநங்கள் இருக்கின்றன. பராபரமுனிவர் இதை மைத்ரேயருக்குக்கூறினார். வேதாந்தம் வைராக்யம் நிறைந்தது. ஸ்ரீசங்கர பகவத் பாதர் தனது பாஷ்யத்தில் இந்த புராண சுலோகங்களையே அதிகமாக எடுத்துக் காட்டுகிறார். துருவன், பிரகலாதன்,யாக்ஞவல்க்யர்,கங்கை ஜடபாதர் நிதாகர், வியாஸாவதாரம், வேதம் வகுத்தல், தன்வந்தரி, வரப்போகும் மன்னர், ராமர்கிருஷ்ணர் சரிதம், கவியின் தன்மை முதலியன பூர்வபாகத்திலும், க்ர்பவிபாகம் கீதம் நாட்டியம் காவியம் நாடகம் அர்த்தசாஸ்திரம் பிராகிருதபாஷை முதலியனவும், அம்ஸகீதையும் உத்தரபாகத்திலும் இருக்கின்றன. வில்ஸனது ஆங்கிலமொழி பெயர்ப்புமுண்டு இதற்கு.

**4. சைவம்:** சிவபுராணமிது, இதையே வாயுபுராணம் என்பர். வாயு கூறியதால் அப் பெயர் உண்டானது. சிவபுராணத்தில் சில மாறுதல்களுடன் வாயுபுராணம் என்ற பெயரால் அச்சிட்ட தனிநூலும் இருக்கிறது. 24 ஆயிரம் சுலோகம் 457 அத்யாயங்கொண்டது.

வித்யேச்வர, ருத்ர, சதருத்ர,' கோடிருத்ர, உமா கைலாஸ, வாயவீய என 7 ஸம்ஹிதை வடிவமாகவும் இரு கண்டங்களாகவும் அமைந்துள்ளது. லிங்கமும் சரீரமும் அமைந்தவர் சிவனே. திருபுரனை ஜயிக்க விஷ்ணு ருஷ்நாக வந்தது,விபூதி ருத்ராட்ச பஞ்சாட்சரீ, சிவராத்திரீ சிவநாமம்,காசி,ஐந்துமுகம், சிவனது 1008 நாமம்,கணேசன் ஸ்கந்தன் வீரபத்ரன்,பரகாய ப்ரவேசமந்திரம், சிவனே சிறந்தவர், பிரதோஷம், பிரும்மனுக்கு வேள்வியில்தான் பூஜை, நாரதமோட்சம்,சிவன்ஸதிக்கு விஷ்ணு ஸகஸ்ர நாமமும், அதற்கு பிரதியாக ராமமந்திரமும் கூறல். தாட்சாயணீ ராமனைப் பரீட்சித்துத் தன் உடலைவிட்டுப் பார்வதியானது. சரப அவதாரம்,உபமன்யு, கிருஷ்ணன் சிவபஞ்சாட்சரியால் ஸாம்பனைப் பெற்றது. 12 ஜோதிர் லிங்கம் முதலியவைகள் இதில் விவரிக்கப்படுகின்றன.

குமாரசம்பவம் என்ற காளிதாஸனது நூலில் இதிலுள்ள வர்ணனைகளும் பதங்களும் பாதங்களும் காணப்படுகின்றன.

**5. பாகவதம் ;** விஷ்ணுபுராணமிது. 12 ஸ்கந்தம், 335 அத்யாயம் 18 ஆயிரம் சுலோகமுள்ளது. பகவானது விராட ரூப உபாஸனை 23 அவதாரங்கள், துருவ ப்ரகலாத, ஜடபரத அஜாமிள கஜேந்திர, விரிவான கிருஷ்ணலீலை, உத்தவர் அக்ரூரர் மைத்ரேயர்மூலமாக வேதாந்தம்,கோபிகா கீதம்,ப்ரமரகீதம், கிருஷ்ணன்பாகவதத்தில் புகுந்து பூதஉடலை விடுதல் முதலியன பாகவத விசேஷங்கள். இதன் சுலோகங்கள் கடினமாக இருப்பதால் இது வியாசர் எழுதிய மகாபுராணம் இல்லை என்று வாதம் இடுவார் சிலர். வேதம் வகுத்து வேதாந்த சூத்திரம் இயற்றியவுடன் கூறியதால் வேதம் போல் கடினமானது இது என்று பதில் கூறுவர். இந்தியர் இருவர் இதை ஆங்கிலப்படுத்தினர்.

**அ. தேவி பாகவதம் :** விஷ்ணு பாகவதம் போல் 12 ஸ்கந்தமும் 318 அத்யாயமும் 18 ஆயிரம் சுலோகமும் உள்ளது இது. முற்றிலும் தேவியின் பெருமையையே வர்ணிக்கிறது.கதைகளும் மந்திரங்களும் தேவியின் அவதாரங்களும் பற்பல அசுரவதங்களும் கரும அநுஷ்டானங்களும்ஆசாரமும் காயத்திரியும் காயத்ரீயின் 1008 நாமாக்களும் தேவீ வசிக்கும்படியான மணித்வீபமும் இதில் வர்ணிக்கப்படுகின்றன. சாக்தமதத்திற்கு உயிர்நாடி போன்றது இது. இதைப் பலர் தமிழ்ப்படுத்தி இருக்கின்றனர். விக்ஞான ஆனந்தர் இதை ஆங்கிலப்படுத்தியிருக்கிறார்.

**6. பாவிஷ்யம் அல்லது பவிஷ்யோத்தரம்:** வரப்போகும் விஷயத்தைக் கூறுவதால் இப்பெயர் உண்டானது. 585 அத்யாயங்களும் 14,500 சுலோகமும், பிராம்ம மத்தியம, பிரதிஸர்க்க, உத்தர என்ற 4 பர்வாக்களும் உள்ளன. இந்தப் புராணம் இரண்டு இடங்களில் அச்சிடப்பட்டது. சில விஷயங்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருக்கின்றது. மற்ற புராணங்களைப் போல் அரிய பற்பல விஷயங்கள் இருப்பதுடன் நமது காலத்தில் நாம் கேட்பதை முன் கூட்டியே கூறி இருக்கின்றது. ஜைன, மகம்மதிய, கிருஸ்தவ மதம் பற்றியும் ஆங்கிலேயர் நம் நாட்டை ஆள்வது,நாமதேவர் கபீர் சங்கரர் மத்வர் ராமாநுஜர் வராக மிஹிரர், உதயசிம்ம ஜயசந்திரன் முதலியவர்களைப் பற்றி இது கூறுகிறது. மதாபிமானமும் நம்பிக்கையுள்ளோரும் வியாஸர் அறிவைப் போற்றுவர். தற்காலத்தவரில் சிலர் யாரோ எழுதியவர் பெயரால் வெளியிட்டனர் என்பர். இதில் விரதங்கள் அதிகம், பாஷை பற்றி ஷிந்தி ஆங்கிலச் சொற்கள் உதாரணமாகக் கூறப்பட்டது அழகானது. பாநீயம் பாணி ஷஷ்டி ஸிக்ஸ்டீ என்பன போன்ற பலவற்றைக் காணலாம்.

**7. நாரதீயம் :** நாரதர், ஸநகாதிகளுக்குரைத்தார். 207 அத்யாயமும் 25 ஆயிரம் சுலோகமும் உள்ளது. இரண்டு அர்த்தங்களாக அமைந்தது. விக்ஞாநாநந்தர் என்பவர் இதை ஆங்கிலப்படுத்தியுள்ளார். சேத்திரம் விரதம் சிரார்த்தம்,தேவதைகளின் மந்திரம்,18புராண சுருக்கம், குருமகிமை, ருக்மாங்கதன் சரிதம் நாரதர் கோட்டானிடம் ஸங்கீதம் பயின்றது, வேத பாதஸ்தவம், பலந்திகள், கரும அநுஷ்டானத்திற்கும் சிராத்தத்திற்கும் உரிய பல சுலோகங்கள் ஆகியவை இதில் இருக்கின்றன. பிருஹந்நாரதீயம் என்று ஒரு உபபுராணம் உண்டு.

**8. மார்க்கண்டேயம் :** மார்க்கண்டேயரால் நான்கு முனிகுமாரர்களுக்குக் கூறப்பட்டது. 134 அத்தியாயமும் 9000 சுலோகமும் உள்ளது. ஆங்கிலேயர் ஒருவர் இதை ஆங்கிலப்படுத்தி இருக்கிறார். தேவீ மகாத்மியம் அல்லது தேவீ ஸப்தசதீ என்ற சண்டீஹோமத்திற்குரிய மந்திரம் இதிலிருக்கிறது. நவரஸம் ததும்பும் மதாலஸா சரிதமும்,மதாலஸா கூறும் உபதேசமொழிகளும் மிக ஆச்சரியமானவை. இந்த நிமிஷம் முதல் பத்து ஆண்டுக்குள் எப்போது மரணம் உண்டாகும் எனக் கண்டறிய வழிகள் கூறப்பட்டிருக்கின்றன. யோகமும் ஒழுக்கமும் இதில் அதிக இடம் பெற்றன.

**9. ஆக்கிநேயம் :** அக்நி வசிஷ்டருக்குக் கூறினார். 383 அத்தியாயமும் 18 ஆயிரம் சுலோகமுமுள்ளது. இது ஒரு அருமையான புராணம். ஸகல விஷயங்களையும் இதில்காணலாம். ராமனைப் பற்றிய மிக அபூர்வ விஷயங்கள், ஆலயம் அமைத்தல், தேவதா விக்ரக பிரதிஷ்டை, மந்திரம், மோகன மந்திரம், மோகனமருந்து, எல்லா நோயையும் அகற்றும் அபாமார்ஜநஸ்துதி மருந்து,இறந்தவரை எழுப்பும் மந்திரம்,மருந்து தநுர்வேதம், ரத்னபரிட்சார தேகப்பயிற்சி, நாடகம், நடனம், கானம் யமகீதாதீட்ச, ஓமகுண்டவிதி, ரணவைத்தியம் சில்பம், ஸ்தபதிகளுக்கு வேண்டிய ப்ரமாணம், பாலாரிஷ்டசாந்தி,நாடீத்துவம்முதலியஅருமையான விஷயங்களை இதில் காணலாம். காவேரி



புராணம் இதில் இருப்பதாகத் தனியே தென் னாட்டில் அச்சிடப்பட்டு வழங்குகிறது. ஆனால் மூல நூலில் அது காணப்படவில்லை.

**10. பிரும்மவைவர்தம்** : இது சூரிய புராணம். பிரும்ம, பிரகிருதி கணேச, கிருஷ்ண ஜன்ம என்ற 4 காண்டங்களும் 275 அத்யாய மும் 18 ஆயிரம் சுலோகமும் கொண்டது. ஸாவர்ணீமநு நாரதருக்குரைத்தார். பிரும் மம் உலகாக மாறியதால் பிரும்மவைவர்த்தம் என்ற காரணப் பெயர் பெற்றது. பிரும்ம நைர்த்தமெனக் கூறுவது தவறு. கிருஷ்ணன் கணேசனானது, ஏகாநம்சா என்ற கிருஷ்ணன் ஸோதரியை துர்வாஸர் மணந்தது, லட்கமி விரும்பாத இடம், மான்மியம், துர்ஸ்வப்னம் அதன் பரிகாரம் இவைகளுடன், ராதையின் சரிதம் விஸ்தாரமாகக் கூறப்படுகிறது. ஜய தேவர் எழுதிய அஷ்டபதி அல்லது கீதகோவிந் தத்திற்கு இதே மூலநூல். ஸேன் என்பவர் இதை ஆங்கிலப்படுத்தியுள்ளார்.

**11. லிங்கம்** : இதன் பெயரே விஷ யத்தை விளக்குகிறது. கணேசன் என்பவரால் சிவதோசிணி என்ற விரிவுரை இதற்கு இயற் றப்பட்டுள்ளது. இரண்டு பாகமும் 163 அத்யாயமும் 11 ஆயிரம் சுலோகமும் உளது. சிவயோகம், சிவதீட்சை, சிவவில்வம், பஞ்சாட் சரி, சுவேதர், ததிசி, நந்தி, உபமன்யு முதலிய சிவபக்தர் சரிதம், விஷ்ணு கூறிய சிவஸகஸ்ர நாம விரிவான திரிபுரவத கதை, பசுபதிபாசம் ருத்ராட்ச வகை லட்சணம், குருசிஷ்ய லட் சணம் 18 புராண விளக்கம், பவர் முதலிய எட்டு சிவமூர்த்திகள், அவர்களது பத்தினி, சிவபூஜை முறை, நந்தி மணம் முதலிய அரிய விஷயங்கள் உள.

**12. வராகம்** : வராகமூர்த்தி பூதேவிக்கு உரைத்தது. 218 அத்தியாயமும் 24 ஆயிரம் சுலோகமும் உள்ளது. தசாவதாரம், அகஸ்திய கீதை, பித்ருகீதை, ருத்ர கீதை, நந்தி சரிதம், தீர்த்த மகிமை, 32 தேவ அபசாரங்கள் அரிகர அபேதம், மாயா, மரம் வைக்க வேண்டிய அவசியம், சிரார்த்தம், கீதா மகாத் மியம், திருபுரனை வஞ்சிக்க நாஸ்திக மதம் கூறியது முதலிய விஷயங்களை விரிவாக விளக்குகிறது இது.

**13. ஸ்காந்தம்** : ஸநத்குமார, ஸூத, சாங்கரீ, வைஷ்ணவீ, ப்ராஹ்மீ, ஸௌரீ என 6 ஸம்ஹிதா, 50 காண்டம் 81 ஆயிரம் சுலோகங் கொண்டது இது. ஸூத ஸம்ஹிதையும் சாங் கரீ ஸம்ஹிதையும் தவிர 4 அச்சேறவில்லை. ஓலைச்சுவடியும் பூர்ணமாகக் கிடைக்கவில்லை. ஸூத ஸம்ஹிதை சிவசக்தி பூஜை, முக்தி, பஞ்சாட்சரீ, பிர்ம்மகீதை, ஸூதகீதை முதலிய வைகளை விளக்குகிறது. இதை 18 முறை படித்து ஸ்ரீசங்கரர் வேதாந்த பாஷியம் இயற்றி னார். சங்கர ஸம்ஹிதையில் தட்சயக்ஞம், அசுரயுத்தம், ஸ்கந்தாவதாரம், லீலை முதலி யன காணப்படுகின்றன. கச்சியப்ப சிவாச்சாரி யார் இதை மாத்திரம் தமிழில் செய்யுளாக இயற்றினார். திருப்பனந்தாள் மடம் அதை அச்சிட்டதைக் காணலாம்.

**அ. ஸ்காந்தம்** : மாகேஸ்வர, வைஷ்ணவ பிராம்ம, காசி, நாகர, ப்ரபாஸ என்று ஏழு கண்டங்களும் 1694 அத்தியாயங்களும் ஒன்றே கால் லட்சம் சுலோகமுள்ள மகா ஸ்காந்தம் எனப்படுகிறது. 18 புராணங்களில் இதுவே மிக மிகப் பெரியது. இதுதான் மகாபுராணத் தைச் சார்ந்ததென்று இதன் முகவுரையில் பிரசுரதாரர் வாதாடுகிறார். இதில் எண்ணி றந்த அபூர்வ கதைகளும் தர்மங்களும் உள. இதிலுள்ள 100 அத்தியாயங்கொண்ட காசி காண்டம் தமிழில் செய்யுள் வடிவமாக இருக் கிறது. பிரம்ம கண்டத்தில் உள்ள பிரம் மோத்தர கண்டத்தையும் தமிழில் காணலாம். ராமாயண பாரதங்களில் காணாத நுட்பமான கதைகள் இதனில் இருக்கின்றன. இது ஒன் றைப் படித்தால் எல்லாம் படித்தது போலா கும். கடோத்கசனுக்கு கிருஷ்ணன் காமகடங் கடையை மணம் செய்விப்பதும், அவர்கள் புத்ர னான இராவணன் பீமனைக் கொல்வதும் மிக ரசமான கதை.

**14. வாமநம்** : 95 அத்யாயமும், 2400 சுலோகமுமே இதில் இருக்கின்றன, புலஸ்த்யர் நாரதருக்கு வாமநாவதாரத்தைக் கூறுகிறார். உருவில் சிறியதாயினும் விஷயம் நிறைந்தது. தீட்டில் ரதி காமனுடன் சேர்ந்ததால் பதியை இழந்தாள். பகவான் எந்த எந்த இடங்களில் எந்தெந்த பெயருடன் இருக்கிறார். முராஸுர துந்து முதலிய அசுரவதம், ராசி சக்ரம், ஆருத்ரா நட்சத்திரத்திற்கும் சிவனுக்குள்ள சம்பந்தம் முதலியன வர்ணிக்கப்படுகின்றன. வாமனனாக இருந்து 3 அடி மண் கேட்டு திரி விக்ரமனாகத் தோன்றி அளந்ததால் ‘கள்ளனை



நம்பினாலும் குள்ளனை நம்பாதே' எனப் பழமொழி தோன்றிற்று.

**15. கூர்ம புராணம் :** கூர்மரூபியான பகவான் இந்திர த்யும்நன் முதலியவர்க்குக் கூறியதால் இப்பெயர் பெற்றது. இது பூர்ணமாக இல்லை. 99 அத்யாயமும் 5246 சுலோகமுமே இருக்கின்றது. ஸதி, பார்வதி, கலியில் சிவனே ஆராதிக்கத்தக்கவன். 28 வியாஸர், ஈச்வர கீதை, வியாஸ கீதை, லிங்க உற்பத்தி, மாயா சீதையை ராவணன் கொண்டுபோனது, அந்தகாசுரவதம், வேதப்பிரிவு, எந்த தேவதை எந்த பலனைத் தருவார். 18 புராண வரலாறு விதவையாகாமலிருக்கும் வழி முதலிய விஷயங்களை இங்குக் காணலாம். சைவ வைணவ வாதத்தில் விஷ்ணு சிறந்தவர் எனக் காட்ட கூர்மபுராணத்தை பிரமாணமாகக் கூறினார் ஒருவர். உள்ளே பார்த்தால் முழுச் சைவமது. கூர்மத்தை நம்பிக் குடிகெட்டுப் போனேன் என்றாரவர்.

**16. மாத்ஸ்யம் :** மத்ஸ்யமூர்த்தி மநுவிற்குக் கூறினார். 292 அத்யாயமும் 1400 சுலோகமும் உள்ளது. கௌரியின் 108 நாமம், கோத்திரம், பிரவரம், பித்ருக்களின் பிரிவு, ராஜநீதி, விஷப்பரீட்சை, தானம் சிராத்தம், அதற்குரிய மந்திரங்கள், பிரகஸ்பதி அரக்கரை ஏமாற்ற நாஸ்திகம் கூறல், இருப்பவன் உண்டால் இறந்தவனிடம் சேருவதெப்படி? தர்மம் என்ற சொல்லிற்கு என்ன பொருள், அமாவாஸ்யை ஏன் பித்ருக்களுக்கு ஏற்றநாள், தாரகன், குழந்தை தோன்றிய ஏழாவது நாள் தன்னைக் கொல்லலாமென வரங் கேட்டது, தானம் வாங்குபவர் எப்படி அந்த பாபத்தை அகற்றுவது, துலாபுருஷதானம் முதலியவைகள் வர்ணிக்கப்படுகின்றன. இதில் உள்ள சுலோகங்களேசிரார்த்தத்தில்கூறப்படுகின்றன. இப்புராணத்திற்கு ஆங்கில மொழி பெயர்ப்புகள் உள.

**17. காருடம் ;** பகவான் கருடனுக்குக் கூறினார்.

ஆசார பிரேத பிர்ம்ம என்ற 3 காண்டம் 318 அத்தியாயம் 19 ஆயிரம் சுலோகம். இடையிலுள்ள பிரேதகாண்டத்தை இறந்த வீட்டில் படிப்பார்கள். அதில் ஜீவன் பூத உடலை விட்டு 800 யோசனை தூரத்தில் உள்ள ஸம்யமிநீ என்ற யமலோகம் செல்வது, இடையே 16 இடங்களில் தங்குவது, அங்கு நடக்கும் விசாரணை, சிட்சை, பலவகை நரகங்கள், புத்ரர் கருமம் கூறப்படுகின்றன. மற்ற காண்டங்களில் விஷத்தின் தன்மை, அதை அகற்ற மந்திரம், மருந்து, விஷ்ணு 1008 நாமம், சுதர்சன மந்திரம், 8 அத்தியாயம் நீதிசாஸ்திரம், 58 அத்தியாயம்வைத்தியம்நாடிபரீட்சை, வழுக்கை தலையில் 7 நாளில் ரோமம் உண்டாகும் வகை பிராம்மதைலம், 9 ரத்னம், கீதாசாரம் முதலியவைகளை இதில் காணலாம். படிக்கத் தெவிட்டாத புராணமிது. இதற்கு ஆங்கில மொழி பெயர்ப்புமுண்டு.

**18. பிரும்மாண்டம் :** பிரக்ரியா, அநுஷங்க, உபோத்காத, உபசம்ஹார, என்ற 4 பாதம் 146 அத்தியாயம் 12 ஆயிரம் சுலோகம் உள்ளது. பிர்ம்மா பிர்ம்மாண்டத்தைப் பற்றி கூறினார். சிவன் வேட உருவுடன் ராமனோடு போர் செய்து சந்தோமடைந்து ராவண ஜய வரம் தந்தது. 40 அத்யாயம் பரசுராம சரிதம், 34 அத்தியாயம் யாக்ஞவல்க்ய சரிதம், கிருஷ்ண 108 நாமம், 88 ஆயிரம் முனிவர் தட்சண மார்க்கத்திலும் 80 ஆயிரம் ஞானிகள் உத்தரமார்க்கத்திலுமிருந்து பூமியைக் காத்தல், சேத்திர மஹிமை, 32 அத்தியாயம் ஸ்ரீ லலிதா தேவி பண்டாகரனைக் கொன்று உலகைக் காப்பது போன்ற விசேஷங்களை இதில் காணலாம். இதில் 4 பாதமும் 4 வேத சமாகும்.

அறம் வாழி, புராணம்வாழி, அறம் வளர்ப்போர் வாழி.

நன்றி: தருமபுர ஆதீனம் வெளியிட்டுள்ள 'சமயபோதச் சொற்பொழிவுகள்' நூல்.

# கடவுள் யார்?

திருமிகு ச. சாவர்க்கர், ஐ.ஏ.எஸ்.
ஆணையாளர்,
இந்துசமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.

ஆணுமில்லை பெண்ணுமில்லை கடவுள் என்பார்
ஆணேதான் பெண்ணேதான் கடவுள் என்பார்
மாதொரு பாகன்தான் கடவுள் என்பார்
மாதினை உள்ளடக்கியவனே கடவுள் என்பார். 1

சூரியனில் வெளிப்படும் சூடுபோல் இருக்கின்றார்
சூக்குமமான மாபெரும் சக்தியாய் இருக்கின்றார்
அடியார்களும் அறியமுடியாது அருபமாக இருக்கின்றார்
அடியும்முடியும் காட்டாமல் சிவமாக இருக்கின்றார். 2

அன்றுமுதல் இன்றுவரை தர்க்கப்பொருளாய் இருக்கின்றார்
ஆனாலும் அடியவர்க்குப் போகப்பொருளாய் இருக்கின்றார்
நாடியது கிட்டாதாயினும் நல்லதையே செய்கின்றார்
தேடிக் கண்டவர்க்குத் தெள்ளமுதாய் இனிக்கின்றார். 3

பிள்ளைகள் பெற்றெடுக்காமலே தாயாக இருக்கின்றார்
பிள்ளைகள் பெற்றெடுத்தோர்க்கும் தாயாக ஆகின்றார்
பிள்ளைகள் வேண்டுவோர்க்கும் வரம் அளிக்கின்றார்
பிறவிகள் வேண்டாதோர்க்கும் வரம் கொடுக்கின்றார். 4

மட்டமான செயலுக்கும் மௌனம் காட்டிடுவார்
சட்டத்தை மாற்றாமல் சமயம் பார்த்திருப்பார்
திட்டமாக தீவினைகளைப் பதிவு செய்திடுவார்
கட்டம் வந்தபோதே தண்டனைகள் தந்திடுவார். 5

உயிர்களின் தரத்திற்கேற்ப உடல்களைக் கொடுத்திடுவார்
உலகத்தைத் தோற்றுவித்துக் காரணமாய் இருந்திடுவார்
கரணத்தை உடல்களுக்குச் கச்சிதமாய் தந்திடுவார்
மரணத்தை இல்லாமல் மாய்த்திடவே உதவிடுவார். 6


பிறவாமல் பிறக்கவைக்கும் பெரும்பொருளாய் இருக்கின்றார்
பிறவித்துன்பம் பறக்கவைக்கும் அரும்பொருளாய் இருக்கின்றார்
அழுக்காறுதனை அகற்றவைக்கும் நிறைபொருளாய் இருக்கின்றார்
ஆசைதனை மறக்கவைக்கும் மறைபொருளாய் இருக்கின்றார். 7

குழந்தை உள்ளம் கொண்டவராக விளங்கிடுவார்
குழைந்த உள்ளமும் உண்டென்று காட்டுவார்
குறைகளைச் சொல்லச் சொல்லக் கேட்டிடுவார்
குற்றம் பொறுக்கக் கேட்டால் பொறுத்திடுவார். 8

கேட்காமலே பிறவியைக் கொடுத்து வருவார்
கேட்டால் உயிர்களின்பால் கருணை என்பார்
போகத்தைக் கொடுத்துத் திளைத்திடச் செய்திடுவார்
போதுமென்று சொல்வதற்குத் தயங்கிடச் செய்திடுவார். 9

பேரின்பம் பெறுவதற்கே பிறவி என்றிடுவார்
பிறவி நீங்கிடவே பேரின்பம் தந்திடுவார்
துறவிக்கே பிறவி நீங்கிடச் செய்திடுவார்
உறவுகள் அறுந்திடவே ஒன்றாகிடச் செய்திடுவார். 10

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை. சென்னை-600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ. பிஎச்.டி.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம். அரசினர் தோட்டம், சென்னை-600002.



மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் தைப்பூசத் தெப்ப விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு **நடேசன் பால்ராஜ்** அவர்கள், ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர், ஐ.ஏ.எஸ். அவர்கள், சென்னை மாவட்ட திருக்கோயில் நிர்வாக வாரியத் தலைவர் திருமிகு கராத்தே வெ. பாலசுப்பிர மணியம், எம்.எல்.ஏ. அவர்கள், அறங்காவலர் குழுத் தலைவர் திருமிகு டாக்டர் நல்லி குப்புசாமி அவர்கள் மற்றும் ஆலய நிர்வாக அதிகாரியும் துணை ஆணையாள ருமான திரு ப. ராஜா, பி.எஸ்சி.பி.எல். ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.




23-1-95 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தலைமையில் திருக்கோயில் நிர்வாக வாரியக் கூட்டம் நடைபெற்றது. மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு நடேசன் பால்ராஜ் அவர்கள், அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர், ஐ.ஏ.எஸ். மற்றும் திருக்கோயில் நிர்வாக வாரிய உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்